


# தமிழ்நாடு இ பேப்பர்.காம்

www. tamilnaduepaper.com




CHENNAI Volume- 3 Issue:136 01-12-2025 திங்கட்கிழமை Free E- Paper ● சென்னை ● மதுரை ● கோவை ● திருச்சி

## இன்றைய பஞ்சாங்கம்

01.12.2025 கார்த்திகை 15
திங்கட்கிழமை

சூரிய உதயம் 6.15

திதி:
இன்று பிற்பகல் 2.38 வரை ஏகாதசி பின்பு துவாதசி.

நட்சத்திரம்:
இன்று இரவு 7.52 வரை ரேவதி பின்பு அசுவினி.

யோகம் :
இன்று அதிகாலை 1.03 வரை சித்தி பின்பு இரவு 10.15 வரை வ்யாதீபாதம் பின்பு வரீயான்.

கரணம் :
இன்று அதிகாலை 3.32 வரை வணிசை பின்பு பிற்பகல் 2.36 வரை பத்திரை பின்பு பவம்.

அமிர்தாதி யோகம் :
இன்று காலை 6.14 அமிர்த யோகம் பின்பு சித்த யோகம்.

சந்திராஷ்டமம்
இன்று இரவு 7.52 வரை பூரம் பின்பு உத்திரம்.

நல்ல நேரம்
காலை 6.15 – 7.15
மாலை 4.45 – 5.45

இராகு காலம்
காலை 7.30 – 9.00.

எமகண்டம்
காலை 10.30 – 12.00.

குளிகை
பிற்பகல் 1.30 – 3.00

ஜோதிட நிபுணர்:
இராஜபாளையம்
இராமமூர்த்தி
செல்: 8189908040

# ‘தமிழ்’ இந்தியாவின் பெருமிதம்: பிரதமர் மோடி புகழாரம்



புதுடெல்லி, டிச.1:
தமிழ் கலாச்சாரம் உயர்வானது, தமிழ் மொழி உயர்வானது, தமிழ் இந்தியாவின் பெருமிதம் என மன் கி பாத் நிகழ்ச்சியில் பிரதமர் மோடி தெரிவித்தார்.

ஒவ்வொரு மாதமும் கடைசி ஞாயிற்றுக்கிழமை மனதின் குரல் நிகழ்ச்சி (மன் கி பாத்) மூலம் பிரதமர் மோடி நாட்டு மக்களிடம் உரையாற்றி வருகிறார். அந்த வகையில் 128-வது நிகழ்ச்சி இன்று ஒலிபரப்பானது.

அதில் பிரதமர் மோடி பேசியதாவது:-

நவம்பர் 26ம் தேதி அரசியலமைப்பு சட்ட தினத்தன்று பாராளுமன்ற மைய அரங்கில் சிறப்பு நிகழ்ச்சி ஒன்று ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. தேசிய பாடலான 'வந்தே மாதரம்' இயற்றப்பட்டு 150வது ஆண்டு நிறைவையொட்டி நாடு முழுவதிலும் நிகழ்ச்சிகள் மிக சிறப்பாக தொடங்கப்பட்டன. நவம்பர் மாதம் 25ம் தேதி அயோத்தியின் ராமர் கோவிலில் காவிக்கொடி ஏற்றப்பட்டது. இந்தியக் கடற்படையின் நீர்மூழ்கி எதிர்ப்பு கப்பலான மாஹே மும்பையில் நாட்டிற்கு அர்ப்பணிக்கப்பட்டது. இவ்வாறு நவம்பர் மாதம் பல உத்வேகங்களை நமக்குக் கொண்டு வந்திருக்கிறது.

காசி தமிழ் சங்கமம் டிசம்பர் 2ந்தேதி காசி நமோ படித்துறையில் தொடங்குகிறது. இந்தாண்டுக்கான கருப்பொருளாக, ‘தமிழ் கற்கலாம்’ என்ற மிகவும் சுவாரஸ்யமான தலைப்பு அறிவிக்கப்பட்டுள்ளது. தமிழகத்தில் இருந்து வரும் நமது சகோதர, சகோதரிகளை மகிழ்வோடு வரவேற்கிறேன். இந்த நிகழ்ச்சி பல தரப்பினரையும் சந்திக்க ஒரு வாய்ப்பாக அமையும். இந்நாளை எதிர்நோக்கி காத்திருக்கிறேன். காசி தமிழ் சங்கமம் என்பது, தமிழ் மொழியை விரும்பும் அனைவருக்கும் மிகவும் முக்கியமான ஒன்றாக உள்ளது. தமிழ் கலாச்சாரம் உயர்வானது. தமிழ் மொழி சிறப்பானது. தமிழ் மொழி இந்தியாவின் பெருமிதம்.

### தேன் உற்பத்தி அதிகரிப்பு


தேன் உற்பத்தியில் இந்தியா புதிய சாதனைகளை படைத்து வருகிறது. கடந்த 11 ஆண்டுகளில் நாட்டில் தேன் உற்பத்தி இரு மடங்காக அதிகரித்துள்ளது. கடந்த சில ஆண்டுகளில் தேன் ஏற்றுமதியும் 3 மடங்கிற்கும் மேலாக உயர்ந்துள்ளது. தேன் உற்பத்தி இயக்க திட்டத்தின் கீழ், காதி கிராமோத்யாக் சார்பில் 2.25 லட்சத்திற்கும் மேற்பட்ட தேனீ பெட்டிகள் மக்களுக்கு வினியோகம் செய்யப்பட்டுள்ளன. இது ஆயிரக்கணக்கான மக்களுக்கு புதிய வேலை வாய்ப்புகளை வழங்கியுள்ளது. சில நாட்களுக்கு முன்பு, ஐதராபாத்தில் உலகின் மிகப் பெரிய இன்ஜின் எம்.ஆர்.ஓ வசதியைத் தொடக்கி வைத்தேன்.

### தானிய உற்பத்தி அதிகரிப்பு

357 மில்லியன் டன் உணவு தானிய உற்பத்தியில் இந்தியா ஒரு வரலாற்று சாதனை படைத்துள்ளது. விவசாய துறையில் இது பெரிய மைல்கல். 10 ஆண்டுகளுக்கு முன்பு இருந்ததை விட இந்தியாவின் உணவு தானிய உற்பத்தி 100 மில்லியன் டன் அதிகரித்துள்ளது. விளையாட்டு துறையில், உலகில் இந்தியா மற்றொரு குறிப்பிடத்தக்க மைல்கல்லை எட்டவுள்ளது. காமன்வெல்த் விளையாட்டு போட்டிகளை இந்தியா நடத்தும் என்று அறிவிக்கப்பட்டது. இந்த சாதனைகள் தேசத்திற்கும், நாட்டு மக்களுக்கும் சொந்தமானது.

இவ்வாறு பிரதமர் மோடி பேசினார்.

## டிட்வா புயலால் 3 பேர் பலி; 57 ஆயிரம் ஹெக்டேர் விளை நிலங்கள் பாதிப்பு: தமிழக அரசு தகவல்



சென்னை, டிச.1:
டிட்வா புயல் காரணமாக தமிழகத்தில் இதுவரை 3 பேர் பலியானதாகவும், 57 ஆயிரம் ஹெக்டேர் விவசாய நிலங்கள் பாதிக்கப்பட்டுள்ளதாகவும் தமிழக அரசு தெரிவித்துள்ளது.

தமிழக வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை அமைச்சர் கேகேஎஸ்எஸ்ஆர் ராமசந்திரன் சென்னையில் இன்று (நவ.30) செய்தியாளர்களை சந்தித்தார்.

அப்போது அவர் கூறியதாவது: தமிழகத்தில் டிட்வா புயல் மழை தொடர்பான சம்பவங்களில் 3 பேர் உயிரிழந்தனர். இருவர் தூத்துக்குடி, தஞ்சாவூர் மாவட்டங்களில் சுவர் இடிந்து விழுந்து இறந்தனர். மயிலாடுதுறையில் 20 வயது இளைஞர் ஒருவர் மின்சாரம் பாய்ந்து உயிரிழந்தார். 149 கால்நடைகள் உயிரிழந்தன.

57 ஆயிரம் ஹெக்டேர் அளவிலான விவசாய நிலங்கள் பாதிக்கப்பட்டுள்ளன. இதில் நாகப்பட்டினத்தில் மட்டும் 24 ஆயிரம் ஹெக்டேர் விளைநிலங்களும், தஞ்சையில் 15 ஆயிரம் ஹெக்டேர் விளை நிலங்களும், மயிலாடுதுறையில் 8000 ஹெக்டேர் விளைநிலங்களும் வெள்ளத்தில் மூழ்கி பாதிக்கப்பட்டுள்ளன. இதுதவிர டெல்டா மாவட்டங்களில் 234 குடிசைகள் சேதமடைந்துள்ளன.

38 நிவாரண முகாம்கள்: தமிழகத்தில் மழை பாதிப்பு அதிகமுள்ள 9 மாவட்டங்களில் 38 நிவாரண முகாம்கள் ஏற்படுத்தி அதில் 2300 பேரை தங்க வைத்துள்ளோம்.

புயலின் அடுத்தக்கட்ட தாக்கம் குறித்து இந்திய வானிலை ஆய்வு மையம் இன்று மதியம் புதிய அறிவிப்பு வெளியிடும். அதன் அடிப்படையில் மாவட்ட நிர்வாகங்கள் மேலும் தேவையான நடவடிக்கைகளை எடுக்கும். பொதுமக்கள் வதந்திகளை நம்பாமல் அரசு சார்பாக வெளியிடப்படும் அறிவிப்புகளை மட்டும் பின்பற்ற வேண்டும்.

## பாராளுமன்றம் இன்று கூடுகிறது



புதுடெல்லி, டிச.1:
பரபரப்பான அரசியல் சூழலில் பாராளுமன்ற குளிர்கால கூட்டத்தொடர் இன்று (1-ந்தேதி) தொடங்குகிறது. வருகிற 19-ந் தேதி வரை இந்த கூட்டம் நடைபெறுகிறது. விடுமுறை நாட்கள் நீங்கலாக 15 அமர்வுகள் இந்த கூட்டத்தொடரில் இடம்பெற உள்ளன.

வந்தே மாதரம் பாடலின் வரலாறு, சுதந்திர இயக்கத்தில் அதன் பங்கு குறித்து இளைஞர்களுக்கு நினைவூட்டுவதற்காக விவாதம் நடைபெறும் என்று அதிகாரிகள் தெரிவித்தனர். பாராளுமன்ற கூட்டத்தில் எந்த பிரச்சனை குறித்தும் விவாதிக்க தயார் என்று மத்திய அரசு தெரிவித்துள்ளது. ஒருமித்த கருத்துடன் அவையை சுமூகமாக நடத்துவதற்கு வேண்டுகோள் விடுக்க அனைத்து கட்சி கூட்டத்தை பாராளுமன்ற விவகாரத்துறை மந்திரி கிரண் ரிஜிஜு இன்று கூட்டியுள்ளார்.

## “சிந்தனை மாற்றமே தேவை” ஆளுநர் மாளிகை பெயர் மாற்றம் குறித்து முதல்வர் ஸ்டாலின் கருத்து!



சென்னை, டிச.1:
“பெயர் மாற்றத்தைவிட சிந்தனை மாற்றமே தேவை” என ஆளுநர் மாளிகைகள் பெயர் மாற்றம் குறித்து முதல்வர் ஸ்டாலின் கருத்து தெரிவித்துள்ளார்.

மாநிலங்களில் உள்ள ராஜ் பவன்கள் இனி லோக் பவன் (மக்கள் பவன்) என்று அழைக்கப்படும் என மத்திய அரசு இன்று அறிவித்துள்ளது. அதாவது, 2024 ஆளுநர்கள் மாநாட்டில் முன்வைக்கப்பட்ட கோரிக்கையை ஏற்று இந்த அறிவிப்பை மத்திய அரசு வெளியிட்டிருப்பதாக கூறப்படுகிறது.

இந்நிலையில், இது குறித்து முதல்வர் ஸ்டாலின் தனது எக்ஸ் பக்கத்தில் பகிர்ந்த பதிவில், “சட்டமன்றம் = மக்கள் மன்றம்! சட்டமன்றத்தை மதிக்காதவர்கள், ‘மக்கள் மாளிகை’ எனப் பெயர் மாற்றுவது கண் துடைப்பா? மக்களாட்சித் தத்துவத்தின் கண்களில் மண்ணைத்தூவுவதற்கா?

மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட அரசுகளையும், மக்களின் விருப்பத்தை நிறைவேற்ற இறையாண்மையுள்ள சட்டமன்றத்தையும்மதிப்பதுதான் இப்போதைய தேவை. சிந்தனையிலும் செயலிலும் மாற்றம் இல்லையெனில், இதுவும் தேவையற்றதே” இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார்.

## திருவள்ளூர் மாவட்டத்தில் இன்று கனமழை



சென்னை, டிச.1:
திருவள்ளூர் மாவட்டத்தில் ஓரிரு இடங்களில் கனமழை பெய்ய வாய்ப்புள்ளது. டிசம்பர் 3 முதல் 6-ம் தேதி வரை தமிழகத்தில் ஒருசில இடங்களில் லேசானது முதல் மிதமான மழை பெய்யக்கூடும்.

சென்னை மற்றும் புறநகர் பகுதிகளில் இன்று வானம் ஓரளவு மேகமூட்டத்துடன் காணப்படும். நகரின் ஒருசில பகுதிகளில் இடி, மின்னலுடன் கூடிய லேசான அல்லது மிதமான மழை பெய்ய வாய்ப்புள்ளது.

வட தமிழகம் புதுச்சேரி கடலோரப் பகுதிகளில். தென் தமிழக கடலோரப்பகுதிகள், குமரிக்கடல், மன்னார் வளைகுடா பகுதிகள் மற்றும் தென்மேற்கு வங்கக்கடல் பகுதிகளில் நாளை சூறாவளிக்காற்று அதிகபட்சமாக 65 கிமீ வேகத்தில் வீசக்கூடும். எனவே இப்பகுதிகளுக்கு மீனவர்கள் செல்ல வேண்டாம்.

தமிழகம், புதுச்சேரியில் இன்று காலை 8.30 மணியுடன் நிறைவடைந்த 24 மணி நேரத்தில் பதிவான மழை அளவுகளின்படி அதிகபட்சமாக காரைக்காலில் 19 செமீ, மயிலாடுதுறை மாவட்டம் செம்பனார்கோவிலில் 17 செமீ, நாகப்பட்டினம், மயிலாடுதுறையில் தலா 15 செமீ, திருவாரூர், மயிலாடுதுறை மாவட்டம் சீர்காழியில் தலா 14 செமீ, ராமநாதபுரம் மாவட்டம் தங்கச்சிமடம், நாகப்பட்டினம் மாவட்டம் திருப்பூண்டி, தொண்டி, தஞ்சாவூர் மாவட்டம் குருங்குளத்தில் 13 செமீ, கடலூர் மாவட்டம் சேத்தியாத்தோப்பு, திருவாரூர் மாவட்டம் நன்னிலம், நாகப்பட்டினம் மாவட்டம் கோடியக்கரை, வேளாங்கண்ணி, வேதாரண்யத்தில் தலா 12 செமீ மழை பதிவாகியுள்ளது. இவ்வாறு செய்திக்குறிப்பில் கூறப்பட்டுள்ளது.

## 2 அரசுப் பேருந்துகள் நேருக்கு நேர் மோதி விபத்து: 9 பெண்கள் உட்பட 11 பேர் உயிரிழப்பு



திருப்பத்தூர், டிச.1:
சிவகங்கை மாவட்டம் திருப்பத்தூர் அருகே 2 அரசுப் பேருந்துகள் நேருக்கு நேர் மோதிய விபத்தில் 9 பெண்கள் உட்பட 11 பேர் உயிரிழந்தனர்.

சிவகங்கை மாவட்டம், காரைக்குடியிலிருந்து திண்டுக்கல்லுக்கு அரசுப் பேருந்து சென்றது. அதேசமயத்தில் திருப்பூரிலிருந்து காரைக்குடிக்கு மற்றொரு அரசுப் பேருந்து வந்தது. இரு பேருந்துகளும் சிவகங்கை மாவட்டம், திருப்பத்தூர் அருகே வைரவன்பட்டி சமத்துவபுரம் பகுதியில் இன்று மாலை 4.20 மணிக்கு சென்றபோது நேருக்கு, நேர் மோதின. இதில் சம்பவ இடத்திலேயே 9 பெண்கள் மற்றும் ஓட்டுநர் உட்பட 11 பேர் உயிரிழந்தனர். 40-க்கும் மேற்பட்டோர் படுகாயமடைந்தனர். அவர்களை அவ்வழியாக வந்தோர் மீட்டு 108 ஆம்புலன்ஸ்கள் மூலம் திருப்பத்தூர், காரைக்குடி அரசு மருத்துவமனைகளில் அனுமதித்தனர். சம்பவ இடத்தை மாவட்ட ஆட்சியர் கா.பொற்கொடி பார்வையிட்டார்.

திருப்பத்தூர் அரசு மருத்துவமனையில் காயமடைந்தோருக்கு ஆறுதல் கூறினார். இதுகுறித்து நாச்சியாபுரம் போலீஸார் விசாரிக்கின்றனர். மேலும் இந்த கோர விபத்தால் போக்குவரத்து நெரிசல் ஏற்பட்டது. இதையடுத்து வாகனங்கள் மாற்று வழித்தடத்தில் திருப்பிவிடப்பட்டன.

முதல்கட்ட விசாரணையில், திண்டுக்கல் சென்ற அரசுப் பேருந்து அதிவேகமாக சென்றதால், இந்த விபத்து ஏற்பட்டதாக கூறப்படுகிறது.






# திருக்குறள் குறள்-456

**மனந்தூயார்க் கெச்சநன் றாகும் இனந்தூயார்க்
கில்லைநன் றாகா வினை**



மனம் தூய்மையாகப் பெற்றவர்க்கு , அவர்க்குப் பின் எஞ்சி நிற்கும் புகழ் முதலியவை நன்மையாகும், இனம் தூய்மையாக உள்ளவர்க்கு நன்மையாகாத செயல் இல்லை.

## சிந்திக்க ஒரு நொடி



பணத்தால் வாங்கக்கூடிய
விசயங்களுக்கு
மட்டும் பணத்தை
செலவிடுங்கள்...

பணத்தால் வாங்க
முடியாத விஷயங்களுக்கு
நேரத்தை செலவிடுங்கள்


**உஷா முத்துராமன்**

## திருவிழாவின் 7ம் நாள் உற்சவசமான மகா தேரோட்டம்




திருவண்ணாமலை அண்ணாமலையார் கோயிலில் நடைபெறும் பிரசித்தி பெற்ற விழாவான கார்த்திகை தீபத்திருவிழா கடந்த 24ம் தேதி கொடியேற்றத்துடன் தொடங்கி பத்து நாட்கள் விழா நடைபெற்று வருகிறது. திருவிழாவின் 7ம் நாள் உற்சவசமான நேற்று மகா தேரோட்டம் நடைபெற்றது.

## ஸ்ரீ கொத்தளத்து விநாயகர் சிறப்பு வழிபாடு



திருவண்ணாமலை மேற்கு மாட வீதியில் பே கோபுர மெயின் ரோட்டில் அமைந்துள்ள ஸ்ரீகொத்தளத்து சக்தி வாய்ந்த விநாயகர் அபிஷேகம், அலங்காரத்துடன், தங்க கவசத்தில் வண்ண மலர் மாலைகளுடன் சிறப்பு அலங்காரத்தில் அருள் பாலிக்கும் காட்சி. **தமிழ்நாடு இ பேப்பர் செய்தியாளர் நிர்மலா ஸ்ரீதர் திருவண்ணாமலை**

## திருவண்ணாமலை அண்ணாமலையார் மலையேற தடை மாவட்ட நிர்வாகம் அறிவிப்பு



**திருவண்ணாமலை, டிச.01:** திருவண்ணாமலை புயல் எச்சரிக்கை மற்றும் வல்லுனர் குழு அறிக்கையின் அடிப்படையில் பக்தர்கள் பாதுகாப்பு கருதி தற்காலிகமாக இந்த ஆண்டும் பக்தர்கள் மலை ஏறுவதற்கு அனுமதி இல்லை. பக்தர்களின் பாதுகாப்பை கருதி எடுக்கப்பட்டுள்ள இந்த நடவடிக்கை பக்தர்கள் முழு ஒத்துழைப்பு அளிக்குமாறு மாவட்ட நிர்வாகம் கேட்டுக் கொண்டுள்ளது. **தமிழ்நாடு இ பேப்பர் செய்தியாளர் நிர்மலா ஸ்ரீதர் திருவண்ணாமலை**

# திருக்கார்த்திகை தீப திருவிழா 7-ஆம் நாள் மகா ரத உற்சவம்





**திருவண்ணாமலை,டிச.01:** திருவண்ணாமலை அண்ணாமலையார் கார்த்திகை தீபத் திருவிழாவை முன்னிட்டு இன்று ஏழாம் நாள் மகாரதத்தில் அண்ணாமலையார் உண்ணாமலை அம்மன் பெரிய தேர் அலங்காரத்துடன் மாடவீதி உலா நடைபெற்றது. இலட்சக்கணக்கான பக்தர்கள் தேர் வடம் பிடித்து சென்றார்கள்.

வேண்டுதல்களை நிறைவேற்ற தீபத் திருவிழாவில் 10 நாட்களும் கரும்புத் தொட்டிலில் குழந்தைகளை வைத்து மாட வீதி சுற்றி வந்தார்கள்.

சிவன் பக்தர்கள் வேத மந்திரங்கள் ஒலிக்க, பாட்டுகள் பாடி, சங்குகள் முழங்க, மேள தாளங்களுடன், நாட்டிய கலைஞர்கள் நாட்டிய நடனங்களுடன், சிவ நடனத்துடன் கோலாகலமாக வெகு சிறப்பாக நடைபெற்றது. லட்சக்கணக்கான பக்தர்கள் தேர் திருவிழாவில் கலந்துகொண்டு அண்ணாமலையாரை வேண்டி அருள் பெற்றனர்.

**தமிழ்நாடு இ பேப்பர் செய்தியாளர் நிர்மலா ஸ்ரீதர் திருவண்ணாமலை**

## கார்த்திகை தீபத் திருவிழா ஆறாம் நாள் இரவு வெள்ளி ரதங்கள்



**திருவண்ணாமலை,டிச.01:** திருவண்ணாமலைதீபத் திருவிழாவை முன்னிட்டு அருள்மிகு அண்ணாமலையார் ஆலயத்தில் 6-ஆம் நாள் அலங்காரத்தில் வெள்ளிரதத்தில் மாட வீதி உலா லட்சக்கணக்கான பக்தர்கள் அரோகரா அரோகரா என்று கோஷமிட்டு வேத மந்திரங்கள் ஒலிக்க, மங்கள வாத்தியங்கள் இசைக்க, மேளதாளங்களுடன் பஞ்ச மூர்த்திகளும் வெள்ளி ரதத்தில் மின்விளக்குகளால் அலங்கரித்து மாட வீதி உலா நடைபெற்றது.

**தமிழ்நாடு இ பேப்பர் செய்தியாளர் நிர்மலா ஸ்ரீதர் திருவண்ணாமலை**

# பசுமை பள்ளி விழாவில் மரக்கன்றுகள் நடும் விழா



**திருவண்ணாமலை,டிச.01:** திருவண்ணாமலை மாவட்டம் கீழ்பென்னாத்தூர் அரசு ஆண்கள் மேல்நிலைப் பள்ளியில் பசுமை பள்ளி விழா நடைபெற்றது விழாவிற்கு பள்ளி தலைமை ஆசிரியர் மு. பிரசன்னா அவர்கள் வரவேற்புரை ஆற்றினார். செய்யாறு மாவட்ட கல்வி அலுவலர் வீரமணி முன்னிலை வகித்தார். மாண்புமிகு சட்டமன்ற துணை சபாநாயகர் கு. பிச்சாண்டி அவர்கள் பசுமை பள்ளி திட்டத்தின் சார்பில் பள்ளி வளாகத்தில் மரக்கன்றுகள் நட்டு மரக்கன்றுகள் நடும் நிகழ்வை துவக்கி வைத்தார். நிகழ்ச்சிக்கு நகர பிரமுகர் சி.கே. பன்னீர்செல்வம் அவர்கள், உதவி தலைமை ஆசிரியர் ராமமூர்த்தி அவர்கள், கேசவன் வாழ்த்துரை வழங்கினார். இந்நிகழ்வில் உடற்கல்வி இயக்குனர் சௌம்யா அவர்கள், சுகுமார் அவர்கள் மற்றும் அனைத்து ஆசிரியர்களும் பங்கேற்றார்கள். இந் நிகழ்வினை பசுமை பள்ளி திட்டத்தின் ஒருங்கிணைப்பாளர் ஜெயக்குமார் மாணவர்களுடன் ஒருங்கிணைந்து மரக்கன்று நடும் விழாவினை சிறப்பாக நடத்தினார்கள்.

**தமிழ்நாடு இ பேப்பர் செய்தியாளர் நிர்மலா ஸ்ரீதர் திருவண்ணாமலை**

## மழை நிவாரண முகாம்களில் அமைச்சர் அன்பில் மகேஷ் பொய்யாமொழி நிவாரண உதவிகளை வழங்கினார்



நாகை மாவட்டத்தில் உள்ள மழை நிவாரண முகாம்களில் அமைச்சர் அன்பில் மகேஷ் பொய்யாமொழி நேற்று நேரில் சென்று ஆய்வு செய்து நிவாரண உதவிகளை வழங்கினார்

## 1994ம் ஆண்டு பிளஸ் 2 படித்த முன்னாள் மாணவர்கள் ஒன்று கூடும் நிகழ்ச்சி



கிருஷ்ணகிரி அரசு ஆண்கள் மேல்நிலைப்பள்ளியில் கடந்த 1994ம் ஆண்டு பிளஸ் 2 படித்த முன்னாள் மாணவர்கள் ஒன்று கூடும் நிகழ்ச்சி நேற்று நடந்தது.

## வாக்குச்சாவடி நிலை அதிகாரிகளுக்கு கலெக்டர் ஆகாஷ் பாராட்டு



நாகப்பட்டினம் மாவட்டத்தில் வாக்காளர் பட்டியல் சிறப்பு தீவிர திருத்தப்பணியில் சிறப்பாக பணியாற்றிய வாக்குச்சாவடி நிலை அதிகாரிகளுக்கு கலெக்டர் ஆகாஷ் பாராட்டு தெரிவித்தார்.

# உலக எயிட்ஸ் தினம் - 2025





உலக எய்ட்ஸ் தினம் ஒவ்வொரு ஆண்டும் டிசம்பர் 1 ஆம் தேதி அனுசரிக்கப் படுகிறது. மேலும் 2025 ஆம் ஆண்டுக்கான கருப்பொருள் "தடங்கல்களைக் கடந்து, எய்ட்ஸ் தடுப்பு நடவடிக்கைகளை மாற்றுதல்" ("Overcoming disruption, transforming the AIDS response") ஆகும்.

உலக சுகாதார அமைப்பு 1988 ஆம் ஆண்டு முதல் ஒவ்வொரு ஆண்டும் டிசம்பர் 1 அன்று உலக எய்ட்ஸ் தினமாக அறிவித்துள்ள நிலையில் 37வது உலக எய்ட்ஸ் தினம் இன்று அனுசரிக்கப்படுகிறது. மனித குலத்தை அச்சுறுத்திய இந்த தீவிரமான ஆட்கொல்லி நோயை மக்களிடம் கொண்டு செல்லவும், அதற்கான விழிப்புணர்வை உண்டாக்கவும் பல வழிகளில் முயற்சி எடுத்து வருகின்றன. இன்றும் சமூகத்தில் அந்த நோயால் பாதிக்கப்பட்டவர்களைக் கண்டால் தீண்டத்தகாதவர்கள் போல் ஒதுக்கி வைத்திருக்கிறார்கள். அதனால் எச்ஐவி நோய் பாதிப்பை ஆரம்பத்தில் கண்டாலும் அவர்கள் சிகிச்சை பெறுவது தாமதமாகின்றது.

சிறுமிகள் மற்றும் இளம்பெண்களும் கூட எச்,ஐ.வி நோயால் பாதிக்கப்படுகின்றனர். மேலும் எச்.ஐ.வி உடன் வாழும் 39 மில்லியன் மக்களில், 9.2 மில்லியன் மக்கள் உயிர்காக்கும் சிகிச்சையை அணுகவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

ஒவ்வொரு நாளும் 1700 உயிர்கள் இழக்கப்படுகின்றன. மேலும் நாள் ஒன்றுக்கு 3500 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர். பலரும் தங்கள் நிலையை அறியாமல் சிகிச்சையை பெற அணுகவும் இல்லை.

வரும் 2030 ஆண்டுக்குள் எய்ட்ஸை முடிவுக்கு கொண்டு வரும் முயற்சியை கையிலெடுத்துள்ள நிலையில் சமூகங்கள் வழிநடத்த வேண்டும் என்று உலக சுகாதார நிறுவனம் (WHO) கோரிக்கை விடுத்துள்ளது.

**தொகுப்பு: பா. சீனிவாசன், செயலாளர், இந்தியன் ரெட் கிராஸ் சங்கம், வந்தவாசி.**

# ஆத்தூர் தொகுதியில் பெயர் நீக்கத்தில் கலெக்டர் முறைகேடு

## அமைச்சர் ஐ.பெரியசாமி குற்றம் சாட்டி



**திண்டுக்கல், டிச.1:** ஆத்தூர் சட்டப்பேரவை தொகுதியில் வாக்காளர் நீக்கத்தில் முறைகேடு நடந்துள்ளது என்று அமைச்சர் ஐ.பெரியசாமி குற்றம் சாட்டி உள்ளார்.

ஆத்தூர். தொகுதிக் குட்பட்ட சின்னாளப் பட்டி பேரூராட்சியில் சிறப்பு தீவிர வாக்காளர் பட்டியல் திருத்தப்பணி நடக்கிறது. இதில், பெயர் விவரங்கள் சரிபார்க்கும் பணியில் ஆயிரக்கணக்கான வாக்காளர்கள் பெயர்கள் நீக்கப்பட்டுள்ளது.

26வாக்குச்சாவடிகளில் 7 ஆயிரத்து 227 வாக்காளர்கள் நீக்கப்பட்டுள்ளனர். இதன் பின்னணியில் தாசில்தார் முத்துமுருகன், கலெக்டர் சரவணன் உள்ளனர் என்று திண்டுக்கல்லில் ஊரக வளர்ச்சி துறை அமைச்சர் ஐ.பெரியசாமி குற்றச்சாட்டு பேட்டி அளித்தார்.

# வீடு இடிந்த 2 குடும்பத்தினர்களுக்கு பேரூர் திமுக சார்பில் நிவாரண பொருட்கள் உதவி



**திருவாரூர்,டிச.01:** வலங்கைமான் பேரூராட்சி 14- வது வார்டில் வீடு இடிந்த 2 குடும்பத்தினர்களுக்கு பேரூர் திமுக சார்பில் நிவாரண பொருட்கள் உதவி வழங்கப்பட்டது.

திருவாரூர் மாவட்டம் வலங்கைமான் பேரூராட்சிக்கு உட்பட்ட 14- வது வார்டு கோவில் பத்து நடுத்தெருவில் உள்ள கருணாநிதி என்பவர் வீடு கடந்த சில நாட்களாக பெய்த மழையால் சுவர் இடிந்து விழுந்தது.

அதேபோல் அந்த பகுதியில் உள்ள கிருஷ்ணமூர்த்தி என்பவர் வீட்டின் சுவர் மழைநீர் தேங்கி நிற்கும் நிலையில் கற்கள் பெயர்ந்து விழுந்து வரும் நிலையில் எப்போது விழம் என்ற ஆபத்தில் உள்ளது.

இந்த இரண்டு வீடுகளையும் தகவலறிந்த வலங்கைமான் பேரூர் திமுக செயலாளர் பா. சிவநேசன், பேரூராட்சி மன்ற துணைத் தலைவர் க.தனித்தமிழ்மாறன், 14- வார்டு திமுக செயலாளர் செல்வமணி, முன்னாள் கவுன்சிலர் மாரிமுத்து ஆகியோர் இரண்டு குடும்பங்களுக்கும் திமுக சார்பில் அரிசி, வேட்டி, சேலை, பிஸ்கட் பாக்கெட்கள் வழங்கி ஆறுதல் கூறினார்கள். தொடர்ந்து அதிகாரிகளுக்கு தகவல் தெரிவித்தனர்.

## தமிழகத்தில் 81.48 சதவிகித எஸ்ஐஆர் படிவங்கள் பதிவேற்றம்! தேர்தல் ஆணையம் தகவல்

**சென்னை, டிச.1:**

தமிழ்நாட்டில் கடந்த நவம்பர் 4 முதல் எஸ்ஐஆர் என்ற வாக்காளர் பட்டியல் சிறப்பு தீவிர திருத்தப் பணிகள் தொடங்கி யுள்ளன. இந்தப் பணிகளில் தமிழகம் முழுவதும் 68,470 வாக் குச்சாவடி நிலை அலுவலர்கள் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர். வாக்குச்சாவடி நிலை முகவர்களாக 2.46 லட்சம் பேர் பணியமர்த்தப்பட்டு உள்ளனர். தமிழகத்தில் கடந்த அக்டோபர் 27 அன்று மொத்தம் 6 கோடியே 41 லட்சத்து 14 ஆயிரத்து 587 வாக்காளர்கள் உள்ள னர். அவர்களில் 6 கோடியே 30 லட்சத்து 49 ஆயிரத்து 345 பேருக்கு, அதாவது 98.34 சதவிகித வாக்காளர்களுக்கு படி வங்கள் வழங்கப்பட்டுவிட்டதாக இந்திய தேர்தல் ஆணை யம் தெரிவித்துள்ளது. இவ்வாறு விநியோகிக்கப்பட்ட படிவங்களில், பூர்த்தி செய்து அளிக்கப்பட்ட 5 கோடியே 22 லட்சத்து 42 ஆயிரத்து 884 படிவங்கள், அதாவது 81.48 சதவிகித படிவங்கள் கணினி யில் பதிவேற்றம் செய்யப்பட்டுள்ளதாக அறிவிக்கப் பட்டுள்ளது. இதேபோல புதுச்சேரியில் பூர்த்தி செய்து அளிக்கப்பட்ட 8 லட்சத்து 97 ஆயிரத்து 648 படிவங்கள் (87.87 சதவிகிதம்) பதிவேற்றம் செய்யப்பட்டுள்ளதாகவும் தேர்தல் ஆணையம் தெரிவித்துள்ளது.

## 4 எக்ஸ்பிரஸ் ரயில்கள் மேலும் 5 நாட்கள் தாம்பரம் வரை இயக்கம்

**சென்னை, டிச.1:**

சென்னை எழும்பூர் ரயில் நிலையத்தில் மேம்பாட்டு பணிகள் நடைபெற்று வருவதால், நான்கு எக்ஸ்பி ரஸ் ரயில்கள் மேலும் ஐந்து நாட்கள் தாம்பரம் வரையே இயக்கப்படும் என்று தெற்கு ரயில்வே அறிவித்துள்ளது. பணிகள் முடிவடையாததால், தஞ்சாவூர் - சென்னை எழும்பூர் உழவன் எக்ஸ்பிரஸ், கொல்லம் - சென்னை எழும்பூர் அனந்தபுரி சூப்பர்பாஸ்ட் எக்ஸ்பிரஸ், ராமேசுவரம் - சென்னை எழும்பூர் சேது எக்ஸ்பிரஸ், ராமேசுவரம் - சென்னை எழும்பூர் எக்ஸ்பிரஸ் ஆகிய ரயில்கள் நவம்பர் 30 முதல் டிசம்பர் 4 வரை தாம்பரம் ரயில் நிலையம் வரையே இயக்கப்படும். அதேபோல், மேற்கண்ட நான்கு ரயில்களின் திரும்பும் சேவைகள் டிசம்பர் 1 முதல் 5 வரை தாம்பரம் ரயில் நிலை யத்தில் இருந்தே புறப்படும். சென்னை எழும்பூர் - மும்பை எக்ஸ்பிரஸ் ரயில் டிசம்பர் 1 முதல் 5 வரை சென்னை கடற் கரை ரயில் நிலையத்தில் இருந்து புறப்படும்.

## எனது உரிமையை யாராலும் திருட முடியாது: ராமதாஸ்

**சென்னை, டிச.1:**

பாமக தலைவர் பதவி தொடர்பான சர்ச்சை யில் தேர்தல் ஆணையம் அன்புமணியை தலைவராக அறி வித்த நிலையில், நிர்வாகிகளிடம் பேசிய ராமதாஸ், அன்பு மணியின் தலைவர் பதவிக் காலம் முடிந்து விட்டதாகவும், தேர்தல் ஆணையத்தை பணம் கொடுத்து விலைக்கு வாங்கியதாகவும் குற்றம் சாட்டினார். தான் உருவாக்கிய கட்சியை அன்புமணி அபகரிக்க முயற்சிப்பதாகவும், எனது உரிமையை யாராலும் திருட முடி யாது என திட்டவட்டமாக கூறினார். சட்டமன்றத்தில் பாமக பிரதிநிதித்துவம் குறைந்ததற்கு அன்புமணியின் செயல்பாடுகளே காரணம் எனவும் சாடி னார். இனி வெல்லப்போவது ராமதாஸ்தான் என உறுதியாக தெரிவித்தார். தேர்தல் ஆணையத்தை கண்டித்து தில்லி யில் போராட்டம் நடத்தவுள்ளதாக பாமக கவுரவத் தலைவர் ஜி.கே.மணி அறிவித்துள்ளார்.

## சென்னையில் வள்ளலார் மாநாடு

**சென்னை, டிச.1:**

2026 ஜனவரியில் வள்ளலார் சுத்த சன்மார்க்க பன்னாட்டு மாநாடு சென்னையில் நடத்தப்படும் என இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் பி.கே. சேகர்பாபு தெரிவித்துள்ளார். முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் வழிகாட்டுதலின்படி நடந்த ஆலோசனைக் கூட்டத்தில் மாநாட்டு ஏற்பாடுகள் குறித்து விவாதிக்கப்பட்டது. வெளிநாடுகளிலிருந்துவரும் சன்மார்க்க அன்பர்களுக்கான வசதி கள், மூலிகை கண்காட்சி, சித்த மருத்துவ முகாம், கலை நிகழ்ச்சிகள், அன்னதானம், விருது வழங்கல், பெண்கள் பேரணி உள்ளிட்ட நிகழ்ச்சிகள் ஏற்பாடு செய்யப்படும். துறை அலுவலர்கள் மற்றும் சன்மார்க்க சங்கங்களின் நிர்வாகிகள் ஒருங்கிணைந்து செயல்பட வேண்டும் என அமைச்சர் கேட்டுக் கொண்டார்.

## ரயில்களில் 'ஏசி' அல்லாத 'ஸ்லீப்பர்' பெட்டிகளிலும் படுக்கை விரிப்பு, தலையணை வசதி: ஜனவரி முதல் அமல்




**சென்னை, டிச.1:**

விரைவு ரெயில்களில் முதல் முறையாக, 'ஏசி' வசதி இல்லாத, 'ஸ்லீப்பர்' பெட்டி பயணிகளுக்குக்கும், ஜனவரி முதல் படுக்கை விரிப்பு, தலையணை வசதி வழங்கப்பட உள்ளது.

ரெயில்களில் தற்போது 'ஏசி' பெட்டி பயணியருக்கு மட்டுமே படுக்கை விரிப்புகள் வழங்கப்பட்டு வருகின்றன. இந்த வசதியை, 'ஸ்லீப்பர்' பெட்டிகளிலும் ஏற்படுத்த, தெற்கு ரெயில்வே முன்வந்து உள்ளது.

இது குறித்து தெற்கு ரெயில்வே அதிகாரிகள் கூறியதாவது:

ஸ்லீப்பர் வகுப்பு பயணிகளின் வசதி மற்றும் சுகாதாரத்தை மேம்படுத்தும் நோக்கில், தெற்கு ரயில்வேயின் சென்னை கோட்டம் ஒரு முன்னோடி சேவையை அறிமுகப்படுத்துவதில் பெருமை கொள்கிறது. வரும் ஜனவரி 1, 2026 முதல், ஏசி அல்லாத ஸ்லீப்பர் வகுப்பு பயணிகள், கட்டணம் செலுத்தி சுகாதாரமான, பயன்படுத்தத் தயாராக உள்ள படுக்கை விரிப்புகளைப் பெற்றுக் கொள்ளலாம்.

இச்சேவையின் மூலம் ஸ்லீப்பர் வகுப்பு பயணிகளின் வசதியை மேம்படுத்துதல், தேவைக்கேற்ப மலிவு விலையில், பயன்படுத்தத் தயாராக உள்ள படுக்கை விரிப்புகள், சிறப்பான பயண அனுபவத்தை உறுதி செய்தல், இந்தியன் ரயில்வேக்கு கூடுதல் வருவாய் ஈட்டுதல் ஆகும். இத்திட்டத்தின் கீழ், படுக்கை விரிப்புகளை கொள்முதல் செய்தல், இயந்திரம் மூலம் சுத்தம் செய்தல், பேக்கிங், ரயிலில் ஏற்றுதல், விநியோகம் மற்றும் சேமிப்பு ஆகிய அனைத்து பணிகளையும் உரிமம் பெற்ற ஒப்பந்ததாரர் நிர்வகிப்பார். முதற்கட்டமாக, சென்னை கோட்டத்தால் பராமரிக்கப்படும் பத்து ரயில்களில் மூன்று ஆண்டுகளுக்கு இச்சேவை அமல்படுத்தப்பட உள்ளது. பயணிகள் சார்ந்த நடைமுறை வசதிகளை மேம்படுத்துவதிலும், புதுமையான சேவைகள் மூலம் வருவாயை உயர்த்துவதிலும் சென்னை கோட்டம் தனது உறுதிப்பாட்டைத் இதன் மூலம் தொடர்கிறது.

இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.

### 10 ரயில்களில் அறிமுகம்

பயணிகள் ஏசி அல்லாத ஸ்லீப்பர் பெட்டிகளில் ஆன்லைனில் டிக்கெட் முன்பதிவு செய்யும்போதே தங்களுக்கு படுக்கை விரிப்பு வசதி வேண்டுமென்றால் அதனை தேர்வு செய்து கொள்ளலாம் அல்லது ரயிலில் பயணம் செய்யும்போது உரிய கட்டணம் செலுத்தி படுக்கையை விரிப்புகளை பெற்றுக் கொள்ளலாம். படுக்கை விரிப்பு மற்றும் தலையணைக்கு 50 ரூபாய் கட்டணம், தலையணைக்கு மட்டும் 30 ரூபாய் கட்டணம், படுக்கை விரிப்பு மட்டும் வேண்டும் என்றால் 20 ரூபாய் கட்டணம் செலுத்த வேண்டும். இதன் மூலம் ஆண்டுக்கு ₹28,27,653 உரிமக் கட்டணமாகக் கிடைக்கும். 10 ரயில்களில் மூன்று ஆண்டுகளுக்கு இச்சேவை அமல்படுத்தப்பட உள்ளது. பயணிகளின் வரவேற்பை பொறுத்து அடுத்தடுத்த ரயில்களுக்கு விரிவாக்கம் செய்யப்பட உள்ளது.

## டிட்வா புயல் பாதிப்பு: இலங்கைக்கு உதவ தமிழகம் தயார்-முதல் அமைச்சர் மு.க. ஸ்டாலின்

**சென்னை, டிச.1:**

டிட்வா புயல் காரணமாகப் பாதிக்கப்பட்டுள்ள இலங்கை மக்களுக்குத் துணை நிற்க தமிழ்நாடு தயாராக உள்ளது என்று முதல் அமைச்சர் மு.க. ஸ்டாலின் தெரிவித்துள்ளார்.



தமிழக முதல் அமைச்சர் மு.க.ஸ்டாலின் அறிக்கையில் கூறப்பட்டுள்ளதாவது: - டிட்வா புயல் காரணமாக நமது அண்டை நாடான இலங்கை பேரழிவைச் சந்தித்துள்ளது. நூற்றுக்கும் மேற்பட்டோர் இறந்தும் பல இடங்கள் கடும் பாதிப்புக்கு உள்ளாகியும் இலங்கை மக்கள் அவதியுறுகின்றனர். இந்த இயற்கைச் சீற்றத்தில் இறந்தவர்களுக்கு ஆழ்ந்த இரங்கலைத் தெரிவித்துக் கொள்வதோடு, இலங்கை மக்களின் இப்பெருந்துபரிங் தமிழ்நாடும் தமிழ்நாட்டு மக்களும் பங்கெடுக்கிறோம்.

இலங்கையில் சிக்கித் தவிக்கும் தமிழ்நாட்டைச் சேர்ந்த பயணிகளை மீட்க அயலகத் தமிழர் நலன் மற்றும் மறுவாழ்வுத் துறை சார்பில் நடவடிக்கைகளை மேற்கொள்ளப்பட்டு, இன்று காலை 11:05 மணியளவில் முதற்கட்டமாக 177 பேர் (ஆண்கள் 113. பெண்கள் 60. குழந்தைகள் -4) தமிழ்நாட்டிற்குத் திரும்ப அழைத்துவரப்பட்டுள்ளனர்.

டிட்வா புயல் காரணமாகப் பாதிக்கப்பட்டுள்ள இலங்கை மக்களுக்கு ஒன்றிய அரசின் மூலம் உணவுப் பொருட்கள் மருந்துப் பொருட்கள் உள்ளிட்டவற்றைத் தந்து. அவர்கள் மீண்டெழுத்திட உதவிக்கரம் நீட்டிடத் தமிழ்நாடு அரசு தயாராக இருக்கிறது. இதற்காக மத்திய அரசுடன் இணைந்து செயல்பட அதிகாரிகள் குழுவை அமைத்திடத் தலைமைச் செயலாளர் அவர்களுக்கு அறிவுறுத்தியுள்ளேன்" என்று தெரிவித்துள்ளார்

## சென்னை விமான நிலையத்தில் இருந்து வழக்கம்போல் விமானங்கள் இயக்கம்

**சென்னை, டிச.1:**

'டிட்வா' புயல் கனமழை எச்சரிக்கையால் நேற்று சென்னை விமான நிலையத்தில் இருந்து தூத்துக்குடி, மதுரை, திருச்சி ஆகிய நகரங்களுக்கு இயக்கப்படும் 18 விமானங்களும், அதேபோல் தூத்துக்குடி, திருச்சி, மதுரையில் இருந்து சென்னைக்கு இயக்கப்படும் 18 விமானங்களும் என 36 விமானங்கள் ரத்து செய்யப்பட்டன.



இதேபோல் சென்னையில் இருந்து கொழும்பு, யாழ்ப்பாணத்துக்கு சென்று விட்டு மீண்டும் சென்னைக்கு திரும்பி வரவேண்டிய 11 விமானங்கள் ரத்து செய்யப்பட்டன. மேலும் புயல் காரணமாக சென்னையில் இருந்து தூத்துக்குடிக்கு நேற்று காலை முதல் இயக்கப்பட வேண்டிய 5 விமான சேவைகளும், பெங்களூரில் இருந்து தூத்துக்குடிக்கு இயக்கப்பட வேண்டிய 2 விமான சேவை களும் ரத்து செய்யப்பட்டன.

இந்த நிலையில், டிட்வா புயலின் வேகமும், மழையும் குறைந்ததை அடுத்து சென்னை விமான நிலையத்தில் இருந்து தூத்துக்குடி, மதுரை, திருச்சிக்கு இயக்கப்படும் விமானங்கள் நேற்று வழக்கம் போல் இயக்கப்படுகின்றன. சென்னை-யாழ்ப்பாணம் இடையே இயக்கப்படும் 2 விமானங்கள் மட்டும் இன்று ரத்து செய்யப்பட்டுள்ளன.

எனவே பயணிகள் விமான நிறுவனங்களுடன் தொடர்பு கொண்டு பயண விவரங்களை அறிந்து கொள்ளும்படி விமான நிலைய அதி காரிகள் அறிவுறுத்தி உள்ளனர்.

டிட்வா புயல், கனமழை எச்சரிக்கையை அடுத்து புதுச்சேரியில் இன்று விமான சேவைகள் ரத்துசெய்யப்பட்டுள்ளன. புதுச்சேரியில் நேற்று விமான சேவைகள் நிறுத்தப்பட்ட நிலையில் இன்றும் ரத்து செய்யப்பட்டுள்ளன.

தமிழ்நாடு இ பேப்பர்.காம்
www.tamilnaduepaper.com
இ பேப்பரை தினமும் இலவசமாக பெற விரும்புவர்கள்.
"welcome Tamilnadu" என்று கீழ் உள்ள வாட்ஸ்ஆப் எண்ணிற்கு அனுப்பி வையுங்கள். தங்களின் அமைப்பு செய்திகள் தங்கள் பகுதியில் நடைபெறும் நிகழ்ச்சிகளை வெளியிட செய்தி மற்றும் புகைப்படத்தை கீழ்உள்ள வாட்ஸ்ஆப்பிற்கு அனுப்புங்கள்
94452 65389

## நலம் தரும் மருத்துவம்



### வெந்தய டீயும் நன்மைகளும்!

ஒரு பாத்திரத்தில் நீரை ஊற்றி, அதில் வெந்தயத்தை சிறிது சேர்த்து மூடி வைத்து, 3 நிமிடங்கள் கொதிக்க வைத்து இறக்க வேண்டும். பின் அதை வடிகட்டி தேன் சேர்த்துக் கலந்து சூடாகவோ அல்லது குளிர்ச்சியான நிலையிலோ குடிக்கலாம்.

* மாதவிடாய் காலத்தில் பெண்கள் வயிற்று வலி மற்றும் பிடிப்புகளை சந்திப்பார்கள். இந்த சமயத்தில் வெந்தய டீயை குடித்தால் வலியில் இருந்து உடனடி நிவாரணம் கிடைக்கும்.

* பூப்படையும் வயதில் உள்ள சிறுமிகள் இந்த டீயை குடிப்பது நல்லது. ஏனெனில் இந்த டீ ஹார்மோன்களின் வளர்ச்சியை ஊக்குவிக்கும்.

* பிரசவத்தை நெருங்கும் கர்ப்பிணிப் பெண்கள் இந்த டீயை குடித்தால் அது பிரசவ வலியைத் தூண்டுவதோடு, எளிதில் பிரசவம் நடக்கவும் உதவிப் புரியும்.

* தாய்ப்பால் கொடுக்கும் பெண்கள் தொடர்ந்து குடித்து வர, தாய்ப்பால் சுரப்பு அதிகரிப்பதோடு, தாய்ப்பாலில் சத்துக்களும் அதிகரிக்கும்.

* உயர் கொலஸ்ட்ரால் பிரச்னை குறைவதோடு, ரத்த சர்க்கரை அளவும் குறையும்.

* ரத்தத்தில் உள்ள கசடுகள் வெளியேறும். அடிக்கடி சிறுநீர் கழிக்க உதவும்.

* இதய நோயின் தாக்கத்தை தடுக்கும்.

* வெந்தய டீயில் அழற்சி எதிர்ப்பு பண்புகள் ஏராளமாக அடங்கியுள்ளன. ஆகவே மூட்டு வலி, முழங்கால் வலி உள்ளவர்கள் இதை தொடர்ந்து குடித்து வரலாம்.

* உடலில் தேங்கியுள்ள கொழுப்புகளை கரைத்து, அடிக்கடி பசி ஏற்படுவதையும் தடுத்து, உடல் எடையை குறைக்க பெரிதும் உதவுகிறது.

### மருதாணியின் மருத்துவ குணங்கள்!

மருதாணியின் இலைகள், பட்டை, மலர், கனிகள் போன்ற முழுத்தாவரமும் மருத்துவ பயன் உடையவையாகும். மருதாணி இலையை கைகளில் வைப்பதால் பல்வேறு நன்மைகள் கிடைப்பதோடு, கைக்கு அழகையும் சேர்க்கிறது.

*மருதாணி இலை கிருமி நாசினி, கண்ணுக்குப் புலப்படாத கிருமிகளை அழிக்க வல்லது. நகசுத்தி வராமல் தடுக்கும். புண்ணை ஆற்றவும் நல்ல மருந்து. மருதாணி இலையை அரைத்து கைகளுக்கு வைத்து வர, உடல் வெப்பம் தணியும். கைகளுக்கு அடிக்கடி மருதாணி போட்டு வர மனநோய் ஏற்படுவது குறையும்.

*மருதாணி இட்டுக் கொள்வதால் நகங்களுக்கு எந்த நோயும் வராமல் பாதுகாக்கலாம். ஆனால் இந்த பயன்கள் எல்லாம் மருதாணி இலைகளில் மட்டுமே உள்ளது. தற்போது கடைகளில் கிடைக்கும் மருதாணி கோன்களில் கிடைக்க வாய்ப்பு இல்லை.

*கால் எரிச்சலைத் தடுக்க இலைகளை அரைத்து பசையாக வைப்பதின் மூலம் அவற்றை சரிசெய்யலாம்.

*உள்ளங்காலில் ஆணி ஏற்பட்டிருந்தால் மருதாணி இலையுடன் சிறிது வசம்பு, மஞ்சள் கற்பூரம் சேர்த்து அரைத்து, ஆணி உள்ள இடத்தில் தொடர்ந்து கட்டி வர ஒரு வாரத்தில் குணமாகும்.

*மருதாணி இட்டுக் கொண்டால் சிலருக்கு சளி பிடிக்கும். இதற்கு மருதாணி இலைகளை அரைக்கும்போது கூடவே 7 அல்லது 8 நொச்சி இலைகளை சேர்த்து அரைத்து வைத்துக் கொள்ளலாம்.

*இதன் இலையை அரைத்து அம்மைப் புண்களுக்குப் பூசலாம்.

*மருதாணி இலைகளை மைய அரைத்து வடை போல் தட்டி நிழலில் உலர்த்தி தேங்காய் எண்ணெயில் போட்டு தலையில் தேய்த்து வர இளநரை மறையும்.

*மருதாணி இலையை அரைத்து பசையாக்கி தீக்காயங்கள் கொப்புளங்கள் மீது பூசினால் குணமாகும்.

*மருதாணி இலையை சுடுநீரில் ஊறவைத்து வடிகட்டிய நீரை வாயில் ஊற்றி கொப்பளித்து வர வாய்ப்புண் இரண்டே நாளில் குணமாகும்.

*மருதாணி இலையை, மஞ்சள் வேப்பிலையுடன் சேர்த்து அரைத்து கரும்படை, வண்ணான்படை, தொடை இடுக்கு அரிப்பில் தடவி குளித்து வந்தால் குணமாகும்.

## இதுவரை இல்லாத சாதனையை படைத்த தமிழ் யூடியூப் சேனல்!




**சென்னை, டிச.1**

சமையல் விடியோக்கள் பதிவிடப்பட்டு வரும் இந்த சேனலை புதுக்கோட்டையைச் சேர்ந்தவர்கள் நடத்தி வருகின்றனர்.

அறந்தாங்கி அடுத்த சின்ன வீரமங்கலம் கிராமத்தைச் சேர்ந்த சுப்பிரமணியன், அய்யனார், பெரியதம்பி, முருகேசன், முத்துமாணிக்கம், தமிழ்ச்செல்வன் என 6 பேர் கொண்ட குழுவினர் சேர்ந்து வில்லேஜ் குக்கிங் சேனலை தொடங்கினர்.

கரோனா பொதுமுடக்கத்திற்கு முன்பு 2018 ஆம் ஆண்டு உருவாக்கப்பட்ட இந்த சேனலில், தனிப்பட்ட முறையில் சமையல் விடியோக்களை பதிவிட்டு வந்தனர். பின்னர் அதிக எண்ணிக்கையிலானோர் உண்ணும் வகையில் பிரமாண்டமாக சமைக்கத் தொடங்கி விடியோவாக பதிவு செய்தனர்.

ஆரம்பத்தில், இவர்களின் விடியோக்கள் பெரிதாக மக்களைக் கவரவில்லை. வருவாயும் கிடைக்கவில்லை. இந்தபோதும் தளராமல் குழுவாகச் செயல்பட்டு விடியோக்களைப் பதிவிட்டு வந்தனர்.

2021 சட்டப்பேரவைத் தேர்தலின்போது தமிழ்நாடு வந்த ராகுல் காந்தி, வில்லேஜ் குக்கிங்சேனல் உறுப்பினர்களுடன் சேர்ந்து கிராமிய முறைப்படி உணவு சமைத்து அவர்களுடன் அமர்ந்து உண்டார். இந்த விடியோ வைரலானதைத் தொடர்ந்து விரைவில் ஒரு கோடி சப்ஸ்கிரைபர்ஸ் என்ற பெருமையைப் பெற்றனர். அந்த காலகட்டத்தில் ஒரு கோடி சப்ஸ்கிரைபர்ஸ் கொண்ட ஒரே தமிழ் சேனலாக இது இருந்தது.

ராகுல் காந்தியுடன்...

தற்போது 4 ஆண்டுகள் கழித்து 3 கோடி சப்ஸ்கிரைபர்ஸ் கொண்ட சேனலாக மாறியுள்ளது. தற்போது வெளிநாடுகளுக்கு பயணம் மேற்கொண்டு அங்குள்ள தமிழ் மக்களுக்கு உணவு சமைத்து பரிமாறி வருகின்றனர். இதனையும் விடியோவாகப் பதிவிடுகின்றனர். உலகளவில் யூடியூபில் மிகச்சிறந்த உணவு வீடியோக்களைப் பதிவேற்றும் 100 யூடியூப் சேனல்கள் பட்டியலில் 4 ஆம் இடத்தில் வில்லேஜ் குக்கிங் சேனல் உள்ளது என்பது குறிப்பிடத்தக்கது.

## எஸ்ஐஆர் படிவம்: டிச. 11 வரை அவகாசம் நீட்டிப்பு

**சென்னை, டிச.1:**

வாக்காளர் சிறப்பு தீவிர திருத்த நடைமுறையான, எஸ்ஐஆர் படிவத்தை பூர்த்தி செய்து ஒப்படைப்பதற்கான கால அவகாசம் டிச. 11 ஆம் தேதி நீட்டிக்கப்பட்டுள்ளது.

முன்னதாக எஸ்ஐஆர் படிவத்தை ஒப்படைப்பதற்கான கடைசி தேதி டிச. 4 என்று அறிவிக்கப்பட்டிருந்த நிலையில், தற்போது டிச. 11 ஆம் தேதி நீட்டித்து தேர்தல் ஆணையம் உத்தரவிட்டுள்ளது.

வரைவு வாக்காளர் பட்டியல் டிச.16 ஆம் தேதியும் இறுதி வாக்காளர் பட்டியல் பிப்.14 ஆம் தேதி வெளியிடப்படும் என தேர்தல் ஆணையம் அறிவித்துள்ளது.

எஸ்ஐஆர் முழுவிவரம்: தமிழகத்தில் வாக்காளர் பட்டியல் சிறப்பு தீவிர திருத்தப் பணிகள் கடந்த 4-ஆம் தேதி முதல் தொடங்கி நடைபெற்று வருகிறது. இந்தப் பணிக்காக, தமிழ்நாட்டின் 6.41 கோடி வாக்காளர்களில் 6.23 கோடி பேருக்கு கணக்கீட்டுப் படிவங்கள் விநியோகிக்கப்பட்டுவிட்டதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கணக்கீட்டுப் படிவங்களைப் பெற்றுக்கொண்ட வாக்காளர்கள் தங்கள் படிவங்களை பூர்த்தி செய்து, வரும் டிச. 11-ஆம் தேதி வரை பிஎல்ஓ-க்கள் அல்லது வாக்காளா உதவி மையத்தில் சமர்ப்பிக்கலாம்.

கணக்கீட்டுப் படிவங்களைப் பூர்த்தி செய்து ஒப்படைத்துள்ள அனைத்து வாக்காளர்களின் பெயர்களும் டிச. 16-இல் வெளியிடப்படும் வரைவு




வாக்காளர் பட்டியலில் இடம்பெறும்.

டிச. 11-க்குள் கணக்கீட்டுப் படிவத்தை சமாப்பிக்காதபட்சத்தில், அந்த வாக்காளரின் பெயர் வரைவு வாக்காளர் பட்டியலில் இடம் பெறாது. மூன்று முறை வீடு தேடி சென்றும் கணக்கீட்டுப் படிவம் வழங்க முடியாத வாக்காளர்களின் பெயர்கள், வரைவு வாக்காளர் பட்டியலில் இடம் பெறாது.

2002/2005 வாக்காளர் பட்டியலில் ஒரு வாக்காளர் தனது பெயர் அல்லது உறவினரின் பெயரைக் கண்டறிய இயலாத நிலையில் டிச. 11-க்குள் பிற விவரங்கள் நிரப்பப்பட்ட கணக்கீட்டுப் படிவத்தை வாக்குச்சாவடி நிலை அலுவலர்களிடம் ஒப்படைத்தால், அந்த வாக்காளரின் பெயா டிச. 16-இல் வெளியிடப்பட உள்ள வரைவு வாக்காளா பட்டியலில் இடம்பெறும்.

வரைவு வாக்காளர் பட்டியலில் ஒரு வாக்காளரின் பெயர் இல்லையெனில், உரிமைகோரல் மற்றும் மறுப்புரை காலத்தில் படிவம் 6-உடன் உறுதிமொழிப் படிவத்தை இணைத்து அவரது பெயரைப் புதிதாக வாக்காளா பட்டியலில் சோக்க விண்ணப்பிக்கலாம். தொடர்ந்து, உரிமைகோரல் மற்றும் ஆட்சேபணை நடைபெறும். இந்தக் காலகட்டத்தில் வாக்காளர்கள் பெயா சேர்க்க, நீக்க அல்லது வாக்காளர் பட்டியலில் உள்ள பதிவுக்கு அந்த சட்டப்பேரவைத் தொகுதியின் வாக்காளர் பட்டியலில் வாக்காளராகப் பதிவு பெற்றவர் எதிர்ப்புத் தெரிவிக்கலாம். தொடர்ந்து, அறிவிப்புக் கட்டம் நடைபெறும்.

இந்த காலகட்டத்தில் வாக்காளரின் தகுதியை ஆய்வு செய்த பிறகு தேவையானால் வாக்காளர் பதிவு அலுவலரால் அந்த வகையான வாக்காளர்களுக்கு அறிவிப்புகள் வழங்கப்பட்டு விசாரணை நடத்தப்படும். வாக்காளரின் அனைத்து உரிமைகோரல்கள் மற்றும் ஆட்சேபணை பரிசீலிக்கப்பட்ட பின்னர், இறுதி வாக்காளர் பட்டியல் வரும் பிப். 14-ஆம் தேதி வெளியிடப்படும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.






## பேருந்து கவிழ்ந்து விபத்து: ஐயப்ப பக்தர்கள் காயம்!

**சேலம், டிச.1:**

சேலம் மேட்டூர் அணை அருகே சுற்றுலாப் பேருந்து கவிழ்ந்ததில் ஐயப்ப பக்தர்கள் காயமடைந்தனர்.

ஐயப்ப பக்தர்கள் 47 பேர் பேருந்தில் பயணித்த நிலையில் 10 பேர் காயமடைந்து மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

திருவண்ணாமலை மாவட்டம், பட்டியந்தல் பகுதியில் இருந்து, (நவ. 29) 47 ஐயப்ப பக்தர்களை ஏற்றி வந்த பேருந்து, நேற்று காலை மேட்டூர் அணையின் அடிவாரம் பகுதிக்கு வந்தது.

இந்தப் பேருந்தை தருமபுரி பகுதியைச் சேர்ந்த ஓட்டுநர் வேலு ஓட்டி வந்தார். காவிரி ஆற்றில் ஐயப்ப பக்தர்கள் குளிப்பதற்காக மட்டம் சாலையில் பேருந்து சென்றபோது, 40 அடி பள்ளத்தில் கவிழ்ந்து விபத்து ஏற்பட்டது.

இந்த விபத்தில் ஐயப்ப பக்தர்கள் 10 பேருக்கு லேசான காயம் ஏற்பட்டது. விபத்தை கண்ட பொதுமக்கள் காயம் அடைந்தவர்களை மீட்டு சிகிச்சைக்காக மேட்டூர் அரசு மாவட்ட மருத்துவமனைக்கு ஆம்புலன்ஸ் மூலம் அனுப்பி வைத்தனர். மேட்டூர் காவிரியில் புனித நீர் ஆடுவதற்கு நாள்தோறும் ஏராளமான சுற்றுலாப் பயணிகள் வந்து செல்கின்றனர். இவர்கள் மட்டம் சாலையைப் போக்குவரத்துக்காக பயன்படுத்தி வருகின்றனர்.

நகராட்சிக்கு சொந்தமான இந்தச் சாலை பல ஆண்டுகளுக்கு முன்பு மண் சரிவு ஏற்பட்டு ஆபத்தான நிலையில் இருந்து வருகிறது. இதனை சீரமைக்க கோரி பலமுறை அப்பகுதி மக்கள் புகார் தெரிவித்தும் சாலையை சீரமைக்க எந்த ஒரு நடவடிக்கையும் எடுக்கவில்லை.

சரிந்த சாலையில் பாதுகாப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளாததால் பள்ளத்தில் பேருந்து கவிழ்ந்து விபத்து ஏற்பட்டுள்ளது.

மேலும் நகராட்சி மற்றும் பொதுப்பணித்துறை அதிகாரிகள் அலட்சியம் காரணமாக விபத்து ஏற்பட்டதாக பொதுமக்கள் குற்றச்சாட்டு தெரிவித்து வருகின்றனர்.

## புதுச்சேரியில் போலீஸாரின் எச்சரிக்கையை மீறி கடற்கரைக்கு வருகை தரும் மக்கள்

**கோவை, டிச.1:**

புதுச்சேரியில் போலீஸாரின் எச்சரிக்கையை மீறி கடற்கரைக்கு மக்கள் வந்த வண்ணம் உள்ளனர்.

புதுச்சேரியில் டிட்வா புயல் வலுவிழந்தாலும் அதன் தாக்கம் இன்னும் குறைந்தபாடில்லை. இரவு முதல் தற்போது வரை தொடர்ச்சியாக தூரல் மழை பெய்து வருகிறது.

அவ்வப்போது விட்டுவிட்டு கன மழையும் பெய்கிறது. இதனால் பொதுமக்களின் இயல்பு வாழ்க்கை முற்றிலும் பாதிக்கப்பட்டுள்ளது. மேலும் பல்வேறு தாழ்வான பகுதிகளில் மழை நீர் தேங்கியுள்ளது.

கடல் அலைகள் சீற்றத்துடன் காணப்படுகிறது. மேலும் கடல் சீற்றம் காரணமாக புதுச்சேரி கடற்கரை



சாலை மூடப்பட்டுள்ளது. சுற்றுலா பயணிகள் பொதுமக்கள் கடற்கரை செல்ல தடை விதிக்கப்பட்டுள்ளது.

அங்கு போலீஸார் பாதுகாப்பு பணியில் ஈடுபட்டுள்ளனர். தடையையும் மீறி பொதுமக்கள் கடற்கரை நோக்கி வருகின்றனர். அவர்களை போலீஸார் எச்சரிக்கை செய்து அனுப்புகின்றனர்.

## திருவண்ணாமலை கார்த்திகை தீபத் திருவிழா 7ம் நாள்: அண்ணாமலையார் மகா ரதம் வீதியுலா - திரளான பக்தர்கள் பங்கேற்பு

**திருவண்ணாமலை, டிச.1:**


திருவண்ணாமலை அருணாசலேஸ்வரர் கோவில் கார்த்திகை தீபத்திருவிழா தொடங்கி நடந்து வருகிறது. இதையொட்டி தினமும் காலையில் விநாயகர், சந்திரசேகரர் வீதி உலாவும், இரவில் பஞ்சமூர்த்திகள் வீதிஉலாவும் நடக்கிறது.

கார்த்திகை தீபத் திருவிழாவின் 6-ம் நாள் விழாவான நேற்று முன்தினம் காலை 11.30 மணி அளவில் சிறப்பு அலங்காரத்தில் விநாயகர் மர யானை வாகனத்திலும், அம்பாளுடன் சந்திரசேகரர் வெள்ளியானை வாகனத்திலும் கோவில் ராஜகோபுரம் எதிரே உள்ள 16 கால் மண்டபத்தில் எழுந்தருளினர். அங்கு சாமிக்கு சிறப்பு பூஜைகள், தீபாராதனை நடந்தது. இதில் திரளான பக்தர்கள் கலந்து கொண்டு சாமி தரிசனம் செய்தனர். அப்போது 63 நாயன்மார்கள் வீதிஉலாவும் நடைபெற்றது.

தொடர்ந்து இரவு 10 மணி அளவில் நடைபெற்ற உற்சவத்தில் பஞ்சமூர்த்திகளான விநாயகர், வள்ளி, தெய்வானையுடன் முருகர், உண்ணாமலை அம்மன் சமேத அருணாசலேஸ்வரர், பராசக்தி அம்மன், சண்டிகேஸ்வரர் ஆகிய சாமிகள் வெள்ளி தேர், வெள்ளி இந்திர விமானம், வெள்ளி விமானங்களில் கோவில் மாடவீதியை










சுற்றி வந்துபக்தர்களுக்கு அருள்பாலித்தனர். இதில் திரளான பக்தர்கள் கலந்துகொண்டு சாமி தரிசனம் செய்தனர்.

வெள்ளி தேரையொட்டி திருவண்ணாமலை நகரத்திற்கு ஏராளமான பக்தர்கள்வருகைபுரிந்ததால் நூற்றுக்கணக்கானபோலீசார் திருவண்ணாமலை நகரம் மற்றும் மாடவீதிகளில் பாதுகாப்பு பணியில் ஈடுபட்டனர்.

### தேரோட்டம்

இந்நிலையில் கார்த்திகை தீபத் திருவிழாவின் முக்கிய நிகழ்ச்சிகளில் ஒன்றான தேரோட்டம் நேற்று (ஞாயிற்றுக்கிழமை) தொடங்கி கோலாகலமாக நடைபெற்று வருகிறது. காலையில் விநாயகர் தேர் வடம் பிடித்து இழுக்கும் நிகழ்ச்சி தொடங்கியது. முதலில் விநாயகர் தேரும், அதைத்தொடர்ந்து முருகர் தேரும் வீதிஉலா சென்றது. 2 தேர்களும் நிலைக்கு வந்ததும் பெரியதேரான அருணாசலேஸ்வரரின் மகாரதம் இழுக்கப்பட்டது. இதில் ஆண்கள் ஒருபக்கமும், பெண்கள் ஒருபக்கமும் வடம் பிடித்து தேர் இழுத்தனர். பெரியதேர் நிலைக்கு வந்ததும் இரவில் அம்மன் தேரோட்டம் நடைபெறுகிறது. அம்மன் தேரை பெண்கள் மட்டுமே இழுப்பார்கள். இந்த தேரின் பின்னால் சண்டிகேஸ்வரர் தேர் இழுக்கப்படும். சண்டிகேஸ்வரர் தேரை சிறுவர், சிறுமிகள் இழுப்பார்கள். காலை முதல் இரவு வரை தேரோட்டம் நடைபெறும். தேரோட்டத்தையொட்டி நேற்று திருவண்ணாமலையில் 5 ஆயிரத்திற்கு மேற்பட்ட போலீசார் பாதுகாப்பு பணியில் ஈடுபட்டுள்ளனர். மேலும் விழாவின் சிகர நிகழ்ச்சியான 3-ந்தேதி (புதன்கிழமை) அதிகாலையில் கோவிலில் பரணி தீபமும், மாலையில் கோவில் பின்புறம் உள்ள மலை உச்சியில் மகா தீபமும் ஏற்றப்பட உள்ளது.

# மரங்களும் பிள்ளைகளே



" அழகிய பூக்களை செடிகளை கொடிகளை பசுமையான இயற்கையை ரசித்த வண்ணம் சிந்தனையை ஓடவிட்டாள் ஹோமியோபதி டாக்டர் தமிழ்த் தென்றல் .

கும்பகோணத்தில் கிளினிக் வைத்து நடத்தி வரும் தமிழ்த் தென்றல் ஒரு இயற்கை ஆர்வலர் தமிழ் பற்று கொண்ட சிந்தனைவாதி .

சிறு வயது முதல் மரங்கள் மீது கொண்ட பற்றால் சின்னதாக ஒரு நர்சரி ஆரம்பித்து அதன் வாயிலாக பல பள்ளிகள் கல்லூரிகள் அலுவலகங்கள் பொது இடங்கள் என்று பலருக்கும் மரக்கன்றுகளை இலவசமாக கொடுத்து அழகு பார்த்தவர் .

தானே சென்று பல இடங்களில் மரக்கன்றுகளை நட்டவர் . அது வளரும் அழகை பல நாட்கள் சென்று பார்த்து ரசித்தவர் .

குடும்பம் ஆன பிறகும் தன் சேவையை குறைக்காத நல்ல மனம் கொண்ட பெண்ணரசி பொன்னரசி .

இன்று அந்த கல்லூரியில் சிறப்பு விருந்தினராக வந்து தேசியக் கொடியை ஏற்றி வைத்து சிறப்புரை ஆற்றினாள் தென்றல்.

பொன்னாடை நினைவுப் பரிசு டீ ஸ்நாக்ஸ் நன்றி நவிலல் என்று முடிந்த பின்பு நிதானமாக நடை போட்டு வந்தாள் கல்லூரி முகப்பிற்கு தமிழ்.

அந்த கல்லூரி வளாகத்தில் எட்டு ஆண்டுகளுக்கு முன்பு அவள் வைத்த மரக்கன்றுகள் அந்த கல்லூரி வளாகத்தில் வளர்ந்து தழைத்திருக்க கனிகள் கூட கண்ணில் பட்டு அவள் முகம் மலர்ந்தது ஜொலித்தது .

அந்தந்த மரங்கள் அருகில் சென்று பேசி மகிழ்ந்து கட்டி அனைத்து புத்துணர்ச்சி பெற்று அந்த மரங்கள் இருந்த பகுதியில் நின்று போட்டோ எடுத்துக் கொண்டு அந்த பசுமை நிழலின் கதகதப்பில் பெருமூச்சு விட்டு கண்களில் வழிந்த நீரை மெல்ல துடைத்துக் கொண்டாள் தென்றல் .

வயதும் காலமும் இன்னும் உண்டு என்பதால் டாக்டர் தமிழ் தன் பசுமை ஈர்ப்பை நேசத்தை சுவாசத்தை இன்னும் பல இடங்களில் காண வேண்டும் என்ற நோக்கிலே தன் நர்சரியை விரிவு படுத்தினாள் தன் வருமானம் முழுதும் பசுமைக்கு தான் என்பது போல வாழத் தொடங்கினாள் ..."

பெற்ற குழந்தைகளைப் போல இயற்கையை மரங்களை நேசிக்கும் இந்த வரம் இன்னும் பலருக்கும் இந்த தமிழ்நாட்டில் வந்து விட்டால் மழைக்கும் தூய்மையான சுவாசக் காற்றுக்கும் காலநிலை மாற்றம் இல்லா நிலையும் கிடைத்துவிடும் என்கிற சமூக சிந்தனை அக்கறை பொங்கி வழிந்தது டாக்டர் தமிழ்த்தென்றல் முகத்தில் ஆனந்த கண்ணீராக ..."

- சீர்காழி.
ஆர். சீதாராமன்.

# அம்மா மாதிரி

" என்னங்க ! பெண் எப்படியிருக்கா ? நம்ம சந்துருவுக்கு ஈடா இருப்பாளா ?"

பெண் பார்த்துவிட்டு வீட்டினுள் நுழைந்த கணவர் சடகோபனிடம் கமலா ஆர்வமுடன் கேட்க, அதற்கு அவர் " நீ ஃபோட்டவ்ல பார்த்தமாதிரி நல்லா இருக்கா ! மற்றப்படி பிள்ளை யாண்டானிடம் டிடெய்ல்ஸ் கேட்டு க்கோ" என்றபடி சோஃபாவில் அமர்ந்து கொண்டார். இப்படி மொட் டையாச் சொல்றாரே ! ' சே' என்றா னது கமலாவிற்கு.

வண்டியைப் பார்க் பண்ணிவிட்டு நுழைந்தான் சந்துரு.

" வாடாப்பா ! நீயாவது பெண் எப்படி இருக்காள்னு விலாவரியாச் சொல்லு ! உங்கப்பாவைக் கேட்டால் சரியாச் சொல்லல்ல.."

" அம்மா ! நீ ஃபோட்டோவுல பார்த்த போது எப்படி இருக்குறா ?"

" ம்..வட்டமுகம்.."

" அப்புறம் ?"

" அழகான கண்கள். கூர்மையான நாசி. சுருள் சுருளான அடர்த்தியான கேசம்.வட்ட முகத்தில் பார்க்க அம்சமா இருக்குறா !"

" கரெக்ட்...அதோட நல்ல நிறம். ஐந்தரை அடி உயரம்...மெத்தத்தில பார்க்க யார் மாதிரி இருக்கா தெரியுமா ?"

கமலா புன்னகையுடன் தலையை ஒரு பக்கம் சாய்த்தபடி மகனை பார்த்தாள்.

" அழகு, அடக்கம், ஒடுக்கம் இதேல் லாம் சேர்ந்த எங்க அம்மா மாதிரி இருக்குறா !"

சந்துரு இப்படிச் சொன்னதும் சட்டென கமலா முகம் சுருங்கியது. கண்களில் நீர் கசிந்தது. சடகோபனு க்கு என்னவோப் போல இருந்தது !

சந்துரு பதறிப் போனான். "என்னம்மா ஆச்சு ? ஏன் கண் கலங்குற ?"

" வேணாம்ப்பா. உன் அம்மா மாதிரின்னு இன்னொருதடவை சொல்லாதே !" வீல் சேரை அப்படியும் இப்படியும் ஆட்டினாள் கமலா. புரிந்துபோக சுரீர் என நெஞ்சில் ஈட்டியால் குத்துவது போல் வேதனை யுற்றான் சந்துரு. இவ்வளவு நேரம் மகிழ்ச்சியாக இருந்தவன் சோகமுற் றான்.

ஆறுமாதம் முன்னால் ஏற்பட்ட ஒரு விபத்தில் கமலாவின் தண்டுவடம் பாதிப்புக்குள்ளாகி கால்கள் இரண் டும் விளங்காமல் போய்விட்டது. அன்றிலிருந்து வீல்சேரில்தான் நடமாட்டம் ! அம்மா அதைக்கோடி ட்டுக் காட்டிதான் பேசுகிறாள் என் பதை புரிந்துகொண்டான் சந்துரு.

"ஸாரிம்மா ! எதார்த்தமாகத்தான் சொன்னேன்....உன் மனசு நோகும்னு தெரிஞ்சிருந்தால் நான் அப்படி பேசி யிருக்கமாட்டேன்மா... என்னை மன்னி ச்சிடும்மா!" அம்மாவின் கைகளை ஆதூரத்துடன் பற்றினான் சந்துரு. அவன் கண்களும் லேசாக கலங்கி யிருந்தன.


மகனின் வருத்தம் கண்டு மனம் கனி ந்த கமலா அவன் தலையை தன் வலது கையால் தடவி விட்டாள். அம்மா இயல்பு நிலைக்குத் திரும்பி யது பெருத்த ஆயாசத்தை கொடுத் தது சந்துருவிற்கு . சடகோபனுக்கும் ' அப்பாடா' என்றிருந்தது !





-முகில் தினகரன்
கோயம்புத்தூர்.

# திருவிளையாடல் புராணம் 11



▪சிவ.முத்து
லட்சுமணன்
போச்சம்பள்ளி.



## உக்கிர பாண்டியனின் அவதாரப் படலம்

இப்படலத்தில் மீனாட்சி சுந்தரேஸ்வரர் திருமணத்திற்குப் பிறகு முருகப்பெருமானை மீனாட்சியின் வயிற்றில் மகனாக பிறக்க சிவன் வேண்டுவதும், கர்ப்பமுற்ற மீனாட்சிக்கு சிறப்புற நடந்த சீமந்தமும், பின் முருகப்பெருமான் உக்கிரபாண்டியனாக அவதரித்தமையையும் விளக்கப்பட்டுள்ளது.

உக்கிரபாண்டியனின் பிறப்பு, கல்வி பயின்ற முறை, அவனின் அழகு மற்றும் குமரப்பருவம் எய்திய அவருக்கு மணம் முடிக்க எண்ணிய சுந்தரபாண்டியனாரின் கருத்து ஆகியவை இப்படலத்தில் விளக்கப்படுகின்றன.

இப்படலம் திருவிளையாடல் புராணத்தின் மதுரைக் காண்டத்தில் பதினொன்றாவது படலம் ஆகும். நன்மக்களைப் பெற தாய்மார்கள் செய்ய வேண்டியதை பற்றி இப்படலம் குறிப்பிடுகின்றது. இனி இப்படலம் பற்றிப் பார்ப்போம்.

மீனாட்சியின் பெற்றோரான காஞ்சன மாலை மற்றும் மலயத்துவசனுக்கு வீடுபேற்றினை அளித்தார் இறைவனான சுந்தரபாண்டியனார்.

பின் அவர் நீதிமுறை பிறழாமல் பாண்டிய நாட்டினை ஆட்சி செய்து வந்தார். தடாதகை பிராட்டியார் பாண்டியவ வம்சத்தை தழைக்கச் செய்ய மகவு ஒன்றினை பெற விரும்பினார்.

இதனை அறிந்த சுந்தர பாண்டியனார் தமிழ் கடவுளான முருகப் பெருமானை மீனாட்சியின் வயிற்றில் தோன்றச் செய்தார். அம்மையாரும் கர்ப்பவதியானார்.

மீனாட்சியின் கர்ப்பம் குறித்து அறிந்த மதுரை மக்கள் தங்களின் எதிர்கால மன்னனின் வரவை எண்ணி பெரும் மகிழ்ச்சி அடைந்தனர். மீனாட்சி கர்ப்பவதியானதைக் கொண்டாட மதுரை நகரமே திருவிழா பூண்டது.

கர்ப்பவதியான மீனாட்சிக்கு குங்குமப்பூ கலந்த பால், பழங்கள் உள்ளிட்ட அவர் விரும்பிய பொருட்களை எல்லாம் உண்ணக் கொடுத்தனர்.

ஆன்மீகக் கதைகள், பாடல்கள், போதனைகள், தத்துவங்கள் உள்ளிட்ட இறைசிந்தனை மிக்கவற்றை மீனாட்சியைக் கேட்கச் செய்தனர். கர்ப்பிணிப் பெண்களுக்கான வளைகாப்பு விழாவும் மீனாட்சிக்கு நடத்தப்பட்டது.

உக்கிரகுமரார் திருஅவதாரம்

கர்ப்பவதியான மீனாட்சி திங்கட்கிழமையும், திருவாதிரை நட்சத்திரமும் கூடிய நாள் ஒன்றில் ஆண்மகவினைப் பெற்றெடுத்தாள்.

மீனாட்சியின் குழந்தையைப் பார்க்க திருமால் உள்ளிட்ட தேவர்கள் அனைவரும் மதுரைக்கு வந்து வாழ்த்துக்களை வழங்கினர். மதுரை மாநகர மக்கள் தங்களின் இளவரசரின் வரவினை எண்ணி மகிழ்ந்தனர். வீடுகள், தெருக்கள் உள்ளிட்டவைகளை அலங்கரித்து விழாக்கள் கொண்டாடினர். பின்னர் அக்குழந்தைக்கு உக்கிரவர்மன் எனப் பெயரிட்டனர்.

நான்காம் மாதத்தில் குழந்தையை கோவிலுக்கு அழைத்துச் சென்றனர். ஆறாம் மாதத்தில் குழந்தைக்கு அன்னம் ஊட்டினர். பதின்மூன்றாம் மாதத்தில் மயிர்வினை (தலைமுடி இறக்குதல்) முடித்தனர்.

தேவகுருவாகிய வியாழ பகவான் வேதம் முதலிய கலைகளையும், விற்பயிற்சியையும், வாட்பயிற்சியையும், யானை ஏற்றம், குதிரை ஏற்றம் முதலியவற்றை உக்கிரவரமனுக்கு கற்பித்தார்.

பாசுபதப் படைப்பயிற்சியை மட்டும் சிவபெருமான் உக்கிரவர்மனுக்கு கற்றுக் கொடுத்தார். பலவித படைப்பயிற்சியையும், வீரவிளையாட்டுகளையும் கற்றுத்தேர்ந்த உக்கிரவர்மன் காளைப்பருவத்தை அடைந்தார். அவர் காளைப்பருவத்தில் முப்பத்திரெண்டு இலட்சணங்களும் பொருந்தி சிறந்த நற்குணம் உடையவராக திகழ்ந்தார்.

மகனுடைய போர்திறனும், சாதுர்யத்தையும் கண்டு மகிழ்ந்த சுந்தரபாண்டியனார் "இவன் பூமண்டலம் முழுவதும் அரசாள வல்லவன்" என்று எண்ணினார்.

உக்கிரவர்மனுக்கு திருமுடி சூட்டுவதா? மணம் முடிப்பதா? என தடாதகை பிராட்டியாரும், சுந்தரபாண்டியனாரும் மற்றவர்களுடன் கலந்து ஆலோசித்து திருமணம் செய்வது என்று முடிவு செய்து திருமணத்திற்கு பெண் பார்க்கத் தொடங்கினர்.

இப்படலம் கூறும் கருத்து

பெண்கள் தங்களின் கர்ப்ப காலத்தில் நல்லனவற்றை பார்க்க, கேட்க செய்தால் நல்ல குழந்தைகளைப் பெறலாம் என்பதே உக்கிரபாண்டியனின் திருஅவதாரப் படலம் கூறும் கருத்தாகும்.

(தொடரும்)

# புயல் ஒன்று புறப்பட்டதே!!!!

காற்றழுத்த தாழ்வு பகுதி, காற்றழுத்த மண்டலம், புயல்னு சொல்றாங்க?
அது காற்று சுழற்சியின் வேகத்தை செயற்கைக்கோளில் இருந்தும் நமது ரேடார்கள் மூலமும் கணித்து புயலின் காற்று சுழலும் வேகம் கூடக்கூட அதற்கு பெயர் மாறிக் கொண்டே இருக்கிறது.
மணிக்கு 31.5 கிமீ மேல் சுழற்சி வேகம் இருந்தால் அது காற்றழுத்தத் தாழ்வு பகுதி

அதுவே மணிக்கு 31.5 முதல் 50 கிமீ சென்றால் அது தாழ்வு மண்டலம் (Depression)
மணிக்கு 50 முதல் 62 கிமீ என்றால் அது ஆழ்ந்த காற்றழுத்தத் தாழ்வு மண்டலம். ( DEEP depression)
மணிக்கு 62 கிலோமீட்டருக்கு மேல் சுழலும் வேகம் இருப்பின் அது புயலாக கணக்கில் கொள்ளப்படும்.
62-87 வரை புயல்(cyclone)
87-116 வரை
தீவிர புயல் ( Severe cyclone)
116- 222 km/hr வரை அதி தீவிர புயல்( very severe cyclone)
›222 கிமீ மேல் super cyclonic storm ( அதி பயங்கரப் புயல் / சூப்பர் புயல்)
இந்த சுழற்சி வேகம் அதிகரிக்க புயலின் மோட்டார் வேகமாக சுழல்வதற்கு முக்கிய தேவை - கடலின் மேற்பரப்பு நீரின் வெப்பமாகும்.
27டிகிரி செல்சியஸுக்கு மேல் கடல் நீர் வெப்பமாக இருக்கும் போது , தொடர்ந்து சுழற்சி வேகம் அதிகமாகிக் கொண்டே இருக்கும். இவ்வாறு ஒரு காற்றழுத்தத் தாழ்வு பகுதி புயலாக உருமாறுவது சைக்ளோஜெனெசிஸ் என்று அழைக்கப்படுகிறது.

இவ்வாறு தீவிரமடைவது (INTENSIFICATION) என்று அழைக்கப்படுகிறது.
தற்காலத்தில் மீலீனியத்துக்குப் பிறகு தோன்றும் வங்காள விரிகுடா புயல்கள் - முந்தைய புயல்களை விட வேகமாக தீவிரமடைகின்றன என்று



ஆய்வுகள் கூறுகின்றன.
அடுத்து புயல் நகரும் வேகம் இதை TRANSLATIONAL SPEED என்று அழைக்கிறார்கள்.

ஏன் தற்கால வெப்ப மண்டல புயல் சின்னங்கள் வேகமாக தீவிரமடைந்தும் மெதுவாக நகர்கின்றன?
இதற்குக் காரணம் உலகம் தன்னளவில் முந்தைய காலங்களை விட சற்று வெப்பம் கூடியிருக்கிறது.

சுமார் ஒரு டிகிரி முதல் ஒன்றரை டிகிரி வரை கால நிலை மாற்றம் காரணமாக பூமி சூடாகியிருப்பது உண்மை.
இதன் காரணமாக பூமத்திய ரேகைக்கு அருகில் இருக்கும் வெப்ப மண்டலப் பகுதிகளில் இருக்கும் கடல் / விரிகுடா/ பெருங்கடல் ஆகியவற்றின் மேற்புற நீர் எப்போதும் சூடாகவே இருக்கிறது புயல் சின்னம் உருவாக அழுத்தத்தில் தாழ்வு நிலை ஏற்பட வேண்டும்
அதற்கு கடலின் மேற்புற நீரின் வெப்பம் -27 டிகிரி செல்சியஸுக்கு மேல் இருக்க வேண்டும். இதன் காரணமாகவே புயல் சின்னம் உருவாகிறது.

ஆயினும் தற்காலப் புயல்கள் முன்னெப்போதும் இல்லாத அளவு விரைவாக தீவிரமடைகின்றன (RAPID INTENSIFICATION)
புயல் தீவிரமடைந்தது என்று கூறப்பட்டால்
அதன் சுழற்சி வேகம் தீவிரமடைந்துள்ளது என்று பொருள் கொள்ள வேண்டும்.
புயல் தனது கண் பகுதியில் ஆழ்ந்த காற்றழுத்த தாழ்வு நிலையைக் கொண்டிருக்கும் எனவே தன்னகத்தே ஈரப்பதத்தை உறிஞ்சி இழுத்துக் கொண்டே இருக்கும். இது சுழற்சியாக மாறி வளிமண்டலத்தின் மேலே சென்று நீராவி குளிர்ந்து மேகங்களாக மாறும் இதனால் தன்னகத்தே ஈரப்பதம் மிகுதியாகக் கொண்ட மழை தரும் மேகக் குவியல்களை தன்னை சுற்றி சுழன்று கொண்டிருக்கச் செய்யும்
இந்த சுழற்சியின் வேகத்தை (ROTATION SPEED) வைத்துத் தான் காற்றழுத்த தாழ்வு நிலை, பகுதி, மண்டலம்
புயல் என்றும் தீவிரப் புயல் என்றும் பெயர் பெறுகிறது.

இது புயலின் காற்று வீசும் வேகத்தைக் குறிக்கும்.
எனவே புயல் தீவிரமடையும் போது காற்றின் பலமான வீச்சினால் ஏற்படும் சேதங்கள் பொருள்கொள்ளப்படும்.
1971 முதல் 1990 வரை ஏற்பட்ட வெப்ப மண்டல புயல் நிலைகளை ஒப்பிடும் போது 2001 முதல் 2020 வரை ஏற்பட்ட புயல்கள் 28.7% வேகமாக தீவிரமடைந்துள்ளன.
நவீன காலப்புயல் நிலைகள் 24 மணிநேரத்திலேயே 50 நாட்ஸ் (› மணிக்கு 90 கிலோமீட்டர்) வேகம் அளவு தீவிரமடைகின்றன.
முந்தைய காலப் புயல்கள் 20 நாட்ஸ் எனும் வேகம் எடுக்க 36 மணிநேரங்கள் எடுத்துக் கொண்ட வேளையில் தற்காலப் புயல்கள் 24 மணிநேரங்களுக்குள்ளேயே அந்த வேகத்தை அடைகின்றன.
இதற்குக் காரணம் வெப்பமான கடலின் மேற்பரப்பு அதிலிருந்து எரிபொருளை எடுத்துக் கொண்டு சுற்றிச் சுழலுவதே காரணம்.
எனினும் இதில் இன்னொரு விசயத்தையும் நாம் கவனிக்க வேண்டும் "புயலின் நகர்வு வேகம்" இதை TRANSLATIONAL SPEED என்று அழைக்கிறார்கள்.

மந்தமான புயல் மெதுவான புயல் மணிக்கு 2 கிமீ மணிக்கு 5கிமீ மணிக்கு 10 கிமீ வேகத்தில் தான் நகர்கிறது என்று கூறும் போது அது புயலின் சுழற்சி வேகத்தைக் குறிக்காது.
மாறாக அந்தப் புயல் பூமியின் மேற்பரப்பில் நகர்ந்து செல்லும் வேகத்தைக் குறிக்கிறது.
ஒரு புயலின் சுழற்சி வேகம் அதிகமாக கடலின் வெப்பமான மேற்பரப்பு நீர் தேவை என்று பார்த்தோம்

அதுவே புயலின் நகர்வு வேகத்திற்கு நமது வளிமண்டலத்தில் காற்று வீசும் போக்கும் அதன் வேகமுமே காரணம். இவ்வாறு ஒரு புயலை நகர்த்தி வழிநடத்துவதற்கு வளிமண்டல காற்று வீசும் வேகம் முக்கியமாகிறது. கூடவே வழிநடத்தும் அதி காற்றழுத்த மேட்டுப் பகுதிகளின் (RIDGES) விளைவும் புயலின் நகர்வில் பங்காற்றுகிறது.
வங்காள விரிகுடா புயல்கள் ஏன் மேற்கு வட மேற்கு நோக்கியே நகர்கின்றன.
அதற்குக் காரணம் நமது பூமியின் சுழற்சி மற்றும் அதனால் உண்டாகும் கோரியாலிஸ் விசை.
1949 முதல் 2016 வரை நடத்தப்பட்ட ஆய்வில் வெப்ப மண்டலப் புயல்களின் நகரும் வேகம் 10% குறைந்திருக்கிறது.
புயல்கள் மெதுவாக நகர்வது என்பது அந்த புயல்களால் ஏற்படும் மழைப்பொழிவின் அளவை நாம் கணிக்கும் அளவுகளில் இருந்து கூட்டும் வாய்ப்பு அதிகமாகிறது.
காரணம் ஒரு புயல் சின்னம் உருவானதும் அது நாம் நினைத்தது போல கரையைக் கடந்து விட்டால் குறிப்பிட்ட ஒரு பகுதிக்கு மழை அதிகமாக தராமல் பல இடங்களுக்கும் உள் பகுதிகளுக்கும் மழை பரவலாகத் தரும்.
ஆனால் புயல் ஒரே இடத்தில் அதிலும் கடற்கரை ஒட்டிய கடலில் நங்கூரமிட்டு கடலில் மையம் கொண்டு சுழன்று கொண்டே இருந்தால் ( உதாரணம் : ஃபெங்கல்) அல்லது கரையை நோக்கி மிகவும் மந்தமான முறையில் நகர்ந்தால் அது மையம் கொண்டிருக்கும் இடத்திற்கு அருகில் இருக்கும் பகுதிகளுக்கு தீவிரமான மழைப்பொழிவைக் கொடுக்கும்.
இதற்கு புயல் நிலை கூட அவசியமில்லை. பல நேரங்களில் காற்றழுத்த தாழ்வு நிலை மற்றும் மண்டலங்களே தீவிர மழைப்பொழிவைக் கொடுக்கின்றன.
2023 ஆம் வருடம் தூத்துக்குடி மாவட்டத்தில் நிகழ்ந்த மழைப்பொழிவு புயலால் ஏற்படவில்லை மாறாக காற்றழுத்த தாழ்வு மண்டலத்தால் ஏற்பட்டதாகும்.
இவ்வாறு நமது பூமியின் காலநிலை மாற்றத்தால் பூமியின் வெளிப்புறம் வெப்பமடைவதால் முந்தைய காலங்களை ஒப்பிடும் போது புயல்கள் உருவாகும் எண்ணிக்கையில் மாற்றமில்லை.
எனினும் உருவாகும் புயல்கள் சுழற்சி வேகத்தில் தீவிரமடைவதும் நகர்ந்து செல்லும் வேகத்தில் மந்தமாக இருப்பதும் தொடர்ந்து கண்டு வருகிறோம்.
இதன் காரணமாக புயல் என்று உருவானால் ஒன்று அதீத தீவிர காற்றின் வேகத்தினால் பிரச்சனை அல்லது ஒரே இடத்தில் பல மணிநேரங்கள் அதீத மழைப் பொழிவினால் பிரச்சனை என்ற நிலை ஏற்படுகிறது.
புயல் எங்கு கரையைக் கடக்கும் என்பதிலும் இதனால் தான் சரியான உறுதியான தகவல்களை இறுதி வரை கணிக்க இயலாது. அதற்காகவே "CONE OF UNCERTAINTY" எனும் "நிலையில்லாமையின் கூம்பு" என்று அழைக்கிறோம்.
எந்த புயல் என்றாலும் நமக்கு நன்மை தரும் மழையைத் தரட்டும். மக்களுக்கும் பிற உயிர்களுக்கும் பாதிப்பற்ற மழையைத் தரட்டும் என வேண்டிக்கொள்வோம்.

முனைவர் **பாலசந்தர்**
மண்ணச்சநல்லூர்

## தினம் ஒரு தலைவர்கள்

# என்.ஜி.ராமசாமி வரலாறு

என். ஜி. ராமசாமி அல்லது கோவை என். ஜி. ராமசாமி [பிறப்பு: 11 மார்ச்சு 1912] [இறப்பு: 12 பெப்பிரவரி 1943] தமிழ் நாட்டின் அன்றைய கோவை மாவட்டத்தின் பீளமேட்டில் பிறந்த இந்திய விடுதலைப்போராட்ட வீரர் ஆவார். கோவை மாவட்டத்தின் முதல் சத்தியாகிரகியாக தேர்ந்தெடுக்கப்பட்டவர். 1937-ல் சட்டமன்ற உறுப்பினராக இருந்தவர். கோவை பஞ்சாலைத் தொழிலாளர் சங்கத்தின் நிறுவனத் தலைவராக விளங்கியவர்.

### இளமை

தமிழ்நாட்டின் கோயமுத்தூர் மாவட்டத்தில் 1912- ஆம் ஆண்டு மார்ச் 11ஆம் நாள் ராமசாமி பிறந்தார். தந்தை பெயர் கோவிந்தசாமி, தாயார் சித்தம்மாள். இவரது சிறு வயதிலேயே இவருடைய பெற்றோர்கள் காலமானதால், இவரது அண்ணன் ராஜு என்பவரின் அரவணைப்பில் வளர்ந்தார். 1930-இல் மகாத்மா காந்தி உப்பு சத்தியாக்கிரகத்தில் கைதானபோது, இவர் தனது மாணவத்தோழர்களை ஒன்று திரட்டித் தனது எதிர்ப்பை வெளிப்படுத்தினார். புரட்சியில் மனம் சென்றாலும் காந்தியின் அகிம்சை, சத்தியம் ஆகிய கோட்பாடுகள் இவரைக் கவர்ந்தன. ராமசாமியும் அவரின் நண்பர்களும் ஒன்றுசேர்ந்து "உண்மை உள்ள கழகம்" என்ற பெயரில் ஒரு சங்கம் நிருவி வாரம் ஒருமுறை ஒளிவு மறைவின்றி தத்தமது கருத்துக்களை வெளியிடும் வழக்கத்தைக் கையாண்டனர். இக்குழுவினர் ஓர் அச்சகத்தையும் நடத்தி வந்தனர்.

### பணி

கோவையின் சரோஜா பஞ்சாலையில் வேலைக்குச் சேர்ந்த ராமசாமி, அங்குள்ள இயந்திரங்களில் பழுது நீக்குவதில் தலைசிறந்த வல்லுநர் என்று பெயர் பெற்றார். அந்த ஆலையில் 'மாஸ்டர்' எனும் தகுதி பெற்றார். மக்களை ஒன்று திரட்டுவதிலும், திறமையாக வழிநடத்திச் செல்வதிலும் சிறந்த பணியாற்றினார். பணியாற்றும்போதே தொழிலாளர்களின் நலனில் அக்கறை கொண்டு விளங்கினார். தொழிலாளர்களின் நலனில் அக்கறை கொண்டவர் என்ற முறையிலும் இவரது தொண்டுகளையும் கண்ட காங்கிரஸ் கட்சி 1937-ல் நடைபெற்ற சட்டமன்றத் தேர்தலில் இவரைப் போட்டியிட வைத்தது. இவருக்கு எதிராக வலிமையான போட்டி இருந்தும், காங்கிரஸ் தலைவர்களின் ஆதரவில் இவரே வெற்றி பெற்று தனது 25- ஆம் வயதில் சட்டமன்ற உறுப்பினர் ஆனார். 1937இல் ராஜாஜி தலைமையில் அமைந்த சென்னை சட்டசபையில் இவரே வயதில் இளையவர். இவரது தொழிலாளர் சார்பு நடவடிக்கைகள், தொழிலாளர் நலனையே முதன்மையாகக் கொண்டிருந்தது.

### கொலை முயற்சிகள்

இவரது நடவடிக்கைகள் கோவை ஆலை உரிமையாளர்களுக்கு வருத்தத்தை அளித்தபோதும், அதனைப் பொருட்படுத்தாது இவர் தொழிலாளர் நலனையே முக்கியமாக நினைத்தார். ஆனால் இவரது நடவடிக்கைகளால் ஆத்திரமடைந்த ஆலை உரிமையாளர்கள் சிலர் இவரை ஒழித்துக் கட்ட முனைந்தனர். அந்த முயற்சியில் தொழிலாளர்களையேப் பயன்படுத்துவது என்றும் முடிவு செய்தனர். அச்சமயத்தில் தொழிலாளர்கள் தங்களது கோரிக்கைகளை வலியுறுத்தி வேலை நிறுத்தம் செய்து வந்தனர். புலியங்குளம் எனும் இடத்தில் ஓர் கூட்டத்தில் பேசிவிட்டுத் திரும்புகையில் சிலர் இவரைத் தாக்கி விட்டு, இறந்துவிட்டார் என்று ஓடிவிட்டனர்.

ஆத்திரமடைந்த தொழிலாளர்களை என். ஜி. ராமசாமி அழைத்து "அமைதியாக இருங்கள். ஆத்திரப்படாதீர்கள். "கொதிப்பும் ஆத்திரமும் காந்திய கொள்கைகளுக்கு முரணானவை" என்று எடுத்துரைத்தார். அகில இந்திய தொழிலாளர் தலைவர் வி. வி. கிரி அவர்கள் தலையிட்டு வேலைநிறுத்தத்தை முடிவுக்குக் கொண்டு வந்தார். 1937-இல் கோவை ஜில்லா சோஷலிச பஞ்சாலைத் தொழிலாளர் சங்கம் நிருவப்பட்டது. அதற்கு என். ஜி. ராமசாமி துணைத் தலைவராக இருந்தார். சோஷலிசம் என்ற பெயரை அரசாங்கம் ஏற்காததால் அந்தச் சொல்லை நீக்கியே சங்கம் பதிவு செய்யப்பட்டது. பின்னர் என். ஜி. ராமசாமி இந்த சங்கத்தின் தலைவராக ஆனார்.
1938-ல் ஆந்திர மாநிலத்தைச் சேர்ந்த கோபால ரெட்டி கலந்து கொள்ளும் ஒரு கூட்டம் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. இந்தக்கூட்டம் முடிந்து அனைவரும் திரும்பும் வேளையில் என்.ஜி.ஆரை இரும்புத் தடிகள் கொண்டு தாக்கி வீழ்த்தினார்கள். இவர் மருத்துவ மனையில் இரண்டு மாத காலம் சிகிச்சை பெற்றுத் தேறினார். பிறகு 1940இல் உடுமலைப் பேட்டையில் நடந்த கூட்டத்திலும் இவர் தாக்கப்பட்டார். இதில் இவரது தொடை எலும்பு முறிந்தது. நீண்ட நாள் சிகிச்சைக்குப் பின் இவர் தேறினாலும் தனது 28ஆம் வயதிலேயே கைத்தடி கொண்டு நடக்கும் நிலைக்கு ஆளானார்.

### விடுதலைப் போரில் பங்கு

இரண்டாம் உலகப் போர காலத்தில், பிரித்தானியரின் போர் முயற்சிகளுக்கு உதவக்கூடாது என்று சத்தியாக்கிரகம் நடந்தபோது, ராமசாமி கோவை பகுதியில் 1940 ஆகஸ்ட் 22ஆம் தேதி சிங்காநல்லூரில் சத்தியாக்கிரகம் செய்தார். இதனால் சிறைப்பட்டு, வேலூர் கொண்டு செல்லப்பட்டார். அங்கு அவர் நோய்வாய்ப்பட்டார். 6 நவம்பர் 1941-இல் சிறை தண்டனை முடிந்து விடுதலையானார்.

இவர் கோவையில் மருத்துவமனையில் தங்கி சிகிச்சை எடுத்துக் கொண்டிருந்த நேரத்தில் மறுபடியும் எதிரிகள் இவரைக் கத்தியால் குத்தி கொல்ல முயன்றனர். தப்பிய ராமசாமி விடுதலைப் போரில் தீவிரமாக ஈடுபட்டார். இவரது தலைமையில் இருந்த தொழிற்சங்கம் மூலம் பல காங்கிரஸ் தலைவர்களை அழைத்துக் கூட்டங்களை நடத்தினார். சுதந்திரப் போராட்ட வேகத்தை அதிகப்படுத்தினார்.

### தொழிலாளர் பிரச்சினைகள்

இந்தச் சூழ்நிலையில் கோவை முருகன் ஆலையில் பகுதிநேர வேலை (ஷிஃப்ட்) தொழிலாளர்களுள் ஒரு பகுதி தொழிலாளர்கள் அனைவரையும் நிர்வாகத்தினர் வேலை நீக்கம் செய்தனர். நீதி கேட்கச் சென்றபோது ராமசாமியும், கே. பி. திருவேங்கடம் எனும் தலைவரும் தாக்கப்பட்டனர். இதன் பயனாகப் பெரும் கலவரம் மூண்டது. ஒரு தொழிலாளி இறந்தார். இதற்கிடையே 1942 ஆகஸ்ட் 8ஆம் தேதி மும்பையில் கூடிய காங்கிரஸ் மாநாட்டில் மகாத்மா காந்தி அவர்கள் வெள்ளையனே வெளியேறு இயக்கத்தை முழக்கினார். பல காங்கிரஸ் தலைவர்கள் இவ்வியக்கத்தில் பங்கெடுத்து கைது செய்யப்பட்டனர். கோவையில் 1942 ஆகஸ்ட் 13ஆம் தேதி ராமசாமியும் கைதானார்.

### இறுதிக்காலம்

வேலூர் சிறையில் இருந்த ராமசாமியின் உடல்நிலை மிகவும் மோசமாகவே, யாராவது கோவையிலிருந்து வந்து அழைத்துப் போகுமாறு சிறை நிர்வாகம் கேட்டுக் கொண்டது. ஆனால் யாரும் போய் அழைத்து வருவதற்கு முன்பே இவரை தொடர்வண்டியில் ஏற்றித் தனியாக அனுப்பிவிட்டது. கோவையில் மயக்க நிலையில் வந்திறங்கிய இவரை மருத்துவர் சிவானந்தம் என்பவர் அழைத்துச் சென்று சிகிச்சை அளிக்க ஏற்பாடு செய்தார். அதன் பிறகு மூன்று மாதங்களே உயிரோடு இருந்த என். ஜி. ராமசாமி தனது 31ஆம் வயதில், 1943 பிப்ரவரி 12ஆம் நாள் கோவையில் விடுதலையைக் காணாமலேயே மறைந்தார். கோவை உப்பிலிபாளையத்தில் இவரது பெயரால் ஒரு பள்ளி இயங்கி வருகிறது. உடுமலைப் பேட்டை நகரின் ஒரு பகுதிக்கு என். ஜி. ராமசாமி என்று பெயர் வைத்துள்ளனர்.



# காந்தாரா காட்சியை நடித்த ரன்வீர் சிங்



ரிஷப் செட்டியும் பார்வையாளர்கள் இருக்கையில் இருந்து அதை பார்த்துக்கொண்டிருந்தார். தெய்வத்தை பெண் ஆவி என ரன்வீர் குறிப்பிட்டதும் கண்டனத்துக்கு உள்ளாகி வருகிறது. பாலிவுட் நடிகர் ரன்வீர் சிங் சர்ச்சையில் சிக்கியுள்ளார். அண்மையில் கோவாவில் சர்வதேச இந்திய திரைப்பட விழாவின் (IFFI) நடைபெற்று முடிந்தது.

விழாவின் நிறைவு நாளில் மேடையில் ரன்வீர் சிங் செய்த செயலின் வீடியோ இணையத்தில் கண்டனத்தை குவித்து வருகிறது.

அண்மையில் ரிஷப் ஷெட்டியின் காந்தார 2 படம் வெளியாகி பெரும் வசூல் சாதனை படைத்தது. இந்த படத்திலும், 2022 இல் வெளியான முதல் பாகத்திலும் ரிஷப் செட்டி, சாமியாடிகள் எழுப்பும் 'ஓ' என்ற ஒலியை ஆக்ரோஷமான முகபாவத்துடன் எழுப்பும் காட்சிகள் சிலிர்க்க வைக்கும் வகையில் இருக்கும்.

இதை மேடையில் முயன்ற ரன்வீர் சிங், கிண்டலடிக்கும் வகையில் முகபாவத்துடன் அதை செய்தார். அப்போது ரிஷப் செட்டியும் பார்வையாளர்கள் இருக்கையில் இருந்து அதை பார்த்துக்கொண்டிருந்தார். இந்த நிகழ்வில் வாழ்நாள் சாதனையாளர் விருது பெற்ற ரஜினிகாந்தும் அதை பார்த்துக்கொண்டிருந்தார்.

இதற்கு முன்னதாக "நான் காந்தாரா சாப்டர்1 ஐ திரையரங்குகளில் பார்த்தேன், ரிஷப் நன்றாக நடித்திருந்தார், குறிப்பாக பெண் ஆவி (சாமுண்டி தெய்வம்) உங்கள் உடலில் நுழையும் போது அந்த ஷாட் அற்புதமாக இருந்தது" என்றும் ரன்வீர் சிங் மேடையில் பேசியிருந்தார்.

இந்த வீடியோ இணையத்தில் வைரலாகி வரும் சூழலில் கன்னடர்களின் தெய்வங்களை அவர் கிண்டலிப்பதாகவும், அவர் மன்னிப்பு கேட்க வேண்டும் என்றும் பலர் கருத்து பதிவிட்டு வருகின்றனர். மேலும் தெய்வத்தை பெண் ஆவி என ரன்வீர் குறிப்பிட்டதும் கண்டனத்துக்கு உள்ளாகி வருகிறது.

ரன்வீர் மன்னிப்பு கேட்கவில்லை என்றால் அவர் நடிப்பில் வெளியாக உள்ள 'துரந்தர்' படத்தின் வெளியீட்டைத் தடுப்போம் என்றும் எச்சரித்து வருகின்றனர். ரன்வீர் சிங் நடித்த 'துரந்தர்' படம் டிசம்பர் 5 ஆம் தேதி வெளியாக உள்ளது குறிப்பிடத்தக்கது.



நடிகை மிர்னா மேனன் அழகிய சேலையில் போஸ் கொடுத்திருக்கும் புகைப்படங்களை பாருங்க.

# ரீ என்ட்ரி கொடுக்கும் போட்டியாளர் இவரா?




பிக்பாஸ் நிகழ்ச்சி 50 நாட்களை கடந்து விறுவிறுப்பாக நடைபெற்று வருகிறது. நாட்கள் நெருங்க நெருங்க யார் வின்னராகப் போகிறார் என்ற பதற்றமும் அதிகரித்து வருகிறது. பிக்பாஸ் போட்டியாளர் கானா வினோத் தான் தற்போது அனைவருக்கும் ஃபேவரைட் லிஸ்டில் உள்ளார். இவர் தான் வின்னராவார் என்ற கருத்துகளும் மேலோங்கி வருகிறது.

பிக்பாஸ் நிகழ்ச்சி என்ன தான் 50 நாட்களை கடந்தாலும் இன்னும் இந்த நிகழ்ச்சியில் விறுவிறுப்பு இல்லை என்று தான் கூறப்படுகிறது. அதாவது, தேவையில்லாத சண்டைகள் ஆடியன்ஸை உற்சாகப்படுத்த வேண்டும் என்ற எண்ணம் யாருக்கும் இல்லை என்று நெட்டிசன்கள் கருத்து தெரிவித்து வருகின்றனர்.மேலும், பார்வதி செய்யும் வேலைகள் இன்னும் கடுப்பேற்றுவதாக தெரிவித்துள்ளனர்.

பிக்பாஸ் நிகழ்ச்சியில் தம்பதியராக கலந்து கொண்ட பிரஜினும் சாண்ட்ராவும் நாங்கள் தனித்தனி கண்டஸ்டண்ட் என்று சொல்லிக் கொண்டு ஒரே போட்டியை தான் விளையாடி வருகின்றனர். அதேபோன்று சாண்ட்ரா ஆரம்பத்தில் அமைதியாக இருந்த நிலையில் தற்போது தன் வில்லத்தனத்தை எல்லாம் காண்பித்து வருகிறார். வீட்டினுள் சண்டையை மூட்டி விடுவது. பார்வதியுடன் சேர்ந்து எல்லோரையும் தரக்குறைவாக பேசுவது என பல வேலைகளை செய்து வருகிறார்.

பிக்பாஸ் நிகழ்ச்சியில் ஒவ்வொரு வாரமும் ஒவ்வொருத்தர் வெளியேறுவார்கள். அப்படி, கடந்த சில வாரங்களாக பிரவீன் காந்தி, நந்தினி, அரோரா சி.ஜே., ஆதிரை, துஷார், பிரவீன் காந்தி, திவாகர், கெமி ஆகியோர் வெளியேறினார்கள்.

இந்நிலையில், இந்த வாரம் பிக்பாஸ் வீட்டில் இருந்து கனி வெளியேறுவார் என்று கூறப்பட்டது. அனால் கடைசி நேரத்தில் இந்த வாரம் எவிக்ஷன் இல்லை என்று அறிவிக்கப்பட்டதாக தகவல் வெளியானது.

மேலும், கடந்த சில வாரங்களுக்கு முன்பு வெளியேற்றப்பட்ட ஆதிரை பிக்பாஸ் வீட்டிற்கு ரீ என்ட்ரி கொடுக்கவுள்ளதாக அதிர்ச்சி தகவல் வெளியாகியுள்ளது. FJ - வியானா காதல் ட்ராக்கில் ஆதிரையின் என்ட்ரி குழப்பத்தை ஏற்படுத்தி பிக்பாஸ் நிகழ்ச்சியை கலகலப்பாக்கும் என்று கூறப்படுகிறது.

# மிருணாள் தாகூரை காதலிக்கும் ஷ்ரேயாஸ்




சீதா ராமம் படத்தின் மூலம் மிருணாள் தாகூர் புகழ்பெற்றார்.

ஆஸ்திரேலியாவுக்கு எதிரான ஒருநாள் போட்டியில் ஷ்ரேயாஸ் காயமடைந்தார்.

தமிழ் சினிமாவின் முன்னணி நடிகரான தனுசும், பாலிவுட் நடிகை மிருணாள் தாகூரும் காதலிப்பதாக கிசுகிசுக்கப்பட்டது.

அஜய் தேவ்கானுடன், மிருணாள் தாகூர் நடித்துள்ள 'சன் ஆப் சர்தார்-2' பட விழாவில் தனுஷ் கலந்துகொண்டதும், மிருணாள் தாகூருடன் கைகோர்த்துக்கொண்டு சுற்றியதும் இதற்கு தூபம் போடுவதுபோல அமைந்தது.

இதுகுறித்து பேசிய மிருணாள் தாகூர், "நடிகர் தனுஷ் எனக்கு நல்ல நண்பர் மட்டுமே. எங்கள் இருவரை பற்றியும் வதந்திகள் பரவி வருவதை அறிகிறோம். இதுபோன்ற வதந்திகளை பார்க்கும்போது, எனக்கு சிரிப்புதான் வந்தது" என்று விளக்கம் கொடுத்து இந்த சர்ச்சைக்கு முடிவுரை எழுதினார்.இந்நிலையில், இந்திய கிரிக்கெட் வீரர் ஷ்ரேயாஸ் அய்யரும் நடிகை மிருணாள் தாகூரும் ரகசியமாக காதலித்து வருவதாக இணையத்தில் தகவல் கசிந்துள்ளது.

ஷ்ரேயாஸ் மற்றும் மிருணாள் தாகூர் ஆகியோர் தங்களின் கேரியரின் உச்சத்தில் இருப்பதால் இந்த காதலை பொதுவெளியில் அறிவிக்க தயக்கம் காட்டுவதாகவும் தங்களின் நண்பர்களின் பார்ட்டி மற்றும் விழாக்களில் மட்டும் சந்தித்து காதலை வளர்த்து வருவதாகவும் கூறப்படுகிறது.

ஆஸ்திரேலியாவுக்கு எதிரான ஒருநாள் போட்டியில் காயமடைந்த ஷ்ரேயாஸ் தற்போது குணமடைந்து ஓய்வில் உள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது.



தமிழ், தெலுங்கு, மலையாளம் மொழிகளில் படங்கள் நடித்து மக்களின் மனதில் தனக்கென ஒரு இடம் பிடித்தவர் நடிகை அனுபமா பரமேஸ்வரன்.

கடந்த 2015ம் ஆண்டு மலையாளத்தில் வெளியான சூப்பர் ஹிட் காதல் படமான பிரேமம் படத்தின் மூலம் அறிமுகமானார். அப்படத்தை தொடர்ந்து தமிழ் பக்கம் வந்தவர் தனுஷின் கொடி படம் மூலம் அறிமுகமானார்.

அடுத்தடுத்து படங்கள் நடித்தவர் இப்போது கடைசியாக துருவ் விக்ரமுக்கு ஜோடியாக பைசன் படத்தில் நடித்துள்ளார்.

இந்நிலையில், அனுபமா சேலையில் வலம் வரும் அழகிய ஸ்டில்ஸ் இணையத்தில் வைரலாகி வருகிறது.

# 'வாழ்நாள் சாதனையாளர் விருது' பெற்ற ரஜினிகாந்த்! - கவிஞர் வைரமுத்து வாழ்த்து



"வாழ்நாள் சாதனையாளர் விருது பெற்றிருக்கும் ரஜினி அவர்களை வாழ்த்துகிறோம். அவரது தாழாத கீர்த்திக்கும் வீழாத வெற்றிக்கும் சில காரணங்கள் உண்டு. அவரது வாழ்வின் முன்னுரிமை உழைப்புக்கு; பிறகுதான் மற்றவற்றுக்கு கலை உலகம் தந்த புகழை வேறு சந்தைகளுக்கு அவர் மடைமாற்றம் செய்வதில்லை ரசிகனுக்கும் தனக்குமுள்ள நெருக்கம் தூரம் இரண்டுக்கும் எல்லை கட்டத் தெரியும். உணவு உடற்பயிற்சி இரண்டினாலும் தொப்பையற்ற தோற்றத்தைத் தொடர்ந்து காப்பாற்றுகிறார். தான் பின்தங்கிவிடாமல் மாறும் தலைமுறையோடு மாறாமல் பயணிக்கிறார்.

சமூகம் அவரைச் சர்ச்சைக்கு இழுத்தாலும் சர்ச்சைகளை அவர் திட்டமிட்டு உண்டாக்குவதில்லை. கர்வம் என்பது தனியறையில் இருந்தாலும் பணிவு என்பதைப் பொதுவெளியில் காட்டுகிறார். 'இமயமலை ஆகாமல் எனதுஉயிர் போகாது எல்லையைத் தொடும்வரை எனது கட்டை வேகாது' என்ற வரிகளை வாழ்ந்துகாட்டத் துடிக்கிறார். தான் நன்றாக இருக்கவேண்டும்; அதுபோல் எல்லாரும் என்று நினைக்கிறார். வாழ்க பல்லாண்டு!" என்று பதிவிட்டுள்ளார்.


# ஸ்ரீ கிருஷ்ணர் உபாசகர் பரிகார புகழ்

ஆன்மீக செம்மல் த.பிரகாஷ்

CONTACT US 9597887308, 6380453463

EXPERT IN VEDIC ASTROLOGY

- PREDICTION & SOLUTIONS
- MONEY
- LOVE
- HEALTH
- FAMILY
- BUSINESS
- CAREER
- MARRIAGE



## திருமண வாழ்த்து மடல்

மணமக்கள்

K.ஹரிஹரன் B.Tech.,MBA.,

S.முத்து குமாரி B.E.,MBA.,

நாள்: 01.12.2025 - திங்கட்கிழமை

இடம்: R.K.கன்வென்சன் சென்டர் நீலாங்கரை சென்னை .

காதலாய் கவிதையாய் வாழ்க பல்லாண்டு..

அன்பும் அறனும் செழித்திடவே
ஆன்மிகப் பற்றோடு என்னாளும்
இன்புற வாழ வாழ்த்துகிறோம் !
ஈதல் இசைபட நிலத்தில்
உவகை நிலைத்திடவே வாழ்க !
ஊக்கமுடன் பணியாற்றி நாளும்
எழுஞாயிற்று ஒளியாக உலகத்தில்
ஏற்றமுடன் இலங்கிடவே வாழ்த்துகிறோம் .
ஒப்புமையிலா உயர்வெய்தி இணையுடன்
ஓங்குபுகழ் செல்வமுடன் வாழியவே !
ஔடதமாய் சமுகத்தில் இலங்கிடவே
திருநிறைச் செல்வன் ஹரிஹரனும்
திருநிறைச்செல்வி முத்து குமாரியும்
இல்வாழ்க்கைப் பயணத்தில்
பல்லாண்டுவாழ்கவென வாழ்த்துகிறோம் !
வாழ்க வளமுடன் !!



அன்புடன்:

முனைவர்.கா.ந.கல்யாணசுந்தரம் MA.,CAIIB.,

திருமதி அருள்செல்வி கல்யாணசுந்தரம்

மற்றும் குடும்பத்தினர்

## OFFICE/RESIDENCE FOR SALE

7500 Sq.ft OFFICE/ RESIDENCE SPACE FOR SALE. COMPOUND AREA 39.5 CENTS IN NAGERCOIL. Parking for 2 cars and 20 Motor Cycles

Contact: 98410 62644

## இடம் விற்பனைக்கு

இராமன்புதூர் மீன் சந்தை அருகே 6 சென்ட் இடம் விற்பனைக்கு உள்ளது.

தொடர்புக்கு: 8300134494

## Make Money Without Investment Through Mobile

Call : 9337501889

Just 20 min/per day

Any Time

Earn upto Rs. 1000/per mobile

## வாடகைக்கு இடம் தேவை

Institute மற்றும் பல் மருத்துவமனை நடத்துவதற்கு நாகர்கோவில் சுற்றுவட்டாரத்தில் மெயின் ரோட்டின் அருகில் Car Parking வசதியுடன் வாடகைக்கு இடம் தேவை.

தொடர்புக்கு: Dr.ROBINSON
Door No: 1/82, Water Tank Road, Nagercoil. Mob: 9487665511

## இடம் விற்பனைக்கு

காரவிளை முதல் ராஜாக்கமங்கலம் மெயின் ரோட்டில் 57 சென்ட் இடம் விற்பனைக்கு உள்ளது.

Contact: 08220426606

## அருள்தரும் தெய்வம்

என்றும் நம் இல்லங்களில்

வழங்கும் 2026 மாத காலண்டர் தெய்வீகப் படங்களுடன்



3 காலண்டர் 100 ரூபாய்

அனைத்து இல்லங்களிலும் இருக்கவேண்டிய அற்புத காலண்டர்

இது காலண்டர் அல்ல

மினி பஞ்சாங்கம்

Admin office
Padma Media House
116, EH Road, Gandhi Nagar Chennai 600081

தொடர்பு கொள்ளவும் 9337501889

## COMMERCIAL SPACE FOR RENT

5000 Sqft, 2500 Sqft in Ramanathapuram, Coimbatore- 45

Brokers Contact : 98422 65900

SAA

## DTCP Sites For Sale @ KALAPATTY

East Facing Site
6 Cents
Direct Sale !!!
90471 87197

SAA

## ADVERTISE WITH US

CONTACT US 9438610756


## குடோன் வாடகைக்கு விடப்படும்

கோவை வடவள்ளி IOB காலனியில் 3614 sq.ft with EB Service 150HP

CT: 88708 68595



# புதுக் கவிதை பகுதிகள்



என் அம்மாவின்
பல நாள் ஆசை
சொந்த வீடு என் அப்பாவின்
பல வருட கனவு
சொந்த வீடு என்
தலைமுறையில்
நிறைவேறியது புது வீட்டில்
அப்பாவும்–அம்மாவும்
புகைப்படங்களாக!

கவலையாய் இருக்கிறது
கிட்ட வா கட்டிப்பிடி
கலைந்து போகும்–எல்லா
கஷ்டங்களும்!

காதலை கேட்டால்
தரமாட்டாய் என தெரியும்
கொஞ்சம்
காயத்தையாவது தா!
அப்படியெல்லாம்
ஒரேயடியாய் பார்க்காதே
கோபமிருந்தால்
அணைத்து தீர்த்திடு!

லி.நௌஷாத் கான்

## கந்தை: வறுமை:

உடுக்க வேண்டும்
இருப்பதைக் கசக்கியே
அடுத்த வேளை
மாற்றுத் துணிக்கு.
கந்தை யானாலும்
கசக்கிக் கட்டவே
பாந்தமாய் சொன்னாங்க
கசக்கும் போதே
கந்தையானால்



கவலை
கொள்ளாமல்
என்ன
செய்வதாம்
எப்படிச்
சொல்வதாம்?

வைரமணி
சென்னை

## வாழ்க்கை

வாழ்க்கை...
ஒரு முடிவற்ற கவிதை.

நாம் அறியாத முதல் வரியும்,
எழுத முடியாத இறுதி வரியும்
ஏற்கனவே
தீர்மானிக்கப்பட்டவையே.

நடுத்தர வரிகளில்...
சிலவற்றை மனம் எழுதும்,
சில நினைவுகள் நிகழ்த்தும்,
சில வரிகளில் வலி
தழுவிடும்.

இன்பம், மகிழ்ச்சி, சோகம்,
துன்பம் என மாறும்
வாழ்வின் பல
அத்தியாயங்கள்
கவிதையின் ஓட்டத்தை
அமைக்கும்.

எதிர்பாராத
சந்திப்புகளும்,
எதிர்பார்த்த பிரிவுகளும்
யதார்த்த வாழ்க்கையின்
இயல்பான நிகழ்வுகளே.

அன்பெனும் இசை
சீரற்ற இடைவெளியையும்
இனிமையான இன்னிசை
ராகமாக மாற்றிடும்.

ஆம், வாழ்க்கை ஓர்
கவிதைதான்...
அதன் முழுப் பொருளை
வரிகளால் எழுத முடியாது.

எனினும்...

ஒவ்வொரு நாளும்



அதை உணர்ந்து,
புதிதாக
படித்து புரிந்து
கொள்வதில்தான்
அதன் அழகு
மறைந்திருக்கிறது.

நா.பத்மாவதி
கொரட்டூர்

## உழைப்போம் வாரீர்

ஆசைநெஞ்சில் அடுக்கடுக்காய் வைத்திருப்போர்
அதற்கேற்றாற்போல்நாளும் உழைக்க வேண்டும்
மீசையினை முறுக்கிவீட்டில் அமர்ந்திருந்தால்
மீன்விழியின் இமைமுடியாய் வளர மாட்டார்
காசைச்சேர்ப்கதற்கு நெஞ்சுள் கனவு கண்டால்
கரம்விட்டு நீளாத ரேகைபோல
ஆசைமட்டும் மிஞ்சிருக்கும்! உழைக்கும்போதே
அடுத்தவர்கள் வியக்கின்ற உயர்வுகிட்டும் !

முயற்சியொன்றே மெய்வருத்தப்பலன் கொடுக்கும்
முயலாமல் முடியாதென்றுரைத்து நின்றால்
அயற்சியொன்றே அரவணைக்கும் உலகம் கூட
அயலவனாய் மூலையிலே ஒதுக்கி வைக்கும்
பயிற்சியின்றேல் சோம்பேறி முகத்தில் வந்து
படர்வதற்கும் சிரிப்பிங்கே அஞ்சி யோடும்
குயிலைப்போல் குரலெழுப்பி இனிமை சேர்க்கும்
குறிக்கோளாய் உழைத்தால்தான் வெற்றிகிட்டும் !

தக்கபடி எடுத்தாலோ சிக்கலில்லை
தாறுமாறாய் எடுத்தாலோ சிக்கலாகும்
சிக்கலினை நூல்கண்டில் செய்வதெல்லாம்
சிந்திக்காமல்செய்யும் செயல்களாலே
சிக்கலான வாழ்க்கையினைச்சீராய் செய்ய
சிந்தித்தே செயலாற்ற வேண்டும் நன்றாய்
எக்காலத்திலுமிங்கே ஏற்றம் காண
ஏற்றசெயல் நல்லுழைப்பே உழைப்போம் வாரீர் !



## கூட்டுக் குடும்பம்!



ஒற்றுமையின் சின்னம்
ஒருங்கமைப்பின் வண்ணம்
பற்றுடைய குடும்பம்
பாசமிகு உடும்பு!
சுற்றுமுற்றும் உலகம்
சூழ்ந்திட்ட கலைகள்
நற்றமிழில் சொற்கள்
நாடிவரும் கற்க!
குடும்பத்தில் கூட்டு
கொஞ்சியேதான் நாட்டு
அடும்பகையை நீக்கு
அன்புதனை ஆக்கு!
இடுக்கண்ணே இன்றி
ஈடில்வாழ் நன்று
எடுக்கின்ற செயலை
இனிதாக முடிப்பாய்!

அன்போடு பிணைப்பு
ஆறுதலாய் இணைப்பு
பண்போடு பாசம்
பரிவோடு நேசம்!



இன்போடு பேசல்
ஈடில்லா ஆசை
கண்ணோட கண்ணாய்க்
காட்சியளிக் குடும்பம்!

முனைவர்
இராம.வேதநாயகம்
திருவண்ணாமலை.



## மனிதமனம் குரங்கு.!

மனிதக் குரங்கு மனிதனாக
மாறியது! மனிதன்
மனதில் குரங்கு ஒளிந்து
கொண்டது.!

பரிணாமத்தின் வளர்ச்சி
என்றே உலகம் கருதியது.!
பரம்பரை குணமே குரங்கு
மனிதனாக மாறியது!

மனிதம் உடம்பு..
மனதுள் குரங்கு.. இதுதான்
வாழ்க்கை நகர்கிறது.!
குடும்பமாக வாழும்
குணத்தை குரங்கு
அவனுக்கு வழங்கியது!
தாவும் மனதை தத்துவம்
மூலம் மனிதம் ஆள
முயல்கிறது..!

ஆசையில் மரத்தில் ஏறி..
கனிகளைக் கடித்துத் துப்பி
வீசியது மனிதக் குரங்கு.!

நிலத்திலே உருண்டு
புரண்டு.. தேடியே கிடைத்த
பின்பு வீசியே எறிகிறது
மனிதப் பண்பு

இரண்டும ஒன்றின்
ஒன்றாய்.. இணைந்துதான்
வாழ்வு இங்கே.. இதிலே..
எங்கே சொல் இறைவன்
பங்கு.?

வே.கல்யாண்குமார்.

## புயல் வந்தது!

மனைவி
ஊருக்குப்போயிருந்தாள்
நான் நிம்மதியாக
சாய்வு நாற்காலியில்
சாய்ந்தபடி நாளிதழை
படித்துக்கொண்டிருந்தேன்
புயல் வருவதாக
டிவியில்
ஒரு அழகுப்பெண்
புன்னகையுடன்
சொல்லிக்கொண்டிருந்தாள்
யாரோ கதவை இடிப்பது



போல சத்தம் கேட்டது
கதவை திறந்துப்
பார்த்தேன்
புயல்தான் பஸ்ஸில் ஏறி
வந்துவிட்டது!

சின்னஞ்சிறுகோபு,
சென்னை.



## சூரியனின் வரவு/

நெட்டி முறித்து தூங்கும்/
குட்டி நாய் ஈரத்தரையில்

கதகதப்பாக இருந்தாலும்/
தூங்க முடியவில்லை/
மழைத்துளியின் இராகம்

குளத்தில் கிடந்த/
சூரியனை அள்ளிப்போகும்/
யாசகனின் சொம்பு

காட்டில் பாதை எங்கே/
வழிகாட்டும் பூச்சிகளின்/
இன்னிசை

தாமரை இலை/
உருண்டு விளையாடும்/
தவளைகள்

நான் அமர்ந்த/
இருக்கைக்கு அருகில்/
அழும் கைக்குழந்தை

நிற்கும் பேருந்து/
அருமையாகக் கேட்கும்/
யாசகனின் பாடல்
தூரத்தில் வெடிக்கும்/
பட்டாசுகளின் பேரோசை/
அசையும் தொட்டில்

குளித்து வந்த/
தந்தையை பின்தொடரும்/
ஈரக்காலடிச் சுவடுகள்



குளிர்ந்த உணவு/
ஆனாலும்
விசிறும்போது/
பறக்கும் ஈக்கள்

ஆர் ஜவஹர்
பிரேம்குமார்
பெரியகுளம்

## உள்ளங்கையில் உலகம்

இணையத்தில் உலகத்தை இழுத்து வந்தே
இல்லத்தில் அமர்ந்தபடி காணு கின்றோம்
புனைகதையில் படித்துநாமும் வியந்து நின்ற
பிறக்கோளில் கால்பதித்தே ஆயுகின்றோம் !
முனைப்பாகச் செயற்கைக்கோள் பறக்கவிட்டே
மூடியுள்ள புவிவளங்கள் அறியுகின்றோம்
துணையாக அறிவியலைச் சேர்த்துக்கொண்டு
துலங்காதப் புதிர்களினை விடுவிக்கின்றோம் !



கல்விதனைத் தொழிர்நுட்பக் கணினி மூலம்
கற்கின்ற முன்னேற்றம் நாமும் பெற்றோம்
பல்துறையின் அறிவுபெற்றே தொழிலின் கூடம்
பார்க்கின்ற இடமெங்கும் இயங்க வைத்தோம் !
வெல்லுகின்ற மின்னியலின் சாதனங்கள்
வீட்டிற்குள் குடிசைத்தொழில்போல் செய்தோம்
பல்விதமாய் உற்பத்தி செய்தே ஊரின்
பாதையோரம் விற்பனைக்குக் குவித்து வைத்தோம் !

நீர்தடுத்தே அணைகட்டிப் பசுமை செய்தோம்
நீரணுவில் மின்சாரம் பிரித்தெடுத்தோம்
பார்வியக்க மூலிகையில் எரிநெய் காய்ச்சிப்
பதைபதைக்கும் எய்ட்சுக்கும் மருந்தைக்கண்டோம் !
ஊர்தோறும் புதுமைகளைத் தொடங்கி வைத்தே
உள்கையில் உலகத்தை வைத்தநாமோ
போர்க்களமாய்ச் சாதிமதப் பகையால் வெட்டிப்
பெருக்குகின்ற குருதியிலே சாயுகின்றோம் !

பாவலர் கருமலைத்தமிழாழன்

## மழலைகளின் குறும்பு

சிறார்கள் சிரிப்பில்
மழைத்துளியின் வாசத்தை
உணரலாம் கள்ளம்
கபடமில்லாமல் வெள்ளை
மனதுடன் சிரிக்கும்
மழலைகளை ரசிப்போம்
குறும்பு செய்தால்தான்
அரும்புகள் என்ற மழலை
என்பதை உணர்ந்து
ரசிப்போம் சின்ன பாதத்தில்
கொலுசு அணிய வைத்து
அதில் வரும் சலங்கை
ஓசையை ரசிப்போம்
ஓடி ஓடி களைத்து
விளையாடி கண்ணயரும்
அந்த மழலைக்கு தாலேலோ
தாலேலோ என்று தாலாட்டு
பாடுவோம். மழலையர்
உலகமே உல்லாச உலகம்
குறும்பு செய்து மழலையில்
பேசும் குழந்தைகளை
ஆராதிப்போம். நம்
உலகத்திற்கு அவர்களை
அழைப்பதை விட அவர்கள்
உலகத்திற்கு நாம் சென்று
மழலைகளாக மாறுவோம்.
இன்றைய மழலைகளே
நாளைய நம் சமூகத்தின்



விருட்சங்கள்.
மழலைகளின்
குறும்பை
ரசிப்போம்...

உஷா
முத்துராமன்

# நூல் விமர்சனம்:

நூலின் பெயர்: அகஸ்திய யாத்திரை
ஆசிரியர் : சத்யப்பிரியன்
வெளியீடு : சுவாசம் பதிப்பகம்
விலை : ₹140
தொடர்புக்கு:8148066645




சமீபத்தில் என் நண்பர் தன் மனைவியோடு காசியாத்திரை சென்று வந்தார். தன்னுடைய முகநூல் பதிவில் காசியை விட்டு பிரியவே மனமில்லாது வந்ததாகக் குறிப்பிட்டார்.

அன்று அதே மனநிலையைக் கொண்டிருந்த அகத்தியரைப்பற்றி எழுத இவரை விட வேறு யார் பொருத்தமான நபராக இருக்க முடியும்.

இமயம் முதல் பொதிகை வரையிலான குறுமுனியின் யாத்திரையை பல்வேறு புராண இதிகாச சான்றுகளுடன் இங்கே சுவைபடத் தந்துள்ள சத்தியப்பிரியன்(எ)பிரபாகர் சர்மா தான் அவர்.

யாரேனும் கடும் தவம் இயற்றினாலே தன் இந்திர பதவிக்கு ஆபத்து என அதைக் கலைக்க இந்திரன் முற்படுவதை விசுவாமித்திரர் தவத்தை மேனகை மூலம் கலைத்ததை நாமறிவோம்.

தேவர்களுக்கு சேர வேண்டிய அவிர்ப்பாகத்தை விஸ்வரூபர் அசுரர்களுக்கு கொடுத்து வருவதை அறிந்த இந்திரன் கொன்றுவிட, பிராமணரைக் கொன்ற பிரம்மஹத்தி தோஷம் ஒரு சண்டாளி வடிவில் துரத்த, அதற்கு அஞ்சி இந்திரன் குளத்தின் அடியில் ஒளிந்து வாழ்ந்தான்.

இந்நிலையில் இந்திர பதவி ஏற்ற நகுஷன்,இந்திர போகத்தின் ஒரு பகுதி தானே இந்திராணி என அவளை அழைத்து வாருங்கள் என்கிறான் அவள் அந்நியன் மனைவி எனச் சொன்னாலும், இந்திரன் ஆணை அழைத்து வாருங்கள் என்றதால் பிரகஸ்பதி அவளிடம் விஷயங்களைக் கூறுகிறார்.

100 அஸ்வமேத யாகங்கள் புரிந்தவனுக்குத்தான் இந்திரப் பதவி 99 யாகங்களே புரிந்தவன், இன்னும் ஓர் அஸ்வமேத யாகம் புரிந்தால் மட்டுமே அவன் இந்திரனாக முடியும். இந்திரன் அல்லாத ஒருவன் அருகில் என்னால் அமர முடியாது என்று போய்ச் சொல்லுங்கள் என்றாள் இந்திராணி.

அப்படியும் அவன் பிடிவாதம் பிடித்தால் என்னைக் காண்பதற்கு பல்லக்கில் வரட்டும். ஆனால் ஒரே ஒரு நிபந்தனை என்றாள்.என்ன? என்பது போலப் பிரகஸ்பதி சசியை ஏறிட்டார்."எந்த வாகனத்தை, யார் சுமப்பதற்குத் தகுதியற்றவர்களோ, அவர்கள் மட்டும் சுமந்து வரும் வாகனத்தில் அவன் என்னைக் காண வரட்டும் என்றாள்.

தேவர்கள் அனைவரும் ஒன்று கூடி அகஸ்தியரிடம்,எங்களுக்காக இந்திரனின் பல்லக்கை தூக்கிச் செல்வதற்கு நீங்கள் வரவேண்டும் என்று அழைத்தனர். தேவர்களின் எண்ணம் புரிந்த அவர் சம்மதித்தார்.

ரிஷிகள் பல்லக்கைச் சுமந்து செல்வது தெரியாமல் இருக்க தேவஸ்துதிகள் சிலவற்றைக் கோஷமிட்டபடி சென்றனர்.

இந்திராணி மோகத்தில் இருந்த நகுஷனுக்கு பிராமண ரிஷிகளின் கோஷம் செவிகளைத் துளைத்தது அவர்களை அடக்கும் வேகத்தில் "அரவம்! அரவம்! அரவத்தைக் குறையுங்கள்!" என்றான் சினத்துடன்.

அகஸ்தியருக்கு வந்ததே கோபம். எங்களை ஆணையிட நீ யார்? அரவமாம் அரவம். நீ ஒரு அரவமாகப் போ! என்று சபித்தார்.(மூலத்தில் 'சர்ப்பா சர்ப்பா' என்று இருபொருள் ஒரு சொல் என்று வடமொழியில் இருந்ததை தமிழின் அழகிற்காக தானும் அரவம் என்ற இருபொருள் படும் ஒரு சொல்லைக் கூறுவதாக சற்று மாற்றி அமைத்துள்ளாராம் எழுத்தாளர்) நகுஷன் ஒரு பெரிய மலைப் பாம்பாக வீழ்ந்தான் அரவம் = சப்தம் அரவம் = பாம்பு வாழ்த்துக்கள்! நண்பரே!

ஶ்ரீகாந்த் திருச்சி

## நம்பிக்கை

சுற்றிலும் முற்றிலும்
பார்த்த பிறகே அருகே
அமர்கிறாய்! எனக்கு
ஆயிரம் ஆசைகள்
இருப்பினும்
நீ கா த லி ப் பா ய்
என்ற நம்பிக்கை மட்டும்
ஒரு காத தூரத்தில்
இருக்கிறது!

## தொடர்பு

என் எல்லாக்
கவிதைகளிலும்
நான் அழைக்காமலே
வந்து விடும் நீ நான்
கா த லி க் க ஆசைப்படும்
போதெல்லாம் மட்டும்
தொடர்பு எல்லைக்கு அப்பால்
சென்று விடுகிறாய்!

## கா த ல்

எதைப் பற்றியெல்லாம்
உனக்குக்கவிதை எழுத
வரும்? என்று கேட்கிறாய்!
எதை எழுதினாலும்
அதில் உன் கா த ல்
வந்தல்லவா ஊடுறுவி
நிற்கிறது!

## நினைத்தாலே இனிப்பவள்

சிரித்தால் பேசினால்
பழகினால் சந்தித்தால்
இனிமை தரும்
அழகிகளுக்கிடையே



நீ மட்டும்
தான்
நினைத்தாலே
இனிப்பவள்!

முத்து
ஆனந்த்
வேலூர்

நினைக்கவில்லை அவர்கள்
உணர்வுள்ள மனிதனாக
என்னை– ஆனால்
எதிர்பாரக்கின்றனர் நான்
மதிக்க வேண்டுமென்று
அவர்களது உணர்வுகளை ...
ஏற்றுக்கொள்ள முடியுமா?–



என்னால்
அவர்களை
மனிதர்களாக....

எஸ்.
சந்திரசேகரன்
அமுதா
செஞ்சிக்கோட்டை




## நிலவே...உறவே....



எனது
இருண்ட
வானத்தின்...
முழுமதி..நீ...

உனது
வெளிச்சத்தில்
இரைதேடுகின்றன... என்
கனவுகள்...

தே.சௌந்தரராஜன்
கல்யாணம் பூண்டி



## திங்கள் முதல் ஞாயிறு வரை ..!

திங்கட்கிழமை
குண்டும் குழியுமான
சாலையை அதிகாரிகள்
பார்வையிட்டார்கள் !

செவ்வாயன்று சாலையை
அளவீடு செய்தார்கள் !

புதன்...
சாலையை அடித்து
பெருக்கினர் !

வியாழன்...
குண்டும், குழியையும்
கற்களை கொண்டு
நிரப்பினர் !

வெள்ளி...
ஜேசிபி, ரோடு ரோலர் வந்து
நின்றது... சாலைப் பணி
செப்பணிடப்பட்டது !

சனிக்கிழமை...
சிறிய அளவில்
மழை பெய்தது !



ஞாயிறு....
மீண்டும்...
சாலை....
குண்டும்,
குழியுமாய்
பரிதாபமாய்
காட்சி
தந்தது!

எம்.பி.தினேஷ்,கோவை




## கலைவாணர் வாழ்கிறார் நகைச்சுவைகளில் !



ஒழுகினசேரியில் பிறந்த கலைவாணர்
உலகப்புகழ் அடைந்தார் நகைச்சுவையில்!

பாடகர் நடிகர் இயக்குனர் என
பல்கலை வித்தகராக வலம் வந்தவர்!

வாழ்ந்த ஆண்டுகள் நாற்பத்தி ஒன்பது தான்
வற்றாத புகழை வையகத்தில் பெற்றவர்!

கர்ணன் என்ற புராணகாலப் பாத்திரத்திற்கு
கண்கண்ட எடுத்துக்காட்டாக விளங்கியவர்!

மக்கள் திலகம் எம்.ஜி.ஆருக்கு வாரி வழங்கிட
மனமாற்றம் தந்து வள்ளல் குருவாகத் திகழ்ந்தவர்!

யாரையும் காயப்படுத்தாத நல்ல நகைச்சுவையை
யாவரும் விரும்பிடும் வண்ணம் வழங்கியவர்!

எல்லோரையும் சிரிக்க வைத்து மகிழ்ந்தவர்
எல்லோருக்கும் சிரிப்பின் வகையை உணர்த்தியவர்!

பகுத்தறிவுக் கருத்துக்களை பாடலில் விதைத்தவர்
பாமரரும் படித்தவரும் ரசிக்கும்படி நடித்தவர்!



மதுரத்தை மணமுடித்து மதுரமாக வாழ்ந்தவர்
மனம் மறக்காத படங்களைத் தந்தவர்!

வாரி வாரி வழங்கியே வறுமையை அடைந்தவர்
வறுமை வந்தபோதும் செம்மையாக வாழ்ந்தவர்!

வெள்ளியில் இருந்த வெற்றிலைப் பெட்டியையும்
வாரி வழங்கி வள்ளலாக வாழ்க்கையில் வென்றவர்!

அறிஞர் அண்ணாவையும் தேசப்பிதா காந்தியடிகளையும்
அற்புத வாழ்வின் வழிகாட்டிகளாக மதித்தவர்!

உடலால் உலகை விட்டு மறைந்த போதும்
உன்னத நகைச்சுவைகளில் வாழ்கிறார் என்றும்!

**கவிஞர் இரா. இரவி !**

## மிச்சமிருக்கும் நேசம்

யாரும் யாருக்கும்
கடமைப்பட்டிருக்க
விரும்புவதில்லை.

நீ நேசித்தாய்...
அதற்கு பதிலாக நானும்
நேசித்துவிட்டேன்.

நீ உதவி செய்தாய்...
அதற்கு நானும் உதவி செய்து
விட்டேன்.

ஒரு பயணத்தில் இருவரும்
சேர்ந்து நடக்கும் போது
விட்டுக்கொடுத்தலும்,
உதவி கோருவதும்,
உதவி செய்வதும் இவை
அனைத்தும் மிகவும்
இயல்பானவை. எதற்கும்
பதில் எதிர்பார்த்து
செய்யப்படுவதல்ல. இது
மனிதநேயத்தில் பிறக்கும்
இயல்பு.

ஆனால்... அந்த உதவிக்கு
பதில் செய்து கணக்கு
சரி செய்கிறேன் என்று
நினைப்பது சரியல்ல.

ஒருவரது உதவி
இதயத்தில் சிறு ஈரத்தைக்
கொடுத்து
அன்பை நிலைநிறுத்தும்
உணர்வு.

அதை உடனே "பதில் செய்து
முடித்துவிட" அவசியமில்லை.
சிறிது கடன் பட்டு
இருங்களேன் அது
உங்கள் இதயத்தில்
மனிதத்தையும் அன்பையும்
அழியாமல் வைத்திருக்கும்.

சில நேரங்களில்
விட்டுக் கொடுப்பதிலும்,
உதவி வாங்குவதிலும்,
சிறு புன்னகை பகிர்வதிலும்
தான் மனிதம் இன்னும்
மிச்சமிருக்கிறது.

எல்லா கணக்கையும்
தீர்த்து விட்டு நிம்மதியாய்
வேண்டும் என நினைப்பதில்
பயனில்லை சில கணக்குகள்
விடுபட்டு இருந்தால் தான்
அந்த கணக்குகளுக்காக
சில விடைகள்
காத்திருக்கும்
வாழ்க்கையும்
ரசித்திருக்கும்



**ஜனனி அந்தோணி ராஜ்**
திருச்சிராப்பள்ளி

## கருவி

கருவியின்றி ஏதும் இங்கே
நடக்காது!

நெம்புகோல் அன்றி
எதுவும் நிகழாது!

தெரிந்திருந்தும், 'ஏன்?' என்று
வினவுதல் வியர்த்தமே!

பொருத்தமான இடத்தில்
பணம் எனும் கருவியும்;

உகந்த தருணத்தில்
ஒரு சொல் என்ற
நெம்புகோலும்;

வேலைக்காரன் செய்ய
இயலாதவை

வேளைக்காரனால் இயலும்




## திருஅண்ணாமலை போற்றி

அண்ணாமலையின் அடிசுற்றி
உண்ணா முலையாள்
அடிபற்றி, மண்ணால் செய்த
விளக்கேற்றி, எண்ணெய்த்
திரியின் ஒளி போற்றி! /

மலையான் மகளின்
கரம் பற்றி , சிலையில் ஆடும்
சிவம் போற்றி, அலையில்
திரியா அகம் பற்றி,
நிலையாய் நிற்கும் இறை
போற்றி!

மலையில் சிலையில் திரி
சுற்றி , மலையில் தீப ஒளி
ஏற்றி மலையே சிவமாய்
மனம் பற்றி, மலையைத்
தொழுவோம் தினம்போற்றி!


**திருமதி. இரா இராஜாமணி**
ஈரோடு

## திருமுகம் !

ஆறு மாமாங்கம்
இடைவிடாது
தேடிக் கொண்டிருக்கும்
கனவில் தோன்றிய
அந்தத் திருமுகம்
இன்னும் கண்ணில்
தென்படாமல் போக
மனதில் நம்பிக்கை
இழக்காமல் முயன்று வரும்
அந்த தொன்னூறு வயது
முதியவர்
கடைசியில்
புளகாங்கிதம்
அடைந்தார்
அதே முகத்தை
மீண்டும்
கனவில்
கண்டு !



**வி.கே.லக்ஷ்மிநாராயணன்**



## புயல் சின்னம்....

பெருமழை
சூறைக்காற்றுடன்
சிறைவைக்க....

எங்கெங்கும் உன்... முகம்...
நினைவுகள் நிறைக்கிறது...

பேரன்பின் சூட்டில்...
கொடுங்குளிரும்....
அனலடிக்கிறது...

புயலையும் மீறி என்னைத்
திணறடிக்கிறது....

காதலில் மையம் கொண்ட...
நாம்... கரை சேர்வது
எப்போது?

கனமழை...கடுஞ்சூழலிலும்...
இலக்கு அது தப்பாது...

**தே.சௌந்தரராஜன்**
கல்யாணம் பூண்டி

## அழுத்தமும்... சீற்றமும்...

மேனி சிலிர்க்க வைக்கும்...
தென்றலும்...

அழுத்தம் மிகுதியில்
சீற்றமாகும்...

சுக பயண வாழ்க்கையை
புரட்டிப் போட்டு
விடுகின்றன...

மனதின் அழுத்தங்கள்....

காற்றின் அழுத்தங்களில்
மேலெழும்புகிறது... கடல்...

ஆட்டிப் படைக்கும்
அழுத்தங்களில்....
வீறு கொள்கிறது... மனம்...

**தே.சௌந்தரராஜன்**
கல்யாணம் பூண்டி



## விதை

குருவிகள் தின்ன
அரிசியை வைத்தேன்.
வாடிய செடிகளுக்கு
நீர் பாய்ச்சினேன்.
முதியவர்
சாலையைக்
கடக்க
உதவினேன்.
பூரணமானது
ஓர் நாள்
எனக்கு!




**கே. பி. ஜனார்த்தனன்**

## பனி விழும் நந்தவனம்

வெண் முத்துக்கள் போல்
மலர்களில் அமர்ந்திருக்கும்
பனித்துளியே...
கதிரவன் வரும் வரை நீ
களங்கம் இல்லாமல் சிரித்துக்
கொண்டிரு. கதிரவன் வந்து
விட்டால் உருகி மண்ணை
தொட வேண்டி இருக்கும்
அதற்குள் மலர்களுடன்
மௌன மொழி பேசி
ரசித்து விடு உன் சிரிப்பில்
நாங்கள் மகிழ்கிறோம்
நந்தவனத்தில் உள்ள
விருட்சங்களில் உனக்கு
எல்லாம் பிடித்திருப்பதால்
அனைத்திலும் அமர்ந்து
விடுகிறாயோ?
பாரபட்சம் இல்லா உன் மனம்
நான் அறிவேன் உன்னை
ரசிக்கவே நந்தவனத்திற்கு
ஆதவன் வருவதற்கு முன்
நான் வந்து விடுவதை
நீ அறிவதால் என்னவோ
முத்துக்கள் தெரிய என்னை
பார்த்து சிரிக்கிறாய்...
உன் சிரிப்பை
ரசிக்க
தெரிந்தவர்
காண்பது
சொர்க்கம்.



**உஷா முத்துராமன்**



பகல் கனவு பலிக்குமாம்
எல்லா கனவுகளிலும்
நீயே வந்த பிறகும்
எனக்கு சொந்தமில்லாமல்
போனாய் எப்படி??

பாப்பா, குட்டிமா, அம்மு,
செல்லம், பேபி,புஜ்ஜி,டோரா
போன்ற வார்த்தைகள்
உன்னை அழைக்கும் போது
மட்டுமே அழகாகிறது!


என்ன வேண்டுமென்கிறாய்?
காதலித்து தொலைவதை
தவிர வேறென்ன வேண்டும்!

மழைக்கு பின் தோன்றும்
வானவில்–அந்த
வானத்தை மேலும்
அழகாக்கிறது மயிலே
வறண்டு போன என்
வாழ்க்கையை வனமாக்க
நீ வந்தால் தான் என்ன!

பாழாய் போன ஆசைப்படும்
அந்த அல்ப மனசுக்கு
சொல்லி விடுங்கள்.
உங்கள் எண்ணங்கள்
ஒரு போதும் ஈடேற
போவதில்லை கண்களை
மூடி கனவெல்லாம்
காணாதீர்கள் ஏனென்றால்
கடவுள் கொடூரமானவன்
அவன் ஒரு போதும்
உங்கள் வாழ்க்கையை
உங்கள் விருப்பப்படி
விட போவதில்லை!

ஆசைகளெல்லாம்
நிராசைகளாகத் தான்
போகும் கனவு காணாமல்
கண்களை மூடி
உறங்க மட்டும் செய்யுங்கள்!

பிரிந்து சென்ற பின்பும்
முறிந்து போகாமல்
நம் நினைவுகளை
நம்மை
போலவே
ஞாபகங்களோடு
சுற்றி
திரிகிறது
அந்த
மஞ்சணத்தி
மரம்!



**லி.நௌஷாத் கான்**



## புகையிலை புகைக்கையிலே

மனிதா!

புகையிலையை வாயில்
துறுத்தி உனது வாழ்வினை
மரண வாயிலில்
நிறுத்திக்கொள்ளாதே!

புகையை விட்டு நீ
புகையாகிப் போவதோடு
உன் சுற்றத்தாரையும்
புகைக்கூண்டில் பூட்டாதே !

புகையிலையை மென்று
சுவைக்கையில் மெல்ல
மறந்து போகும் உலகம்

நாளை உன்னையும் மறந்து
போகும் இவ்வுலகம்
நினைவில் கொள்

புகையிலையோடு
உறவாடுவதும்
மரணத்தின் மடியில் தலை
சாய்வதும் ஒன்றுதான்

புகையிலையைப்
புறக்கணிப்போம்

நலமா நலமா என்ற ஒற்றை
வார்த்தையில் கரைகிறது
கல்நெஞ்சும்...

**கவிஞர் பாலசந்தர்**
மண்ணச்சநல்லூர்



## கடல் நீர்

மூன்று பங்கு கடல் கொண்ட நாடு ஒரு பக்கம் மலையால்
சூழ்ந்தது நாடு இவைகள் நாட்டுக்கு இயற்கை அரணாகும்

கடல் நீர் ஆவியாகி நீ ராவி யாகும் கார்மேகமாக வான
வீதியில் வல காற்றில் தவழ்ந்து மிதந்து வரும் வரும் மேகம்

மரம் காதலியை குளிர் பார்வை வீசினால் மேக காதலன் நில
மகள் மீது மழையாக கொட்டோ கொட்டென
கொட்டும் கொட்டும்

வான் கொடையால் நிலமகள் மனம் மகிழ்வாள்
மேக காதலின் காதல் பரிசு வான் மழை நின்ற
நில மகள் தெளிவடைவாள்

மேக காதலன் அவசரப்பட்டு பெரிய நீர்க்கட்டி
நீரிடியாகும் சிறு சிறு நீர்க்கட்டிகள் அத்தி கட்டி
ஆலங்கட்டி ஆகும் ஆகும்

காதல் பரிசை காதலன் கொட்டி தீர்ப்பான் உலக
உயிரினங்கள் யாவும் அடிப்படை தேவைகளை
பூர்த்தி செய்து வாழும் வாழும்

## பெண்ணை எழுப்புதல்

ஏ புள்ள மீனாட்சி எழுந்திருடி நேரம் ஆச்சு
செப்பலு ஓடிடுச்சு நிலமும் தெரிஞ்சிடுச்சு
குத்து சத்தம் அடங்கிடுச்சு புடைக்கும்

சத்தம் கேட்டிடுச்சு சேவல் சத்தம் அடங்கிடுச்சு கோழி
சத்தம் கேட்டுடுச்சு இப்போ கேட்டுடுச்சு கண்மணியே
பெண்ணே எழு

வீட்டு முற்றத்தைக் கூட்டி சாணி தெளிச்சி உன்ன
கோலங்கள் போட்டு பூவை வைத்து விட்டாள் சீதேவி
வந்துடுவாள் கண்ணே

தங்கமே வையகமே தரமிகுந்த பொண்ணே வையகத்தில்
வாழ்வாங்கு வாழ அதிகாலை எழ வேண்டும் பொண்ணே

செழிப்பாகும் செல்வம் பெருகும்
நமக்கு வளமாகும் வசதி பெரு கும் பெரியவர்கள் சொன்ன
தெல்லாம் நல்லாதான் நடக்கும்



நோயற்ற வாழ்வே குறைவற்ற செல்வம்
அதிகாலை எழுந்தால் நாம் நலமாகவும்
வளமாகவும் வையகத்தில் வாழலாம் எழு

**பேராசிரியர் முனைவர் வேலாயுதம் பெரியசாமி**



## அழகு

நீ செய்யும் எல்லாமே அழகு
தான் அன்பே! அதில் ஒன்று
நிலுவையில் வைக்காமல்
எல்லா முத்தங்களையும்
திருப்பிக் கொடுத்து விடுவது!

## மதிப்பு

உன் புன்னகைக்கு
விலையாக நீ என்
கா த லை க்கேட்ட போது
தான் தெரிந்தது
அதன் மதிப்பு!

## கேள்வி

துணைக்கு வரவா? என்று
உன் இதழ்கள் கேட்கிறது!
உன் கண்களோ
இணைய வரவா?
என்று கேட்கிறது!

## உண்மை

விதைப்பது தானே
முளையும் என்று
உதட்டைச் சுழித்துச்
சொல்கிறாய்!
உண்மை தான் அதை நீ
கணக்கில்லாமல்
மு த் த ங் க ளி டு ம் போ தே
நான் கண்டுபிடித்து
விட்டேன்!

## களவாணி

கள்ளச் சிரிப்பு
களவாணித்தனம்
ஓரப் பார்வை
உதட்டுச் சுழிப்பு
அடடடடடடடடடடா....
இந்தக் காதல்
எப்படிப் பார்த்தாலும்
அழகாகத்தான்
இருக்கிறது!

## நடிப்பு

நம் நெருக்கத்தில் நீ
மேனா மினுக்கியாக
இருந்தாலும்
சந்திக்கும் போது
ஆரம்பத்தில் என்னவோ
மிகவும் அடக்கித்தான்
வாசிக்கிறாய்!

## பாடம்

கா த ல் நம் இருவருக்குமே
புதுப் பாடம் தான்!
வா........ என் இனிய
உயிர்க்காதல் அன்பே
கலந்தே கற்றுக் கொள்வோம்!

## பிடிக்கும்

உனக்குக்கா த ல்
ரொம்பப் பிடிக்குமாமே!
எனக்கும் கூட
அதைத் தவிர
வேறெதுவுமே பிடிக்காது!

## எச்சரிக்கை

போலிகளைக் கண்டு
ஏமாறாதீர்கள் என்று
எச்சரிக்கிறார்கள்!
ஆனால் – எனக்கு நீ
எப்பொழுதும் புடம் போட்ட
தங்கம் தானே அன்பே!

## மகிழ்ச்சி

உனக்கு என்னென்ன
பிடிக்கும்? என்று
கேட்கிறேன்!
நீ எதையெதையோ
சொல்கிறாய்! அதில்
முதலில்
என் பெயர் தான்
இருக்கிறது!



**முத்து ஆனந்த்** வேலூர்



## வனவாசம் !

வனவாசம் விரும்புகின்றது என் மனம்
வனத்தில் சுவாசம் எங்கும் நல்ல வாசம் !

நாட்டில் வாழும் மனித மிருங்கங்களை விட
காட்டில் வாழும் மிருங்கங்கள் கொடியதன்று !

பசுத்தோல் போர்த்திய புலிகள் பெருகிவிட்டன
பண்பாளர்கள் எண்ணிக்கை குறைந்துவிட்டன!

வனத்தில் சாதிமதச் சண்டைகள் இல்லை
வனத்தில் ஏற்றத் தாழ்வுகள் இல்லை !

உண்ணும் உணவிற்கு பஞ்சம் இல்லை
ஒருவரும் பொல்லாங்கு பேசுவது இல்லை !

விலங்குகளுடன் நட்பாக வாழலாம்
பறவைகளுடன் நன்கு பழகி மகிழலாம் !

செயற்கை உணவுகள் அங்கு இல்லை
சிதைக்கும் நோய்களும் வருவதில்லை

கோடிகள் கொள்ளையடிக்கும் கூட்டம் இல்லை
கேடிகளின் அடாவடி அங்கு இல்லை !

தொல்லைதரும் தொலைக்காட்சி இல்லை
துன்பங்கள் துயரங்கள் அங்கு இல்லை !

வரப்புச்சண்டைகள் அங்கு இல்லை
வாய்க்கால் சண்டைகள் அங்கு இல்லை !

பெட்ரோல் அங்கு தேவையே இல்லை
பெரும் தொல்லை இல்லவே இல்லை !

மாசுக்காற்று காட்டில் இல்லவே இல்லை
மக்காத குப்பைகளும் அங்கு இல்லை !

வனவாசத்திற்கு யாரும் வருந்த வேண்டாம்
வனவாசம் மனதிற்கு மகிழ்ச்சி தரும் !

**கவிஞர் இரா .இரவி !**

# வாசகர் கடிதம்

திட்வா புயல்
சென்னையை
நெருங்குகிறது.
சென்னையில்
முன்னெச்சரிக்கை
நடவடிக்கையாக
வெள்ள நிவாரண குழு
அமைக்கப்பட்டது.
புதுச்சேரியில் விஜய்
ரோடு ஷோக்கு
அனுமதி மறுப்பு
. அல்லி மலரின்
மகத்துவம் பற்றிய
கட்டுரை சிறப்பாக
அமைந்தது
தமிழகத்தில் 4 லட்சம்
வாழை மரங்கள்
புயல் மழையால்
சேதமடைந்துள்ளது
தமிழகத்தில் 14
மாவட்டங்களில்
கனமழை எச்சரிக்கை.
நீ மனிதனாக இரு என்ற
கட்டுரை பிரமாதம்
. இந்த வார ராசி
பலன்கள் துல்லியமாக
இருந்தது. பரந்தூர்
விமான நிலையத்திற்கு
நில ம் கையகப்படுத்தும்
பணி தீவிரமடைந்து
உள்ளது . மதுரையில்
மல்லிகைப்பூ கிலோ
4 500 ரூபாய்க்கு
விற்பனை.
சித்தராமையா சிவகுமார்
சண்டை எப்போது
தீரும்.
இலங்கை புயலுக்கு 123
பேர் பலி
இலங்கையில் 300
இந்தியர்கள் சிக்கித்
தவிப்பு

காதல் கவி வேந்தன்
முத்து ஆனந்த்
அவர்களின் காதல்
கவிதைகள் சிறப்பாக
உள்ளது. காதல்
வயப்படாதவர்கள்
இவரது கவிதையை
படித்தால் நிச்சயம்
காதல் வலையில்
விழுந்து விடுவார்கள்.
இவர் வேலூர்
மத்திய சிறையில்
வேலை பார்த்துக்
கொண்டு நம்மை காதல்
சிறையில் அடைத்து
விடுவார் போல.

வழக்கம்போல
இன்றைய செய்திகள்
அனைத்தும்
அருமையாக உள்ளது
கவிதைகள் கட்டுரைகள்
ஆன்மீக செய்திகள்
அனைத்தும் தரமாக
உள்ளது. தமிழ்நாடு இ
பேப்பர் குடும்பத்திற்கு
நெஞ்சார்ந்த
வாழ்த்துக்கள்.

மீண்டும் நாளை
சந்திப்போம்



-நடேஷ் கன்னா
கல்விடைக்குறிச்சி

டிட்வா புயலாகவே
சென்னையை
நெருங்குகிறது#வானிலை
தென்மண்டலதலைவர்=54
விமானங்கள் ரத்து +9
துறைமுகங்களில் 4ம்
எண் எச்சரிக்கை கூண்டு
ஏற்றம்+மீட்பு பணியில் 54
தேசிய பேரிடர் குழுக்கள்
ஆபரேஷன் சிந்தூர் சிவில்
ராணுவ இணைப்பிற்கு
ஒரு சிறந்த எடுத்துக்
காட்டு#அமைச்சர்
ராஜ்நாத்சிங்
விரைவு ரயிலில் 62.50
லட்சம் ஹவாலா பணம்
சிக்கியது#ஒருவரிடம் துருவித்
துருவி விசாரணை
புதுச்சேரியில் விஜய்
ரோடு ஷோவுக்கு அனுமதி
கிடைக்குமா #ஏமாற்றத்துடன்
புறப்பட்ட புஸ்ஸி ஆனந்த்
தமிழகத்தில் இதுவரை 3.5
லட்சம் வாழை மரங்கள்
சேதம்#நிவாரணம் வழங்க
கோரிக்கை
பட்ஜெட் விலையில் ரியல்மி
சி 85 ஸ்மார்ட் போன்
எஸ் ஐ ஆர் #2002/05
வாக்காளர் பட்டியலில்
பெயரைக் கண்டறிய் முடியா
விட்டாலும் படிவம்
சமர்ப்பிக்கலாம்
திருச்செந்தூர் அருகே
படகில் சென்று வாழைத்
தார் அறுவடை செய்த
விவசாயிகள்
புதுக் கவிதைகளின்
அலங்காரம் அமர்க்களம்
நூல் விமர்சனம் வெகு
நேர்த்தி
வாசகர் கடிதங்கள் அருமை
டிட்வா புயல் எச்சரிக்கை
முன் ஏற்பாடுகள்
என்னென்ன#அமைச்சர்
கேகேஎஸ் எஸ் ஆர்
விளக்கம்
பீஹார் தொழிலாளிக்கு
கை மாற்று அறுவை
சிகிச்சை#டாக்டர்களுக்கு
முதல்வர் ஸ்டாலின் நேரில்
பாராட்டு
சபரிமலை வனப் பகுதிக்குள்
வழி தவறும் பக்தர்களை
மீட்க உதவும் அய்யன்
செயலி
போலிசாரால் தேடப்பட்ட
எல் என் எஸ் நிதி
நிறுவன நிர்வாகி
கைது#துபாயிலிருந்து வந்த
போது பிடிபட்டார்
தொடர் பனி, மழை
எதிரொலி#மதுரை மல்லி
ஒரு கிலோ ரூ.4500க்கு
விற்பனை
அரவக் குறிச்சி: காதலித்து
வந்த பள்ளி மாணவியின்
கழுத்தை பிளேடால் அறுத்த
காதலன் தற்கொலை
NDRF பணியாளர்கள்
நிவாரணப் பொருட்களுடன்
இலங்கை சென்றது இந்திய
விமானப்படை விமானம்
முதல்வர் பதவி கட்சி
மேலிட கட்டளைக்கு
கட்டுப்படுவோம்#டிகே
சிவகுமார்
& சித்தராமையா
கூட்டாக அறிவிப்பு
இம்ரான்கான்
உயிரோடிருப்பதற்கான
ஆதாரங்களை
வெளியிடுக#மகன்
காசிம்கான் பாக். சிறை
நிர்வாகத்திற்கு வலியுறுத்தல்
டிட்வா புயலால் 300
இந்தியர்கள் இந்தியர்கள்
சிக்கித் தவிப்பு#விமான
சேவை ரத்து எதிரொலி
வெளிசுலா வான்
பரப்பை பயன்படுத்த
வேண்டாம்#விமான
நிறுவனங்களுக்கு டிரம்ப்
எச்சரிக்கை



-பி.சுரேகா
சென்னை













வணக்கம்.
தமிழ்நாடு இ
பேப்பர் 30.11.25
அன்றைய நாளிதழில்
டிட்வா புயலாகவே
சென்னையில்
நெருங்குகிறது என்ற
செய்தி அதிர்ச்சியாக
இருந்தது.. இன்றைய
பஞ்சாங்கம் மிக
அற்புத நாளாக
இருக்க எனக்கு
உதவியது
மனம் நிறைந்த
பாராட்டுக்கள்.

சுவாமி அம்பாள்
சிம்மாசனத்தில்
திருக்கோவில் பலம்
என்ற படங்கள் மிக
அற்புதம். இன்றைய
திருக்குறள் மிக
அருமையாக
இருந்ததால்
ஆவலுடன் படித்து
ரசித்தேன்.

இன்றைய நலம்
தரும் மருத்துவம்
பகுதியில் அல்லி
மலரின் மருத்துவம்
ரகசியம் என்று
தெரியாத செய்தியை
படித்து மகிழ்ந்தேன்.
பாராட்டுக்கள்.

திருவண்ணாமலையில்
கார்த்திகை தீபத்
திருவிழாவில் ஆறாம்
நாள் வெள்ளி யானை
வாகனத்தில்
சந்திரசேகர்
வீதி உலா வந்த
செய்தியும் படமும்
மிகவும் அருமை.
திருவண்ணாமலைக்கு
சென்றது போல
ஒரு உணர்வை
கொடுத்தது.

தினம் ஒரு
தலைவர்கள் பகுதியில்
வந்த சாவித்திரி தேவி
முகர்ஜி வரலாறு
மிகவும் அற்புதம் இது
போன்ற பெண்களின்
வரலாறுகளை
படிக்கும் போது
மனதுக்குள்
தன்னம்பிக்கை
வருவது உண்மை.

பல்சுவை களஞ்சியம்
பகுதி மிகவும்
அருமை மீம்ஸ்
விடுகதை ஜோக்ஸ்
எல்லாமே மனதை
கவருபவையாய்
இருப்பதால்
ஆவலுடன் படிக்கத்
தோன்றுகிறது.

ஜோதிடம் அறிவோம்
பகுதியில் வந்து
கல்வி தரும்
கும்பேஸ்வரர் செய்தி
மிகவும் அற்புதம்
பாராட்டுக்கள்.

மதுரை மாநகரில்
ஓய்வூதியக் கிளை
சார்பில் பாராட்டு
விழா நடந்த
செய்தியும் படமும்
மிகவும் அருமை.
அந்தப் பக்கத்தில்
வரும் அனைத்து
அரசியல் செய்திகளும்
மிகவும் அற்புதமாக
இருப்பதால் என்ன
நடக்கிறது என்று
புரிந்து கொள்ள
முடிகிறது.

சுற்றுலா பக்கத்தில்
வந்த. சுற்றுலா
செல்வதற்கு சிறந்த
இடங்கள் என்று
சென்னையில்
இருப்பவற்றை மிக
அழகாக சொன்னது
அருமை. ராசிபலன்
மிக அருமையாக
இந்த வாரம் எப்படி
இருக்கும் என்று
சொன்னது.

கிரைம் கார்னர்
படிக்கும்போது
திகிலாக இருந்தாலும்
நாம் சமூகத்தில்
விழிப்புணர்வுடன்
இருக்க வேண்டும்
என்ற ஒரு நல்ல
தகவல்களை
கொடுப்பதால்
ஆர்வமுடன் படிக்க
வைக்கிறது.

முதல்வன் பதவி
விவகாரம் என்று கட்சி
மேலிட முடிவுக்கு
கட்டுவோம் என்ற
சித்தராமையா
அவர்களும்
சிவகுமார் அவர்களும்
அறிவித்த பெங்களூர்
செய்தியை படித்து
பெங்களூருக்கு என்
மனம் சென்று விட்டது.

நம் இந்தியாவை
மட்டும் அல்ல
இலங்கையும்
புரட்டிப்போட்ட
புயல் என்று அங்கு
நடந்த செய்திகளை
பார்க்கும்போது
அதிர்ச்சியாக
இருக்கிறது.

கடைசி பக்கத்தில்
அயல்நாட்டு
செய்திகளை மிக
அருமையாக
தொகுத்துக்
கொடுத்து நல்ல
நல்ல பணிகளை மிக
அற்புதமாக விடியலில்
செய்யும் தமிழ்நாடு இ
பேப்பரின் ஆசிரியர்
குழுமத்திற்கு
மனமார்ந்த
பாராட்டுக்கள்.




-உஷா முத்துராமன்


FREE MARRIAGE
INFORMATION CENTER :
இலவச திருமண
தகவல் மையம்
இலவச திருமண தகவல் மையம்
யாருக்கும் பணம் தர தேவை இல்லை
பணம் வங்கும் புரோக்கர்கள் தவிர்க்கவும்
www.enthuani.com
Call: 9337501889


We Are Urgently Hiring!
Marketing Manager
Ad Sales (Print Media)
Package
Rs. 4.8 LPA
Company : PADMA DIGITAL BROADCAST PRIVATE LTD
Location : Chennai
Padma Digital a leading name in print media, is looking for a Marketing Manager – Ad Sales to join our dynamic team.
Key responsibilities for Marketing Manager
• Minimum 5 years of experience in print media ad sales
• Proven experience in space selling
• Strong background in field sales and client acquisition
• Excellent communication and negotiation skills
• If you're a results-driven professional with a passion for media sales, we want to hear from you
If you are interested
Do send your resume and portfolio to
padmamediapublications@gmail.com
Call: 9337501889


PADMA
MEDIA HOUSE
Best Newspaper
Advertising Agency
Matrimonial
Property
Recruitment
Business
Announcements
Obituary
Public Notices
Education
CONTACT : +91 81227 98599


தமிழ்நாடு
இ பேப்பர்.காம்
www.tamilnaduepaper.com
tamilnaduepaper@gmail.com
தமிழகம் முழுவதும் மாவட்டம் தாலுக்கா வாரியா
தேவை
நிருபர்கள்
புகைப்படக் கலைஞர்கள்
ஏஜெண்டுகள்
Call: 9337501889


CREATE YOUR
PROFILE
WITH US
& SCALE YOUR CAREER
SEND YOUR CV AT -
MKPLACEMENT@GMAIL.COM
FIND AMAZING JOB OPPORTUNITIES WITH US!!


GREAT OPPORTUNITY
AT
ALL OVER TAMILNADU
Marketing Executive
SALARY Rs.15000/-
+ Incentive
+ Petrol Allowance
vilambarampage@gmail.com
7789941009


WORK FROM
HOME
Extra
Income
Part Time
Full Time
AN OPPORTUNITY THAT ROCKS!!!
BE YOUR OWN BOSS
› Work 1-4 Hours / Day
› Training / Support Provided
› No Experience / No Qualification
Who Can Work - 18 Years & Above
Housewives
Retired Persons
Students
Professionals
Businessman
Employees
9337501889
7789941009

## S.K FIRE EQUIPMENTS

YOUR GUIDE TO
FIRE SAFETY EQUIPMENT

CHOOSING THE RIGHT TOOL
FOR YOUR NEEDS



Call Us Now?
936070566

NO-145 THIRUVOTTYUR HIGH ROAD HIGH
SKP COMPLEX TONDIARPET CHENNAI 600081

---

## ஆட்கள் தேவை

கோவை டவுன்ஹால் வைசியாள் வீதி போலீஸ் ஸ்டேசன் அருகில் இருக்கும் அரிசி மொத்த வியாபாரம் கடைக்கு கடையில் பணிபுரிய +2 முடித்த ஆண்கள் தேவை

வேலை நேரம்
காலை - 8.45 AM
மாலை - 8.15 PM
ஞாயிறு விடுமுறை

90039 92134

---

Euro Kids
Pre-School
Right Start, Flying Start!
Tondiarpet
9940661625
Introducing
HEUREKA
THE VISIBLE THINKING CURRICULUM
based on Harvard's Project Zero
Admissions Open
for AY 25-26
EuroTots | PlayGroup | Nursery | EuroJunior | EuroSenior



23+ Years of Experience
1,600+ Pre-schools
TUV Nord Safety Certified

No. 19/20, Kummalamman Koil Street, Tondiarpet, Chennai - 600 081
a part of LIGHTHOUSE LEARNING GROUP

---

## GODOWN FOR RENT

NEW GRADE-A WAREHOUSE
20,000 sqft
Location: Salem
- 12th KM Salem - Chennai NH
- Ample Truck Parking
Dock Leveller

72000 51508

---

## WANTED

YELLOW FOREST FURNISHINGS
RS Puram, Coimbatore

ASST PROJECT CO-ORDINATOR
Training will be given

PROJECT MANAGER
Experience in Interior Field Preferred. Liasoning with Architects and Institutional Customers

Attractive Salary + Incentive + Bonus

Whats app Resume
98424 09490

---

## WANTED

GENERAL MANAGER
For An Security Agency In Coimbatore

- Qualification : Any Degree with Minimum 5 years experience in the related field.
- Age: Below 55 Years
- Salary: Rs.40,000/- per Month

Send your Resume to:
94889 44796
74484 64001
snoufalrizwan2009@gmail.com

---

கோவை பீளமேட்டில் உள்ள
லேடிஸ் ஹாஸ்டலில் பணிபுரிய
★ சமையல் மாஸ்டர்
★ CARE TAKER/ LADY SECURITY
வீட்டில் பணிபுரிய
★ சமையல்காரர்
★ தோட்ட பராமரிப்பு
மற்றும் செக்யூரிட்டி தேவை
தங்குமிடம், உணவு இலவசம்
98947 73431

---

## WANTED

DELIVERY BOY
Two wheeler Licence must

Plenum Info Sys
Singanallur
96887 48510

---

## WANTED

For a Sheet Metal Fabrication Company in Malumichampatti
✷ Welders
✷ Welding Contractors
Experience in Sheet Metal Welding.

Contact :-
99405 15121

---

S.R Call Drivers

S.R
Call Drivers Travels
24 Hours
Man Power & All Vehicle Available
Prop. S.SRIRAM



Contact: 95513 81576 / 86086 22056
True Work is Our Capital
No.89/49, E.H.Road, Cornation Nagar, K.Pet, Ch-21.

---

## ஆட்கள் தேவை

நாகர்கோவில் to திருநெல்வேலி வீட்டுமனைகள் விற்க ஆண் பெண் தேவை.

6385434442

---

ரப்பர் வெட்டும் தொழிலாளர்கள் குடும்பத்துடன் தேவை
பாலக்காடு, கேரளா
தங்கும் வசதி உள்ளது
94477 69114 | 044 - 6378118

---

## WANTED

AAIFA BUILDERS
Job location: karungal and marthandam

1. CIVIL ENGINEERS Male and Female (experience and freshers. 20 nos)
2. 3D AND 2D DESIGNER Male and Female
3. OFFICE ADMIN (any Master Degree) Male and Female
4. MARKETING EXECUTIVE Male and Female

Gmail: agnesjerlin55@gmail.com Whatsapp: 99402 43322

---

## WANTED

PERSONAL DRIVER
Automatic & Manual Gear
Experience Minimum 6 Years
Vacancy : 5 | Male
Salary Above ₹ 25,000*
Walk-in Interview Date 24-11-2025, Monday
Time : 10.30 am to 1.30 pm, 4.00 pm to 7.00 pm
VENUE : RAJAN & Co.
Mob. 9487871915
ராஜன் & கோ


---

## DRIVERS WANTED

பள்ளி வாகனம் ஓட்ட டிரைவர்கள் தேவை
NEAR ANJUGRAMAM
Contact No:
9840391231

---

FINDING THE PERFECT HOUSE YOU CAN CALL HOME




+91 9884417843

---

## சேல்ஸ்மேன்கள் தேவை

ஸ்நாக்ஸ் ஏஜென்ட்-ல் பணிபுரிய அனுபவம் உள்ள சேல்ஸ்மேன்கள் தேவை.
.......நேரில் வரவும்.......
வயது : 25 முதல் 40 வரை
சம்பளம் : 20,000 + இன்சன்டிவ்

Contact No :
9952704949, 8903224949
திரவியம் ஆஸ்பத்திரி பின்புறம், புரவசேரி

---

SHEMFORD LITTLE STARS
Joshua Street,
Opposite to CSI Matriculation School,
Vettoornimadam, Nagercoil-3

WE ARE HIRING
OPEN POSITION
COMPUTER OPERATOR
Literacy skill-Tamil, English, Hindi
Contact: 9443049882

---

## ஆட்கள் தேவை

ஏஜென்சியில் பணிபுரிய
★ சேல்ஸ்மேன்
சம்பளம்: ரூ.10,000 + ரூ.100 +Incentive
★ ஹெல்ப்பர்
சம்பளம்: ரூ.10,000 + ரூ.100
நேரில் வரவும். 9 am to 6 pm
தியான் ஸ்டோர்ஸ்
42/1, அசம்பு ரோடு, CBH எதிரில், வடசேரி, நாகர்கோவில்.
செல்: 8110081165
9488888898



# பல்சுவை களஞ்சியம்



# தெய்வம் தந்த வீடு

நம் உடல் ரகசிங்களைப்பற்றி அறிவோம்...

பூரண ஆயுள் என்பது 120 ஆண்டுகள் ஆரோக்கியமாக வாழ்வது.

ஒரு தலைமுறை என்பது 33 ஆண்டுகளைக் குறிக்கும்.

மனித முகத்தில் 14 எலும்புகள் உள்ளன.

மனித மூளையில் 6 கிராம் அளவிற்கு தாமிரம் உள்ளது.

ஒரு மனிதனின் உடலிலுள்ள நரம்புகளின் மொத்த நீளம் சுமார் 72 மீட்டர்.

நமது ரத்தம் ஒரு நாளில் 30 கோடி கி.மீ பயணம் செய்கிறது.

நுரையீரல் ஒரு நாளைக்கு 23,040 முறை சுவாசத்தை உள்ளெடுத்து வெளியே செலுத்துகிறது.

நமது இதயம் ஒரு நாளில் 1,03,689 முறை துடிக்கிறது.

மனிதனின் நாக்கில் உள்ள சுவை அறியும் செல்களின் எண்ணிக்கை மூன்று ஆயிரம்.

உடலில் உள்ள மின்சாரத்தின் அளவு 25 வாட்.

ஒரு சராசரி மனிதனின் உடலில் ஓடும் ரத்தத்தின் அளவு 5 லிட்டர்.

கைரேகையைப் போலவே நாக்கில் உள்ள வரிகளும் ஒவ்வொருவருக்கும் வேறுபடும்.

மனித உடலில் சதை அழுத்தம் அதிகம் உள்ள பகுதி நாக்கு.

கண் தானத்தில் கறுப்பு விழிகள் மட்டுமே அடுத்தவருக்குப் பொருத்தப்படுகின்றன.


900 பென்சில்களைத் தயாரிக்கும் அளவிற்கு மனித உடலில் கார்பன் சத்து இருக்கிறது.

மனித உடலில் மிகவும் பலமான பகுதி விரல் நகங்களே. அதில் கெராடின் சத்து உள்ளது, இது காண்டா மிருகத்தின் கொம்புகளில் காணப்படுவதாகும். மரணத்திற்கு பிறகும் கூட மனிதனின் நகத்திற்கு ஒன்றுமே ஆகாது....

அதிசயங்கள் நிறைந்த மனித உடல்...

மனிதன் தூங்கிக் கொண்டிருக்கும் போது அவருடைய உயரம் 8 mm அதிகரிக்கும், தூங்கி எழுந்தப் பிறகு மீண்டும் பழைய உயரமே இருப்பார்.

இதற்கு காரணம் மனிதன் உட்காரும் போது அல்லது நிற்கும் போது புவி ஈர்ப்பு விசையின் காரணமாக எலும்புகளின் மீது ஏற்படும் அழுத்தமாகும்.



ரத்த நாளங்கள், செல்கள் :-

1 நமது உடல் எடையில் 14 சதவிகிதம் எலும்புகளால் ஆனது, 7 சதவிகிதம் ரத்தம் ஆகும்.

2. நுரையீரலில் 300,00 மில்லியன் ரத்த நாளங்கள் உள்ளன. இவை அனைத்தும் ஒன்று சேர்க்கப்பட்டால் அதன் நீளம் 2400 கிலோமீட்டராக இருக்கும்.

3. ஒவ்வொரு சிறுநீரகமும் ஒரு மில்லியன் வடிகட்டிகளை (Filters) கொண்டுள்ளது. அவைகள் ஒரு நிமிடத்திற்கு 1.3 லிட்டர் ரத்தத்தை வடிகட்டுகிறது. மேலும் ஒரு நாளில் 1.4 லிட்டர் சிறுநீரை வெளியேற்றுகிறது.

4. மனிதனின் ஒரு தனித்த ரத்த அணு, உடல் முழுவதையும் சுற்றிவர 60 வினாடிகள் மட்டுமே எடுத்துக் கொள்ளும்.

5. மனித உடலின் மிகப் பெரிய செல் பெண்ணின் கருமுட்டையாகும், மிகச் சிறிய செல் ஆணின் விந்தாகும்.

6. நமது உடலில் உள்ள ரத்தக் குழாய்களின் நீளம் சுமார் 600,000 மைல்கள். அதாவது இந்த தொலைவில் நாம் இரண்டு முறை உலகத்தைச் சுற்றி வந்து விடலாம்.

தசை :-

1. கண்களின் தசையானது ஒருநாளில் 100,000 முறை அசைகிறது, அதற்கு சமமான வேலையை உங்கள் கால்களுக்குக் கொடுக்க வேண்டும் என்றால் தினமும் 80 கிலோமீட்டர் தூரம் நடக்க வேண்டும்.

2. மனிதன் ஒரு அடி எடுத்து வைக்க 200 தசைகள் பயன்படுத்தப்படுகின்றன.

கால்கள் :-

1. காலின் பெருவிரல் இரண்டு எலும்புகளைக் கொண்டிருக்கும், ஆனால் மற்ற விரல்கள் ஒவ்வொன்றும் மூன்று எலும்புகளைக் கொண்டிருக்கும்.

2. கட்டை விரலின் நீளமும், மூக்கின் நீளமும் சமமாகும்.

3. மனித கால்களில் ஒரு ட்ரில்லியன் வரையிலான பக்டீரியாக்கள் இருக்கும்.

கண்கள் :-

நமது கண்களின் எடை சராசரியாக 28 கிராம், 500 விதமாக ஒளிகளைப் பிரித்தெரியும் சக்தியுண்டு.

மூளை :-

1. மனித மூளையில் சுமார் 100 பில்லியன் நரம்பு செல்கள் உள்ளன, 35 வயது அடைந்தது முதல் மூளையில் தினமும் 7000 நரம்பு செல்கள் இறக்கின்றன.

2. நாம் சுவாசிக்கும் மொத்த ஆக்சிஜனில் 20 சதவிகிதம் மூளைக்குச் செல்கிறது.

3. நமது மூளை 80 சதவிகிதம் நீரால் ஆனது, மூளையின் செயல்திறன் பகலை விட இரவில் அதிகமாக இருக்கும்.

இறப்பு :-

மனிதன் உயிரிழந்தப் பின்பு உறுப்புகள் செயல் இழக்கும் நேரம்

கண்கள்- 31 நிமிடங்கள்
மூளை- 10 நிமிடங்கள்
கால்கள்- 4 மணிநேரம்
தசைகள்- 5 நாட்கள்
இதயம்- சில நிமிடங்கள்

# மீம்ஸ்









1. தினமும் வெதுவெதுப்பான நீரில் சிறிது தேன் கலந்து பருகினால் தொப்பை குறையும்.

2. தேங்காய் எண்ணெய் உரையாமல் இருக்க அதில் சிறிது விளக்கெண்ணெய் சேர்க்க வேண்டும்

3. தாய்ப்பால் அதிகம் சுரக்க சிறிது வந்து அப்படியே வாயில் போட்டு தண்ணீர் அருந்த வேண்டும்

4. விளாம் பழத்தில் சிறிது தேன் விட்டுப் பிசைந்து சாப்பிட்டால் ஞாபக சக்தி அதிகரிக்கும்

5. காலில் முள் குத்தி விட்டால் அந்த இடத்தில் சிறிது வாஸ் லைன் தடவினால் முள் தெளிவாக தெரியும்

6. தேங்காயை நீளமாக பார்த்து வாங்கினால் அதன் உள்ளே பருப்பு நிறைய இருக்கும்

7. நைலான் துணியை வெட்டினால் கத்தரிக்கோல் மழுங்கிவிடும் இதனை தவிர்க்க கத்திரியை லேசாக சூடாக்கி கொண்டு பின்னர் வெட்டணும்



-நடேஷ் கன்னா
கல்லிடைக்குறிச்சி



# விடுகதை

| | |
|---|---|
| நடக்கவும் மாட்டேன், நகராமல் இருக்கவும் மாட்டேன் நான் யார்? | மணிக்கூடு |
| மழையோடு வருகின்ற மஞ்சள் புறாவை வெட்டினால் ஒரு சொட்டு இரத்தம் வராது. அது என்ன? | ஈசல் |
| நடந்தவன் நின்றான். கத்தியை எடுத்து தலையைச் சீவினேன். மறுபடி நடந்தான். அவன் யார்? | பென்சில் |
| விரல் இல்லாமலே ஒரு கை. அது என்ன? | தும்பிக்கை |
| வெள்ளத்தில் போகாது, வெந்தணலில் வேகாது. கொள்ளையடிக்க முடியாது, கொடுத்தாலும் குறையாது. அது என்ன? | கல்வி |



# ஜோக்ஸ்

வீட்டுக்கு வந்த விருந்தாளியிடம்
பெண்: இலையை மடிக்க வேண்டாம்.

விருந்தினர்: ஏன் மடிக்க வேண்டான்னு சொல்றீங்க

பெண்: அடுத்து வர்றவங்க சாப்பிடத் தான்.

விருந்தினர்: ஐய்யோ! அவங்க கோவிச்சுக்க மாட்டாங்களா?

பெண்: இப்போ நீங்க கோவிச்சுக்கிட்டீங்களா! என்ன?

விருந்தினர்: ???

------------------------------------------

எதிர்பதம்
Subramaniyan "Saw"my-யின் எதிர்பதம் என்ன?

Subramaniyan "did not" see me


------------------------------------------

"இத்தனை நாளா கண்ட பசங்களோட சுத்திட்டு இருந்த நம்ம பொண்ணு இப்ப பரவாயில்லீங்க"
"எப்படி சொல்ற?"

"பாருங்க! குழந்தைங்க டிரஸ் தைச்சிட்டுருக்கா பார்த்தீங்களா?"

"நாசமா போச்சு, அவள முதல்ல லேடி டாக்டர்கிட்ட கூட்டிப்போ"

------------------------------------------



------------------------------------------

காதலன் : "டியர் என்ன இவ்வளவு வருஷமா காதலிச்சுட்டு கல்யாணம் செஞ்சுக்க மறுக்கிறியே, ஏன் உன் மனசுல வேற யாராவது இருக்காங்களா?"
காதலி : "ஆமாம் டியர், எனக்குன்னு ஒருத்தர் பொறக்காமலா இருப்பாங்க?"

காதலி : "ஏன் டியர் நீங்க என்ன மட்டும்தான் லவ் பண்றீங்களா?"
காதலன் : "நிச்சயமா நீதான், ஏன்னா நேத்திக்குதான் லிஸ்ட்ட செக் பண்ணினேன்"

------------------------------------------

மனைவி : "உங்களுக்கு ஞாபகம் இருக்கா, நீங்க எங்கிட்ட முதன் முதல்ல ‘ஐ லவ் யூ’ சொன்னப்ப, நான் திக்கு முக்காடிப்போய் ஒரு மணி நேரம் பேசாமலேயே இருந்தேன்"

கணவன் : "பின்ன ஞாபகம் இருக்காதா, அந்த 1 மணி நேரந்தான் என் வாழ்க்கையிலேயே நான் மகிழ்ச்சியா இருந்தேன்"

------------------------------------------

ஆண் : "ஐ லவ் யூ டியர், உனக்காக என் உயிரக்கூட தயாராக இருக்கேன்"
பெண் : எப்ப? எப்ப? ? ? ?....

------------------------------------------

டேட்டிங்போது பேச்சை இப்படி ஆரம்பிக்கலாமே. . .
பையன் : "உனக்கு கீரைப் பிடிக்குமா?"

பெண் : "ஊஹூம். . ."

பையன் : உனக்கு அண்ணன், தம்பி யாராவது இருக்காங்களா?

பெண் : ஊஹூம். . .

பையன் : "சப்போஸ், உனக்கு அண்ணன், தம்பி யாராவது இருந்தா அவங்களுக்கு கீரை பிடிக்குமா?"

பெண் : ?!?!?!



# பன்முகம்



## விக்கல் ஏற்பட என்ன காரணம்? விக்கலை நிறுத்துவது எப்படி?

கழுத்தருகில் ஏதாவது கட்டிகள் இருந்தாலும் விக்கல் ஏற்படும்.

தண்ணீரை வேகமாக குடிக்கலாம்.

மார்பையும் வயிற்றையும் இணைக்கும் பகுதி உதரவிதானம் (டயப்ரம்) எனப்படுகிறது. இது நம் வாழ்நாள் முழுவதும் விடாது செயல்படும் உறுப்பாகும். இது மூச்சு விடுவதற்கும், உணவு வயிற்றுக்கு செல்வதற்கும் துணை செய்கிறது. இந்த தசைப்பகுதி திடீரென விரிந்து சுருங்கும் போது விக்கல் ஏற்படுகிறது.

**காரணங்கள்**

ஜீரணக் கோளாறு, குறைந்த அளவு புரதச்சத்துள்ள உணவுகளை எடுப்பது, கொழுப்புச் சத்துள்ள உணவை அதிகமாக உட்கொள்வது, அதிக காரத்துடன் உணவை எடுத்துக் கொள்வது, மாவுப் பண்டங்கள் அதிகமாக சாப்பிடுவது, ருசியான சாப்பாடு என்று மூச்சு விடக் கூட முடியாதபடி அளவுக்கு அதிகமாக சாப்பிடுவது, வேகவேகமாக சாப்பிடுவது போன்றவற்றால் இந்த தசைப்பகுதி சுருங்கி விரிவதால் விக்கல் ஏற்படுகிறது.

கல்லீரல் வீக்கம், இரைப்பை வீக்கம், உணவுக் குழாய் பாதிப்பு, நுரையீரலின் அடிப்பாகத்தில் நீர் கோர்த்துக் கொள்ளுதல், சிறுநீரகச் செயலிழப்பு நோயாளிகளுக்கு ரத்தத்தில் ரசாயன கழிவுகள் வெளியேற்றப்படாமல் தேங்கும் பொழுது, கழுத்தருகில் ஏதாவது கட்டிகள் இருந்தாலும் விக்கல் ஏற்படும். ஏனெனில் பெர்னிக் என்னும் நரம்பு கழுத்து தண்டுவடத்திலிருந்து ஆரம்பித்து மார்புப் பகுதிக்குள் உதரவிதான தசை வரை வருகிறது.

கண் சிவத்தல், கண்ணீர் வருதல், தொண்டை வறட்சி மற்றும் தொடர்ந்து விக்கல் ஏற்படும் போது வேறு எதிலும் கவனம் செலுத்த முடியாமல் மன உளைச்சல் ஏற்படுவது உண்டு. தொடர்ச்சியாக விக்கல் இருந்தால் இது பல பிரச்சினைகளுக்கான எச்சரிக்கையாக இருப்பதால் மருத்துவரை சந்தித்து ஆலோசனை பெற வேண்டும்.

**விக்கலை தடுக்கும் முறைகள்:**

1) மூச்சு விடுவதை தற்காலிகமாக நிறுத்தும்போது விக்கல் நின்று விடும். இதனால் தான் மூச்சை இழுத்துப் பிடித்தாலோ, தம் பிடித்தாலோ விக்கல் சட்டென்று நின்று விடுகிறது.

2) தண்ணீரை வேகமாக குடிக்கலாம். தண்ணீர் குடிக்கும் போது நாம் மூச்சு விடுவதில்லை. அப்போது உதரவிதான தசை இயல்பாக சுருங்கி விரிவதால் விக்கலும் நின்றுவிடும்.

3) அதிர்ச்சியாக ஏதாவது பேசினால் நாம் திடீரென விக்கித்துப் போய்விடுவோம். அதன் பலனாகவும் விக்கல் நின்று விடும்.

4) சீரகம், திப்பிலி இரண்டையும் வறுத்து பொடி செய்து சிறிதளவு தேனில் சாப்பிட விக்கல் நின்று விடும்.



## குழந்தைகளின் பிடிவாதம்: பெற்றோர் பின்பற்ற வேண்டிய அணுகுமுறை!

குழந்தைகள் எத்தகைய குணாதிசயம், சுபாவம் கொண்டவர்களாக விளங்குகிறார்கள் என்பதை பெற்றோரின் வளர்ப்புமுறைதான் தீர்மானிக்கிறது. அவர்கள் எந்த அளவுக்கு பொறுப்புணர்வோடு பிள்ளைகளின் நலனில் அக்கறை கொள்கிறார்கள் என்பதை பொறுத்துதான் அவர்களின் வாழ்க்கை பாதை கட்டமைக்கப்படுகிறது.

சின்ன விஷயங்களுக்கெல்லாம் பிள்ளைகள் பிடிவாதம் கொண்டவர்களாக இருப்பதற்கு பெற்றோரின் வளர்ப்பில் தென்படும் குறைபாடுகளே காரணமாக அமையும். அவை குறித்தும், அதனை தவிர்ப்பதற்கான வழிமுறைகள் குறித்தும் பார்ப்போம்.

**குழந்தைகளை பாராட்டுவதில்லை**

குழந்தைகள் ஆர்வமாக செய்யும் விஷயங்களுக்கு ஊக்கம் அளிக்க வேண்டும். அவை மற்றவர்கள் கவனத்தை ஈர்ப்பதாக இருந்தாலோ, பாராட்டும்படியாக இருந்தாலோ மனதார வாழ்த்த வேண்டும். இன்னும் சிறப்பாக செயல்படும்படி ஊக்குவிக்க வேண்டும். அப்படி புகழ்ந்து பேசுவது அவர்களின் தன்னம்பிக்கையை அதிகரிக்கச் செய்யும்.

'தாம் சிறப்பாக செயல்படுகிறோம்' என்று அவர்களும் தங்களை பற்றி பெருமை கொள்வார்கள். அப்படி அல்லாமல் குழந்தைகள் எது செய்தாலும் 'இதெல்லாம் ஒரு விஷயமா?' என்று பெற்றோர் சாதாரணமாக கடந்து செல்வது ஏற்புடையதாக இருக்காது. தாம் என்ன செய்தாலும் பெற்றோர் உற்சாகப்படுத்தமாட்டார்கள் என்ற மன நிலை பிள்ளைகளை ஆட்படுத்திவிடும்.

பெற்றோர் தம்மை மதிப்பதில்லை என்ற மனநிலைக்கும் வந்துவிடுவார்கள். அது பிடிவாத குணத்தை அவர்களுக்குள் விதைப்பதற்கு அடித்தளமாக மாற வாய்ப்பிருக்கிறது. அதற்கு இடம் கொடுக்காமல் குழந்தைகளின் செயல்பாடுகளை பெற்றோர் ஊக்குவித்து கொண்டாட வேண்டும்.

**மற்றவர்கள் முன்பு விமர்சனம் செய்தல்**

பிள்ளைகள் ஏதேனும் தவறு செய்தால் அதனை சுட்டிக்காட்டி திருத்துவது பெற்றோரின் கடமை. அதேவேளையில் அந்த தவறை மற்றவர்களுக்கு தெரியப்படுத்துவதோ, அவர்கள் முன்பு திட்டுவதோ பிள்ளைகளுக்கு மனக்கஷ்டத்தை ஏற்படுத்தி விடும்.

அப்படி பிறர் முன்பு திட்டுவது அவர்களின் சுயமரியாதைக்கு பங்கம் விளைவித்துவிடும். பெற்றோரின் கருத்துக்கு மதிப்பு கொடுக்காமல் பிடிவாதம் கொண்டவர்களாக மாறுவதற்கு வித்திடக்கூடும்.

பெற்றோர் உச்சரிக்கும் எந்த வார்த்தையும் குழந்தைகளின் மனதை காயப்படுத்தும்படி அமைந்துவிடக்கூடாது. அவர்கள் செய்யும் தவறுகள் எதுவானாலும் அவர்களிடமே நேருக்கு நேர் பேசி அதனை சரி செய்வதற்கு முன்வர வேண்டும். அவ்வாறு அல்லாமல் கடுமையாக திட்டுவது மன ரீதியாக குழந்தைகளுக்கு பாதிப்பை ஏற்படுத்திவிடும். பெற்றோர் என்ன செய்தாலும் தம்மை கண்டிப்பார்கள் என்ற எண்ணம் உருவாகி, வீண் பிடிவாதம் அவர்களுக்குள் எழ வழிவகுத்துவிடும்.

அதற்கு இடம் கொடுக்காமல் சிறு வயதிலேயே அவர்கள் செய்யும் தவறுகளை மென்மையான அணுகுமுறையுடன் சுட்டிக்காட்டி திருத்திக்கொள்வதற்கு வழிகாட்டினால் எதையும் சுமூகமாக எதிர்கொள்ளும் பக்குவம் கொண்ட பிள்ளைகளாக வளர்வார்கள். அவர்களின் எதிர்கால வாழ்க்கைக்கும் அது நலம் சேர்க்கும்.

தன் நண்பர்களோ, உறவுகளோ தவறு செய்திருந்தாலும் அதனை அவர்கள் மனம் புண்படாதபடி திருத்திக்கொள்வதற்கு ஆலோசனை தரும் இடத்தில் இருப்பார்கள்.

**தக்க சமயத்தில் அறிவுரை வழங்காமல் இருத்தல்**

எந்தவொரு காரியத்தை குழந்தைகள் செய்வதாக இருந்தாலும் அவர்களுக்கு தக்க அறிவுரை கூற வேண்டிய பொறுப்பு பெற்றோருக்கு இருக்கிறது. அந்த அறிவுரை அவர்கள் தொடங்கும் காரியத்தை சிறப்பாக முடிப்பதற்கு வழிகாட்ட வேண்டும்.

திட்டமிடுதல், இலக்கு நிர்ணயித்தல், எதிர்கொள்ளும் இடையூறுகளை சமாளித்தல் என எல்லா நிலையிலும் பிள்ளைகளுக்கு பின்புலமாக இருந்து செயல்பட வேண்டும். அப்படி செய்யாமல் அவர்களின் செயல்பாடுகளை குறை சொல்வது, 'நீ எது செய்தாலும் அது சிறப்பாக முடியாது' என்று மனம் நோகும்படி பேசுவது பெற்றோர் மீது தேவையற்ற அதிருப்தியை ஏற்படுத்தும்.

நம் உணர்வுகளை பெற்றோர் மதிப்பதில்லையே என்ற ஆதங்கம் பிள்ளைகளை பிடிவாத குணம் கொண்டவராக மாற்றக்கூடும்.

**அடிக்கடி தொந்தரவு செய்தல்**

பெற்றோர் ஏதேனும் ஒரு வேலையை பிள்ளைகளிடம் ஒப்படைத்தால் அதனை அவர்கள் நிறைவேற்றி கொடுக்கும் வரை பொறுமை காக்க வேண்டும். அந்த வேலை பற்றிய செயல்பாடுகளில் அவர்கள் கவனம் செலுத்துகிறார்களா? தொடர்ந்து ஆர்வமாக வேலையை தொடர்கிறார்களா? என்று கண்காணிக்கலாம்.

ஆனால் அவர்கள் செய்து கொண்டிருக்கும் வேலை மீது குறை சொல்லிக்கொண்டே இருப்பது, அடிக்கடி திருத்தம் சொல்லிக்கொண்டே இருப்பது, 'இப்படி செய்தால்தான் சரியாக இருக்கும்' என்று கருத்து கூறுவது, வேலையில் சிறு தவறு செய்தாலும் கண்டிப்பது போன்ற செயல்பாடுகள் பிள்ளைகளிடத்தில் அதிருப்தியை ஏற்படுத்தும்.

அந்த வேலை மீதான ஆர்வத்தை குறைக்கக்கூடும். எப்போதும் நம்மை குறைசொல்வதுதான் பெற்றோரின் மன நிலையாக இருக்கிறது என்ற நிலைப்பாட்டுக்கு வந்துவிடுவார்கள்.

அடுத்து பெற்றோர் சொல்லும் வேலையை பிடிவாதமாக மறுக்கும் மன நிலைக்கு ஆளாகக்கூடும். அதற்கு இடம் கொடுக்காமல் பிள்ளைகளை அரவணைத்து செல்ல வேண்டிய பொறுப்பு பெற்றோருக்கு இருக்கிறது.

**நன்றி சொல்லாமல் இருத்தல்**

பிறர் நமக்கு செய்யும் உதவிகளுக்கு உடனடியாக நன்றி தெரிவிக்க வேண்டும். குழந்தைகள் வயதில் சிறியவர்களாக இருந்தாலும் அவர்கள் செய்து கொடுக்கும் வேலைக்கு நன்றி சொல்வதற்கு பெற்றோர் முன்வர வேண்டும்.

வயதில் சிறியவர்தானே நாம் எதற்கு நன்றி சொல்ல வேண்டும் என்ற எண்ணம் பெற்றோரிடத்தில் வெளிப்படக்கூடாது. நன்றி சொல்வதற்கு வயது பொருட்டல்ல.

செய்யும் வேலை, உதவியின் தன்மைக்கேற்ப நன்றி சொல்ல முன் வர வேண்டும். இந்த பழக்கத்தை குழந்தைகள் சிறு வயதிலேயே கற்றுக்கொள்வதற்கு பெற்றோரே 'ரோல் மாடலாக' இருக்க வேண்டும்.

அதைவிடுத்து 'இதெல்லாம் ஒரு வேலையா? இதை செய்ததற்கெல்லாம் நன்றி சொல்ல வேண்டுமா?' என்ற மனப்பான்மை உருவாகுவதற்கு பெற்றோர் காரணமாகிவிடக்கூடாது.

**ஒழுக்கத்தை கடைப்பிடித்தல்**

பெற்றோரின் நடத்தைகள் எப்படி இருக்குமோ அதனை பின்பற்றித்தான் பிள்ளைகள் வளர்வார்கள். அதனால் ஒழுக்கம் விஷயத்தில் பெற்றோர் பிள்ளைகளுக்கு முன் மாதிரியாக இருக்க வேண்டும்.

ஒழுக்கம் வாழ்வின் உயர்வுக்கு இன்றியமையாதது என்பதை சிறுவயது முதலே பிள்ளைகளுக்கு பெற்றோர் சொல்லிக்கொடுத்து வளர்க்க வேண்டும். அதுவே பின்னாளில் அவர்களை ஒழுக்க சீலர்களாக மாற்றும்.



## குறட்டை எப்படி ஏற்படுகிறது? குறட்டை வராமல் தடுக்கு முறைகள்



தூக்கத்தில் தொண்டையில் உள்ள தசைகள் தளர்வடைந்து மூச்சுக் குழாயின் உள்சுற்றளவு குறைகிறது. இந்த குறுகிய பாதையில் காற்று செல்லும்போது குறட்டை ஏற்படுகிறது. குறட்டையானது பெரும்பாலும் பாதிப்பில்லாதது என்றாலும், அது தூக்கத்தை சீர்குலைத்து பகல்நேர சோர்வு மற்றும் உயர் ரத்த அழுத்தம், இதய நோய், ரத்த சர்க்கரை அதிகரித்தல் போன்ற பிரச்சினைகளை ஏற்படுத்தும்.

**குறட்டை ஏற்படுவதற்கு முக்கிய காரணம்:**

மரபணு காரணங்கள், உடல் பருமன், சளி, ஒவ்வாமை, சைனஸ் பிரச்சினைகளால் ஏற்படும் மூக்கடைப்பு, மூக்கு செப்டம் விலகல், சிறிய தாடை போன்ற முக கட்டமைப்பு காரணங்கள், தொண்டை சதை (டான்சில்) வீக்கம், மல்லாந்து படுத்து தூங்கும் பழக்கம் (இதில் நாக்கு பின்வாங்கி சுவாசபாதையை தடுக்கும்), தைராய்டு குறைபாடு, புகைப்பழக்கம், மது பழக்கம், இரவில் அதிக தூக்க மாத்திரை உட்கொள்ளுதல்.

நீரிழிவு நோயாளிகளில் 4 பேரில் ஒருவருக்கு தூக்கத்தில் குறட்டையால் மூச்சுத்திணறல் ஏற்படுவதாக புள்ளி விவரங்கள் தெரிவிக்கின்றன. நீரிழிவு நோயாளிகளுக்கு குறட்டை விடும் போது ஏற்படும் மூச்சுத்திணறல், குளுக்கோஸ் வளர்சிதை மாற்றத்தை உண்டாக்கி, இன்சுலின் எதிர்மறை நிலையை ஊக்குவிக்கிறது.

அது மட்டுமல்ல, குறட்டை விடும் போது சிலருக்கு ஏற்படும் மூச்சுத்திணறல், நுரையீரலுக்கு செல்லும் ஆக்சிஜன் அளவை குறைத்து, கார்டிசால் போன்ற ஹார்மோன் அளவை அதிகரிக்க செய்து, ரத்த சர்க்கரை அளவை உயர்த்துகிறது.

மேலும் குறட்டை விடும் பழக்கம் உள்ளவர்களுக்கு சர்க்கரை நோய் வருவதற்கான வாய்ப்பு அதிகமாவதாக பல்வேறு ஆய்வுகளில் கண்டறியப்பட்டுள்ளது.

**குறட்டை வராமல் தடுக்க சர்க்கரை நோயாளிகள் கீழ்கண்ட வழிமுறைகளை பின்பற்றலாம்.**

1) தினசரி உடற்பயிற்சி, நடைப்பயிற்சி மேற்கொண்டும், நார்ச்சத்து அதிகம் உள்ள காய்கறிகள், பழங்கள், முழு தானியங்கள் போன்றவற்றை உணவில் அதிகம் சேர்த்துக்கொண்டும் ஆரோக்கியமான எடையை பராமரிக்க வேண்டும்.

2) புகைப் பழக்கம் மற்றும் மதுபழக்கத்தை விட்டொழிக்க வேண்டும்.


3) மூக்கடைப்பு பிரச்சினை உள்ளவர்கள் நாசி பாதைகளை திறக்க மற்றும் காற்றோட்டத்தை மேம்படுத்த நாசி டைலேட்டர்கள் அல்லது ஒவ்வாமை மருந்துகளை பயன்படுத்தலாம்.

4) போதுமான அளவு தண்ணீர் குடித்து நீரேற்றத்துடன் இருங்கள். ஏனெனில் நீரிழப்பு தொண்டை திசுக்களை வறட்சியடையச் செய்து குறட்டையை மோசமாக்கும்.

5) மல்லாக்க படுத்து தூங்காமல் பக்கவாட்டில் படுத்து தூங்க முயற்சி செய்ய வேண்டும்.

6) சற்று உயரமான தலையணையை பயன்படுத்துவது சுவாச பாதையை திறந்து வைத்து குறட்டையை குறைக்க உதவும்.

## காதில் இரைச்சல் ஏன் ஏற்படுகிறது தெரியுமா?




உங்களைச் சுற்றி எந்தவித சப்தமும் இல்லாதபோதும் உங்கள் காதிற்குள் மட்டும் உங்கள் இதயத்துடிப்பின் சப்தம் கேட்டுக் கொண்டே இருக்கும். இதை 'சீர்தாள துடிப்புக் காதிரைச்சல்' என்றும் அழைக்கலாம்.

இந்த சப்தம் ஒருபக்க காதிலோ அல்லது இருபக்க காதிலோ கேட்கலாம். சப்தம் காதிற்குள் அதுவாகவே ஏற்படும். பின் சில நிமிடங்களில் அதுவாகவே போய்விடும். சிலருக்கு தொடர்ந்து கேட்டுக் கொண்டே இருக்கும். மொத்த ஜனத்தொகையில் சுமார் 15 சதவீதம் பேருக்கு இந்தபிரச்சினை இருக்கிறது.

ஒரு குறிப்பிட்ட நேரத்திற்குள் அதிக சப்தத்தை ஒரே நேரத்தில் ஒரேயடியாக கேட்பது, அதிக ரத்த அழுத்தம் உள்ளவர்கள், கழுத்து, தலை போன்ற இடங்களிலுள்ள ரத்தக்குழாய்களில் வீக்கம், காதிற்குள் அதிக அளவில் மெழுகு சேருவது, தலை கழுத்துப் பகுதியில் கட்டிகள், வைரஸ் மற்றும் பாக்டீரியாக்களின் தொற்று, இதய நோயுள்ளவர்கள், நரம்பு மண்டலத்தில் ஏற்படும் நோய்கள், ஹைப்பர்தைராயிடிசம் பிரச்சினை உள்ளவர்கள், ரத்தசோகை உள்ளவர்கள், இதுபோக இன்னும் பல காரணங்கள் காதிரைச்சலை உண்டாக்குகின்றன.

பதற்றம், மனச்சோர்வு, மனக்கவலை, எரிச்சலூட்டும் செயல்கள், சரியான தூக்கமின்மை, காது கேட்கும் திறன் குறைந்து போதல், போக்குவரத்து நெரிசல் மற்றும் மிக அதிக சப்தம் உள்ள இடங்களில் அதிக நேரம் நிற்பது இவைகள் எல்லாம் கூட காதிரைச்சலை உண்டுபண்ணும். காதிரைச்சல் உள்ள பலருக்கு காது கேளாமையும் லேசாக இருக்கக்கூடும்.

இந்த பகுதியில்
உங்கள் படைப்புக்கள் வரவேற்கிறோம்



whatsapp No
8122664699

## மாநில அளவிலான கலை திருவிழா போட்டி



சேலம் மாவட்டம் பத்மவாணி கல்லூரியில் 9 மற்றும் 10 ஆம் வகுப்பு மாணவர்களுக்கான மாநில அளவிலான கலை திருவிழா போட்டி பசுமையும், பாரம்பரியமும் என்ற மையக்கருத்தில் நடந்தது.

## ஹாக்கி அணியினருக்கு வரவேற்பு




சுவிட்சர்லாந்து ஹாக்கி அணியினருக்கு மதுரையில் கலெக்டர் பிரவீன் குமார் தலைமையில் தமிழக பாரம்பரிய முறையில் கரகாட்டம், ஒயிலாட்டம், டிரம் இசை முழங்க வரவேற்பு அளிக்கப்பட்டது.

## எஸ்ஐஆர் பணியை அதிமுகவினர் ஆய்வு



மதுரை மாநகர் பகுதியில் எஸ்ஐஆர் பணியை அதிமுக மாநில மகளிரணி செயலாளர் பா.வளர்மதி, முன்னாள் அமைச்சர் செல்லூர் ராஜூ ஆகியோர் ஆய்வு செய்தனர்.

## ஆம்பூர் சிலம்பம் பயிற்சிப்பள்ளி மாணவர்கள் பல்வேறு பிரிவுகளில் சிறப்பிடம்



வேலூரில் நடைபெற்ற தேசிய அளவிலான சிலம்பம் போட்டியில் ஆம்பூர் சிலம்பம் பயிற்சிப்பள்ளி மாணவர்கள் பல்வேறு பிரிவுகளில் சிறப்பிடம் பிடித்துள்ளனர்.

## திருநாகேஸ்வரம் நாகநாத சுவாமி கோயிலில் நயினார் நாகேந்திரன் தரிசனம்



திருநாகேஸ்வரம் நாகநாத சுவாமி கோயிலில் பாஜக மாநிலத் தலைவர் நயினார் நாகேந்திரன் தரிசனம் செய்தார்.

## ஸ்ரீ அம்மா பூமாதேவி கோயிலில் அன்னதான கூடம் திறப்பு



கோவில்பட்டி அருகே மந்தித்தோப்பு துளசிங்க நகரில் உள்ள ஸ்ரீ அம்மா பூமாதேவி கோயிலில் 108 சங்காபிஷேகம் மற்றும் அன்னதான கூடம் திறப்பு விழா நேற்று நடைபெற்றது.

## பனைத் தொழில் வளர்ச்சி குறித்த கருத்தரங்கம்



தூத்துக்குடி மாவட்டம் சாத்தான்குளத்தில் நிலைத்த வேளாண்மை ஊரக வளர்ச்சி சங்கம் சார்பில் பனைத் தொழில் வளர்ச்சி குறித்த கருத்தரங்கம் நடைபெற்றது.

## துணை முதல்வர் உதயநிதி பிறந்தநாள் விழாவில் நடிகர் வடிவேலு



துறைமுகம் கிழக்கு பகுதி இளைஞரணி சார்பில்நடந்த துணை முதல்வர் உதயநிதி பிறந்தநாள் விழாவில் நடிகர் வடிவேலு பங்கேற்றார். உடன் அமைச்சர்கள் சேகர்பாபு, அன்பில்மகேஷ் பொய்யாமொழி, துணைப் பொதுச் செயலாளர் ஆ.ராசா எம்.பி. உள்ளனர்.

## சினேகம் ஆதரவற்றோர் இல்லத்தில் உள்ளவர்களுக்கு மதிய உணவு



துணை முதலமைச்சர் பிறந்த நாள் நிகழ்ச்சியாக நாகர்கோவில் மேற்கு பகுதி தி.மு.க சார்பில் நேசமணிநகர் சினேகம் ஆதரவற்றோர் இல்லத்தில் உள்ளவர்களுக்கு மதிய உணவு வழங்கினார் மேயர் மகேஷ்.

## எஸ்ஜஆர் படிவங்களை திரும்ப ஒப்படைக்கும் சிறப்பு முகாம்



விருதுநகரில் எஸ்ஜஆர் படிவங்களை திரும்ப ஒப்படைக்கும் சிறப்பு முகாமை கலெக்டர் சுகபத்ரா ஆய்வு செய்தார்.

## 500 இளைஞர் அணி நிர்வாகிகளுக்கு வெண் சீருடை



உதயநிதி பிறந்தநாளை முன்னிட்டு ஆலந்தூர் தொகுதியில் உள்ள 500 இளைஞர் அணி நிர்வாகிகளுக்கு வெண் சீருடைகளும், விளையாட்டு வீரர்களுக்கு விளையாட்டு உபகரணங்களையும் அமைச்சர் அன்பரசன் வழங்கினார்.

## 30 குழந்தைகளுக்கு தங்க மோதிரம்



துணை முதல்வர் உதயநிதி பிறந்தநாள் அன்று செங்கல்பட்டு அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் பிறந்த 30 குழந்தைகளுக்கு தங்க மோதிரங்களை காஞ்சிபுரம் வடக்கு மாவட்ட தி.மு.க. சார்பில் அமைச்சர் தா.மோ.அன்பரசன் அணிவித்து வாழ்த்தினார்.உடன் வரலட்சுமி எம்எல்ஏ.

## பல்லோக்கு சிறப்பு மருத்துவமனை திறப்பு



தூத்துக்குடி மாவட்டம் ஜார்ஜ் ரோடு தருவை மைதானம் அருகே புதிதாக அமைக்கப்பட்டுள்ள மணவாளன் பல்லோக்கு சிறப்பு மருத்துவமனையை அமைச்சர் கீதா ஜீவன் திறந்து வைத்தார்.

## குடை பிடித்தபடி நலத்திட்ட உதவிகள்



துறைமுகம் பகுதியில் உதயநிதி பிறந்தநாள் விழாவில் கொட்டும் மழையிலும் குடை பிடித்தபடி நலத்திட்ட உதவிகள் வழங்கப்பட்டன.

## 100 சதவீதம் பணி முடித்த வாக்குச்சாவடி அலுவலர்களை கலெக்ர் பாராட்டினார்



இராமநாதபுரம் மாவட்டம், முதுகுளத்தூர் வட்டாட்சியர் அலுவலகத்தில் எஸ்ஜஆர் பணிகளை மாவட்ட கலெக்டர் சிம்ரன்ஜீத் சிங் காலோன் ஆய்வு செய்து 100 சதவீதம் பணி முடித்த வாக்குச்சாவடி அலுவலர்களை பாராட்டினார்.

## குமரி கோமேதகம் பொன்னப்பநாடார் மணிமண்டபம் அமைக்கும் பணி



நாகர்கோவில் வேப்பமூடு சர்.சி.பி.இராமசாமி ஐயர் நினைவு பூங்காவில் முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் குமரி கோமேதகம் பொன்னப்பநாடார் திருவுருவ சிலையுடன் கூடய மணிமண்டபம் அமைக்கும் பணிகளை மேயர் மகேஷ் பார்வையிட்டார்.

## புனித சவேரியார் ஆலயத் திருவிழா கொடியேற்றத்துடன் தொடங்கியது



கோவில்பட்டி அருகே உள்ள வடக்கு வண்டானம் புனித சவேரியார் ஆலயத் திருவிழா கொடியேற்றத்துடன் தொடங்கியது.

## "பாரதிதாசன் பாட்டுருவியில் பரதம்" நாட்டிய விழாவில் அமைச்சர் நாசர் பரிசளித்தார்



தமிழ்நாடு இயல் இசை நாடக மன்றம், மற்றும் ஸ்ரீ தியாக பிரம்ம கான சபை இணைந்து வழங்கிய "பாரதிதாசன் பாட்டுருவியில் பரதம்" நாட்டிய விழாவில் அமைச்சர் நாசர் பங்கேற்று பரிசளித்தார். உடன் நடிகர் வாகை சந்திரசேகர், விஜயா தாயன்பன் உள்ளனர்.

## மறைந்த எம்.ஜி.ஆரின் மனைவி ஜானகி ராமச்சந்திரன் 102வது பிறந்தநாள்



மறைந்த எம்.ஜி.ஆரின் மனைவி ஜானகி ராமச்சந்திரன் 102வது பிறந்த நாளான நேற்று, அவரது படத்துக்கு அதிமுக பொதுச் செயலாளர் எடப்பாடி பழனிசாமி மலர் தூவி மரியாதை செய்தார்.

## SIR பணிகளை முன்னாள் அமைச்சர் ராஜலட்சுமி பார்வையிட்டார்



சங்கரன்கோவில் தொகுதி, தெற்கு அச்சம்பட்டி பகுதி வாக்குசாவடிகளில், வாக்காளர் சிறப்பு தீவிர திருத்த (SIR) பணிகளை முன்னாள் அமைச்சர் ராஜலட்சுமி பார்வையிட்டார்.

## சிகிச்சை பெறுபவர்களை முன்னாள் அமைச்சர் நலம் விசாரிப்பு



கரூர் மாவட்டம், நெரூர் கிராமத்தை சேர்ந்த 100 நாள் வேலைத்திட்ட பணியாளர்களை சிகிச்சை பெறுபவர்களை அதிமுக முன்னாள் அமைச்சர் எம்ஆர் விஜயபாஸ்கர் சந்தித்து நலம் விசாரித்தார்.

## வாக்காளர் திருத்த பட்டியல் பணி



திருவள்ளூர் மாவட்டத்தில் வாக்காளர் திருத்த பட்டியல் பணிகளை கலெக்டர் பிரதாப் பார்வையிட்டார்.







நெல்லை ராணி அண்ணா அரசு மகளிர் கல்லூரியில் . "எங்கள் கல்லூரி" "எங்கள் பெருமை" முன்னாள் மாணாக்கர்கள் சங்கத்தை சபாநாயகர் அப்பாவு, அமைச்சர் கோவி செழியன் துவக்கி வைத்தனர். கலெக்டர்சுகுமார், மேயர் ராமகிருஷ்ணன் உள்பட பலர் உடன் உள்ளனர்.

## முழுநேர நியாயவிலைக்கடை



சேலம் மாவட்டம் கொண்ட நாயக்கன் பட்டியில் முழுநேர நியாயவிலைக்கடையை அமைச்சர் ராஜேந்திரன் திறந்துவைத்து பொருட்கள் வழங்கினார்.

## எஸ்ஜஆர் படிவங்களை பதிவேற்றும் பணி



பெருந்துறை வட்டாட்சியர் அலுவலகத்தில் பூர்த்திசெய்யப்பட்ட எஸ்ஜஆர் படிவங்களை பதிவேற்றும் பணிகளை கலெக்டர் கந்தசாமிஆய்வு செய்தார்.

## மழை முன் எச்சரிக்கை நடவடிக்கை



மயிலாடுதுறையில் மழை முன் எச்சரிக்கை நடவடிக்கைகளை கலெக்டர் ஸ்ரீகாந்த் பார்வையிட்டார்.

# வேலைவாய்ப்பு கார்னர்

## பாரத் டைனமிக்ஸ் நிறுவனத்தில் அப்ரென்டிஸ் வாய்ப்பு

மத்திய அரசின் பாரத் டைனமிக்ஸ் நிறுவனத்தில் (பி.டி.எல்.,) காலியிடங்களுக்கு அறிவிப்பு வெளியாகியுள்ளது.

'அப்ரென்டிஸ்' பிரிவில் பிட்டர் 70, எலக்ட்ரீசியன் 10, எலக்ட்ரானிக்ஸ் மெக்கானிக் 40, டர்னர் 15, வெல்டர் 4 உட்பட மொத்தம் 156 இடங்கள் உள்ளன.

கல்வித்தகுதி: ஐ.டி.ஐ., வயது: 14-30 (8.12.2025ன் படி)

தேர்ச்சி முறை: சான்றிதழ் சரிபார்ப்பு

விண்ணப்பிக்கும் முறை: ஆன்லைன். பின் இதை பிரின்ட் எடுத்து உரிய சான்றிதழ்களுடன் கீழ்க்காணும் முகவரிக்கு அனுப்ப வேண்டும்.

Manager (HR) Apprentice, Bharat Dynamics Limited, Kanchanbagh, Hyderabad - 500 058.

கடைசிநாள்: 8.12.2025 விவரங்களுக்கு: ms tcindia.co.in

## அழைக்கிறது ஆராய்ச்சி நிறுவனம்



சென்னையில் உள்ள மத்திய தோல்பொருள் ஆராய்ச்சி நிறுவனத்தில் ஒப்பந்த பணிக்கு விண்ணப்பங்கள் வரவேற்கப்படுகின்றன.

புராஜக்ட் அசோசியேட், சீனியர் புராஜக்ட் அசோசியேட், ஜூனியர் ரிசர்ச் பிரிவில் மொத்தம் 14 இடங்கள் உள்ளன.

கல்வித்தகுதி: எம்.எஸ்சி.,/பி.இ.,/பி.டெக்.,/எம்.பி.ஏ.,

வயது: 18 - 35, 18 - 3 2, 18 - 40

தேர்ச்சி முறை: எழுத்துத்தேர்வு, நேர்முகத்தேர்வு.

எழுத்துத்தேர்வு தேதி: 22.12.2025

நேர்முகத்தேர்வு தேதி: 23.12.2025

விண்ணப்பிக்கும் முறை: கீழ்க்காணும் முகவரியில் நடைபெறும் எழுத்துத்தேர்வு, நேர்முகத்தேர்வில் பங்கேற்க வேண்டும். CSIR-Central Leather Research Institute, Sardar Patel Road, Adyar, Chennai - 600 020.

விவரங்களுக்கு: clri.org

# சுற்றுலா: பயணம் செய்வதால் நன்மைகள் - நிரூபிக்கும் ஆய்வுகள்!



பயணம் என்பது நாம் சென்று சேரும் இடம் பற்றியது மட்டுமல்ல. இருள் விலகும் முன் வீட்டிலிருந்து பயணத்தைத் துவக்கி, காலை நேர வானத்தில் மெல்லப் பரவும் சூரிய ஒளியையும், அதைத் தொடரும் சூரிய உதயத்தையும் கண்டு இரசிப்பது, காலைச் சிற்றுண்டிக்காக வழியில் உணவகம் தென்படுகிறதா என்று பார்ப்பது (அல்லது APP-ல் தேடுவது), குறிப்பிட்ட தொலைவு பயணம் செய்த பின் தேநீர் கடையில் ஆவி பறக்கும் தேநீருக்காக வண்டியை நிறுத்துவது, காதுக்கு இதமான ஓசையில் பாடல்களை ஓட விட்டுப் பேசிக் கொண்டே பயணிப்பது, அவ்வப்போது தென்படும் இயற்கைக் காட்சிகளைக் கண்டு மகிழ்வது என இவை அனைத்தும் பயணத்தின் உயிர்நாடி.

அதே போலத்தான் இரயில் மற்றும் பேருந்து பயணங்களும் நம் மனதை ஆக்கிரமிக்கின்றன. இரயிலின் தடதட ஓசையும், அதன் அன்னை மடி தாலாட்டு போன்ற அசைவும், ஜன்னல் வழியே வேகமாக மறையும் காட்சிகளும், கணீர் குரலில் தேநீர் விற்பவர்களும், அவ்வப்போது வரும் உணவு விற்பனையாளர்களும் அதற்கு முன்னரே தூக்கும் வாசனையும் என இரயில் பயணம் ஒரு சுகமான அனுபவம். ஒவ்வொரு இரயில் நிலையத்திலும் கம்பீரமாக இரயில் உள்ளே நுழைந்த பின் பரபரப்போடு வண்டி ஏறுபவர்கள், அவர்களுக்கு விடைகொடுக்க வருபவர்கள், அந்த நிலையங்களில் இருக்கும் பத்திரிக்கை மற்றும் தேநீர்க் கடை என அனைத்தும் நம் கவனத்தை ஈர்க்கும். மெல்ல அருகிலிருப்பவர்களுடன் அறிமுகமாகி பயணம் முழுவதும் சுவாரசியமான உரையாடல்கள் என இரயில் பயணங்களில் நேரம் போவதே தெரியாது.

நாம் செல்ல வேண்டிய ஊருக்குச் சென்று சேர்வதற்குள் பல்வேறு ஊர்களுக்குள்ளும் நுழைந்து வந்திருப்போம். பேருந்துப் பயணம் ஒரு வகையில் நம் பயணத்தை உயிரோட்டத்துடன் வைத்திருக்கிறது.

உங்கள் உடலில் நோய் எதிர்ப்பாற்றல் அதிகரிக்க வேண்டுமா? எந்த மருந்து, மாத்திரையும் தேவையில்லை, வேலை.. வேலை என்பதிலிருந்து விடுபட்டு இரண்டு வாரங்கள் லீவு எடுத்துக்கொண்டு உங்களுக்கு பிடித்த இடங்களுக்கு சுற்றுலா சென்று வாருங்கள். அது உங்கள் உடலில் நோய் எதிர்ப்பாற்றலை அதிகரிக்க செய்து விடும் என்கிறார்கள் லண்டன் குயின்ஸ் மேரி பல்கலைக்கழக ஆராய்ச்சியாளர்கள்.

இடமாற்றம் உங்களின் உடலிலுள்ள வெள்ளை அணுக்களை நோய்களை எதிர்த்து போராடும் அளவிற்கு தயார் செய்து விடுகிறது என்கிறார்கள் ஆய்வாளர்கள்.

அடிக்கடி சுற்றுப்பயணம் இணைந்து மேற்கொள்ளும் தம்பதிகளின் இல்லற வாழ்க்கை மற்றவர்களை விட சிறப்பாக இருக்கும் என்பதை ஆய்வு மூலம் கண்டறிந்துள்ளனர் அமெரிக்க டிராவல் அசோசியேஷன் ஆராய்ச்சியாளர்கள்.

அடிக்கடி சுற்றுலா சென்று வருகின்றவர்களுக்கு இதய நோய்களால் பாதிக்கப்படுகின்ற வாய்ப்பு 32 சதவீதம் குறைகிறது என்பதை அமெரிக்க தேசிய இதய நோய் ஆய்வு கழகம் ஆய்வில் கண்டறிந்துள்ளது.

சுற்றுலா பயணங்கள் வாழ்நாள் முழுவதும் மூளையின் ஆரோக்கியத்தையும், அதன் மீள் தன்மையையும் மேம்படுத்த உதவும் என்பதை இங்கிலாந்தின் பிரெய்ன் ஹெல்த் சென்டர் ஆய்வு கூறுகிறது. குறிப்பாக வயதானவர்களுக்கு உதவுகிறது.

விடுமுறை எடுத்து சுற்றுலா சென்று வருவது நேர்மறையான உணர்ச்சி நிலைகளை ஏற்படுத்தி மன அழுத்தம் மற்றும் மனச்சோர்வை குறைக்க உதவுகிறது என்கிறார்கள் பிட்ஸ்பர்க் பல்கலைக்கழக ஆராய்ச்சியாளர்கள்.

வருடத்திற்கு ஒரு முறையாவது சுற்றுலா சென்றுவருவது உங்களை மகிழ்ச்சி நிலைக்கு அழைத்து செல்வது உறுதி என்பதை 2004 ம் ஆண்டு நடைபெற்ற ஒரு ஆய்வில் கண்டறிந்துள்ளனர். இதற்கு காரணம் சுற்றுலாவிற்கு பின் அது குறித்து தொடரும் இனிய நினைவுகள்தான் என்கிறார்கள்.

சுற்றுலாவில் ஒவ்வொரு இடங்களாக பார்க்க பார்க்க மனம் மகிழ்வு பெற்று உடலை சுறுசுறுப்பாக இயங்க வைக்கிறது. இதுவே இரவில் ஒரு நல்ல தூக்கத்தை பெற உதவுகிறது என்கிறார்கள் நேஷனல் ஸ்லீப் பவுண்டேஷன் ஆய்வாளர்கள்.

சுற்றுலா செல்வதால் உங்கள் மகிழ்ச்சி கூடுவதுடன் உங்களின் ஆரோக்கியமும் நிச்சயம் கூடும்.

## கூட்ட நெரிசல் சம்பவம்: சிபிஐ விசாரணையை கண்காணிக்க சுப்ரீம் கோர்ட்டு ஓய்வுபெற்ற நீதிபதி கரூர் வருகை

**கரூர், டிச.1:**

கூட்ட நெரிசலில் பலியான 12 பேரின் குடும்பத்தினர், உறவினர்களிடம் சிபிஐ அதிகாரிகள் விசாரணை நடத்தியுள்ளனர்.

கரூர் வேலுச்சாமிபுரத்தில் கடந்த செப்டம்பர் மாதம் 27-ந் தேதி நடைபெற்ற த.வெ.க. பிரசார கூட்ட நெரிசலில் சிக்கி 41 பேர் பலியாகினர். இதுதொடர்பான வழக்கை சி.பி.ஐ. அதிகாரிகள் தாந்தோணிமலையில் உள்ள அரசு சுற்றுலா மாளிகையில் தங்கியிருந்து விசாரணை நடத்தி வருகின்றனர். இதில் ஏற்கனவே பலியான 12 பேரின் குடும்பத்தினர் மற்றும் உறவினர்களிடம் சி.பி.ஐ. அதிகாரிகள் விசாரணை நடத்தியுள்ளனர்.

மேலும் இந்த விசாரணையை கண்காணிப்பதற்காக ஓய்வு பெற்ற சுப்ரீம் கோர்ட்டு நீதிபதி அஜய் ரஸ்தோகி தலைமையில் 2 ஐ.பி.எஸ். அதிகாரிகள் கொண்ட சிறப்பு குழுவையும் சுப்ரீம் கோர்ட்டு அமைத்தது. இந்த குழுவில் ஐ.பி.எஸ். அதிகாரிகள் சுமித் சரண், சோனல் வி.மிஸ்ரா ஆகியோர் இடம் பெற்றுள்ளனர்.

இந்த நிலையில் ஓய்வு பெற்ற சுப்ரீம் கோர்ட்டு நீதிபதி அஜய் ரஸ்தோகி தலைமையிலான சிறப்புக்குழு கரூர் கூட்ட நெரிசல் தொடர்பான விசாரணையை கண்காணிக்க நாளை (திங்கட்கிழமை) கரூருக்கு வருகை தர உள்ளதாக கூறப்படுகிறது. மேலும், இந்த வழக்கின் விசாரணையை பார்வையிட்டு ஆய்வு மேற்கொள்கிறார்கள். ஓய்வு பெற்ற நீதிபதி அஜய் ரஸ்தோகியின் வருகையால் இந்த வழக்கு விசாரணை பரபரப்பான கட்டத்தை அடைந்துள்ளது.

## 100 பிறவி எடுத்தாலும், நடிகனாகவே பிறக்க ஆசை...: கோவா விழாவில் ரஜினி உருக்கம்

**சென்னை, டிச.1:**

"100 பிறவிகள் எடுத்தாலும், நான் ரஜினிகாந்தாகவே பிறக்க விரும்புகிறேன்" என்று கோவா சர்வதேச திரைப்பட விழாவில் வாழ்நாள் சாதனையாளர் விருது பெற்ற நடிகர் ரஜினிகாந்த் நெகிழ்ச்சியுடன் தெரிவித்தார்.

கோவாவில் 56-வது சர்வதேச திரைப்பட விழா கடந்த 20-ந்தேதி தொடங்கியது. இதனை மத்திய இணை மந்திரி எல்.முருகன் தொடங்கி வைத்தார்.

இதில் சினிமாவில் பல்வேறு சாதனைகள் செய்த கலைஞர்கள் கவுரவிக்கப்பட்டு வருகிறார்கள். அந்த வகையில் திரைத்துறையில் 50 ஆண்டுகளை நிறைவு செய்ததற்காக நடிகர் ரஜினிகாந்துக்கு 56-வது இந்திய சர்வதேச திரைப்பட விழாவில் கவுரவிக்கப்பட்டார். தனது தனித்துவமான நடிப்பு திறனால் பல தலைமுறைகளைக் கடந்து பார்வையாளர்களை கவர்ந்துள்ளார். இதில் சினிமாவில் பல்வேறு சாதனைகள் செய்த கலைஞர்கள் கவுரவிக்கப்பட்டு வருகிறார்கள். அந்த வகையில் சினிமாவில் 50 ஆண்டுகளைக் கடந்த நடிகர் ரஜினிகாந்துக்கு நேற்று சிறப்பு விருது அளித்து கவுரவிக்கப்பட்டார். கோவா முதல்வர் பிரமோத் சாவந்த், ரஜினிகாந்துக்கு பொன்னாடை அணிவித்து, நினைவுப் பரிசு வழங்கி கவுரவித்தார். மத்திய தகவல் மற்றும் ஒலிபரப்பு, நாடாளுமன்ற விவகாரங்கள் துறை இணையமைச்சர் எல். முருகன், தகவல் ஒலிபரப்பு அமைச்சகத்தின் செயலாளர் சஞ்சய் ஜாஜூ, நடிகர் ரன்வீர் சிங் ஆகியோர் நிகழ்ச்சியில் பங்கேற்றனர்.

விழாவில் ரஜினிகாந்த் பேசும்போது, "எனக்கு விருது வழங்கி கவுரவம் செய்த மத்திய அரசுக்கும் கோவா மாநில அரசுக்கும் நன்றி. இப்போதுதான் சினிமாவில் வந்தது போல இருக்கிறது அதற்குள் 50 ஆண்டுகள் கடந்து விட்டது. சினிமாவையும், நடிப்பையும் என்றுமே விரும்புகிறேன். இன்னும் நூறு பிறவிகள் எடுத்தால் கூட நடிகனாகவே பிறக்க ஆசைப்படுகிறேன்.

என்னை வாழவைக்கும் ரசிகர்களுக்கு என்றென்றும் கடமைப்பட்டுள்ளேன்", என்று குறிப்பிட்டார். இந்த விழாவில் இதுவரை 170-க்கும் மேற்பட்ட படங்கள் திரையிடப்பட்டுள்ளது குறிப்பிடத்தக்கது.

## முதுகலை பட்டதாரி ஆசிரியர் தேர்வு முடிவு வெளியீடு: தமிழ் தகுதித்தாளில் 85 ஆயிரம் பேர் தோல்வியடைந்த அவலம்

**சென்னை, டிச.1:**

முதுகலை பட்டதாரி ஆசிரியர் தேர்வு தமிழ் தகுதித்தாளில் 85 ஆயிரம் பேர் தோல்வியடைந்துள்ளனர்.

முதுகலை பட்டதாரி ஆசிரியர், உடற்கல்வி இயக்குநர் (கிரேடு-1), கணினி பயிற்றுநர் (கிரேடு-1) ஆகிய பதவிகளில் 1,996 காலி இடங்களை நிரப்பும் வகையில் கடந்த அக்டோபர் 12-ம் தேதி போட்டித் தேர்வு நடத்தப்பட்டது.

முதுகலை ஆசிரியர் தேர்வில் சம்பந்தப்பட்ட பாடம், கல்வி உளவியல், பொது அறிவு ஆகிய பகுதிகளில் இருந்து 150 கேள்விகள் இடம்பெற்றன. இதற்கு 150 மதிப்பெண். அதேபோல, கட்டாயத் தமிழ் மொழி தகுதித்தாள் தேர்வில் 30 கேள்விகளுக்கு 50 மதிப்பெண். இதில் 40 சதவீத மதிப்பெண் அதாவது 50-க்கு 20 மதிப்பெண் பெற்றால் மட்டுமே தேர்வர்களின் பாட விடைத்தாள் மதிப்பீடு செய்யப்படும். இறுதி விடைக்குறிப்பு, தேர்வு முடிவுகள் மற்றும் '1: 1.25' என்ற விகிதாச்சார அடிப்படையில் சான்றிதழ் சரிபார்ப்புக்கான பட்டியல் தேர்வு வாரியத்தின் இணையதளத்தில் பாட வாரியாக வெளியிடப்பட்டுள்ளது. மொத்தம் 2.36 லட்சம் பேர் தேர்வு எழுதிய நிலையில், தமிழ் தகுதித்தாள் தேர்வில் 85 ஆயிரத்துக்கும் மேற்பட்டோர் தோல்வி அடைந்துள்ளதாக தகவல் வெளியாகியுள்ளது. மேலும், மற்ற அனைத்து பாடத்தேர்வையும் நன்றாக எழுதி, தமிழ் தகுதித்தாளில் தேர்ச்சி பெறாததால் வெற்றி வாய்ப்பை இழந்த தேர்வர்களும் இதில் உள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது.

## பட்டரவாக்கத்தில் 12 கிலோ கஞ்சா பறிமுதல்: ஆசாமி கைது



**ஆவடி, டிச.1:**

பட்டரவாக்கம் ரெயில் நிலையம் அருகே கஞ்சா விற்பனை செய்த ஆசாமியை கைது செய்த போலீசார் 12 கிலோ கஞ்சாவை பறிமுதல் செய்தனர்.

ஆவடி காவல் ஆணையரகத்திற்கு உட்பட்ட பகுதிகளில், தமிழ்நாடு அரசின்"போதை இல்லா தமிழ்நாடு" என்ற கோட்பாட்டை வலியுறுத்தியும், அரசால் தடை செய்யப்பட்ட போதை பொருட்களுக்கு எதிரான நடவடிக்கைகளின் தொடர்ச்சியாகவும் அம்பத்தூர் மதுவிலக்கு அமலாக்கப்பிரிவு காவல் ஆய்வாளர் மற்றும் உதவி ஆய்வாளர் தலைமையிலான போலீசார் பட்டரவாக்கம் இரயில் நிலையம் ஆட்டோ ஸ்டாண்ட் அருகே கண்காணிப்பு பணியில் இருந்த போது அங்கு சுற்றி திரிந்து கொண்டிருந்த இக்பால் என்பவரை பிடித்து விசாரணை நடத்தினர்.

அப்போது அவரை சோதனை செய்தபோது 12 கிலோ கஞ்சா இருப்பது தெரிய வந்தது. இதனையடுத்து அவரிடமிருந்து மேற்படி கஞ்சாவை பறிமுதல் செய்தனர்.

# பெண் குழந்தைகள் மாநில அரசின் விருது பெற விண்ணப்பிக்கலாம்: தூத்துக்குடி கலெக்டர் தகவல்

**சென்னை, டிச.1:**

*13 வயதிற்கு மேல் 18 வயதிற்குட்பட்ட வீர தீர செயல் புரிந்த தமிழகத்தில் வசிக்கும் பெண் குழந்தைகள் மாநில அரசின் விருது பெற விண்ணப்பிக்கலாம் என தெரிவிக்கப்பட்டுள்ளது.*

*தூத்துக்குடி மாவட்ட கலெக்டர் இளம்பகவத் வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில் கூறியிருப்பதாவது:*




*தமிழ்நாடு அரசினால் ஒவ்வொரு ஆண்டும் பெண் குழந்தைகளுக்கு எதிரான குற்றங்களைத் தடுக்கவும், அனைத்து பெண் குழந்தைகளும் 18 வயது வரை கல்வி கற்றலை உறுதி செய்யவும், பெண் குழந்தை தொழிலாளர் முறையை ஒழிக்கவும், பெண் குழந்தை திருமணங்களைத் தடுக்கவும் பாடுபட்டு, வீரதீர செயல் புரிந்த 18 வயதிற்குட்பட்ட பெண் குழந்தைகளுக்கு பின்வரும் தகுதிகளின் அடிப்படையில் தேசிய பெண் குழந்தை தினத்தில் (ஜனவரி 24) பாராட்டு பத்திரமும், ரூபாய் ஒரு லட்சத்திற்கான காசோலையும் வழங்கி சிறப்பிக்கப்பட்டு வருகிறது. 2025-26-ம் ஆண்டிற்கான விருது மற்றும் பரிசுத்தொகை வழங்கும் பொருட்டு உரிய ஆவணங்களுடன் விண்ணப்பிக்கலாம்.*

*தகுதிகள்:*

*13 வயதிற்கு மேல் 18 வயதிற்குட்பட்ட தமிழகத்தில் வசிக்கும் பெண் குழந்தை (31 டிசம்பரின் படி) வீர தீர செயல் புரிந்திருக்க வேண்டியவை:- பிற பெண் குழந்தைகளின் கல்விக்கு உதவுதல், பெண் குழந்தை தொழிலாளர் ஒழிப்பு, பெண் குழந்தை திருமணத்தை தடுத்தல் மற்றும் தவிர்த்தல், வேறு ஏதாவது வகையில் சிறப்பான/தனித்துவமான சாதனை செய்திருத்தல், பெண்களுக்கு எதிரான சமூக அவலங்கள், மூடநம்பிக்கைகள் ஆகியவற்றிற்கு தீர்வு காண்பதற்கு ஓவியங்கள், கவிதைகள் மற்றும் கட்டுரைகள் மூலமாகவோ விழிப்புணர்வை ஏற்படுத்தியிருத்தல், ஆண்கள் மட்டுமே சாதிக்க முடியும் என்பதை போன்ற செயல்களை பெண்களாலும் சாதிக்க முடியும் என்று சாதித்திருத்தல் வேண்டும்.*

*விண்ணப்ப விபரங்கள்:*

*குழந்தையின் பெயர், தாய்/தந்தை முகவரி, ஆதார் எண், புகைப்படம் ஆகியவற்றுடன் குழந்தை ஆற்றிய அசாதாரண வீர, தீர செயல் மற்றும் சாதனைகள் ஆகியவற்றின் ஒரு பக்கத்திற்கு மிகாத குறிப்பு மற்றும் அதற்கான ஆதாரங்கள் இணைக்கப்பட வேண்டும்.*

*மேற்சொன்ன விருதினை பெற உரிய ஆவணங்களுடன் முன்மொழிவுகளை மாவட்ட காவல் கண்காணிப்பாளர் அலுவலகம், மாவட்ட முதன்மை கல்வி அலுவலகம், மாவட்ட சமூகநல அலுவலகம், மாவட்ட குழந்தைகள் பாதுகாப்பு அலுவலகம், மாவட்ட திட்ட அலுவலகம் (ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சித் திட்டம்) ஆகிய அலுவலகங்களில் இன்றுக்குள் (30.11.2025) விண்ணப்பிக்குமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறது. மேலும் குழந்தைகளுக்காக பணிபுரியும் சிறந்த தொண்டு நிறுவனங்கள் வாயிலாகவும் இவ்விருதிற்கான முன்மொழிவுகளை அனுப்பலாம்.*

*இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார்.*

# இசிஐ நெட் செயலியை மேம்படுத்த பொது மக்கள் ஆலோசனை வழங்கலாம்

**சென்னை டிச.1:**

தேர்தல் கமிஷனின், 'ECiNet' என்ற மொபைல் போன் செயலியை, எளிதாக அனைவரும் பயப்படுத்தக்கூடிய வகையில் மாற்றியமைக்க, பொது மக்கள் ஆலோசனை வழங்கலாம்.

இது தொடர்பாக, தலைமை தேர்தல் கமிஷனின் உதவி இயக்குநர் அபூர்வா குமார் சிங் வெளியிட்டுள்ள அறிக்கை:

தேர்தல் கமிஷனின், 'இசிஐ நெட்' எனும் மொபைல் போன் செயலியை, எளிதாக அனைவரும் பயப்படுத்தக்கூடிய வகையில் மாற்றியமைக்க, பொது மக்கள் ஆலோசனை வழங்கலாம்.

பொது மக்கள் அனைவரும் இச்செயலியை பதிவிறக்கம் செய்து, அதில் உள்ள, 'சப்மிட் சஜ்ஜசன்' வசதி வாயிலாக, டிச., 27ம் தேதி வரை பரிந்துரைகளை வழங்கலாம்.

மேம்படுத்தப்படும் சமீபத்தில் நடந்த பீஹார் சட்டசபை தேர்தல் மற்றும் இடைத்தேர்தல்களில் சோதனை முயற்சியாக, இந்த செயலி பயன்படுத்தப்பட்டது.

இதனால் வாக்காளர் சேவைகள் மேம்படுத்தப்பட்டதுடன், ஓட்டுப்பதிவு சதவீத விபரங்கள் விரைவாக வெளியிடப்பட்டன.

பீஹார் தேர்தல் அனுபவங்கள், தலைமை தேர்தல் அதிகாரிகள், மாவட்ட தேர்தல் அதிகாரிகள், வாக்காளர் பதிவு அதிகாரிகள், கண்காணிப்பாளர்கள், களப்பணியாளர்கள் வழங்கிய கருத்துக்கள், இச்செயலியின் செயல் திறனை மேம்படுத்துவதற்காக ஒருங்கிணைக்கப்பட்டு வருகின்றன.

மக்கள் வழங்கும் அனைத்து பரிந்துரைகளும் பரிசீலிக்கப்பட்டு, இச்செயலி பயனருக்கு ஏற்றவாறு மேம்படுத்தப்படும். ECINet தளம், வரும் ஜனவரியில் அதிகாரப்பூர்வமாக வெளியிடப்படும்.

ஒரே தளம் வாக்காளர் வசதி மற் றும் தேர்தல் செயல்முறைகளின் வெளிப்படைத்தன்மையை தொழில்நுட்பம் வாயிலாக வலுப்படுத்துவதை நோக்கமாகக் கொண்டுள்ள இச்செயலி, தலைமை தேர்தல் கமிஷனர் ஞானேஷ்குமார் தலைமையில், தேர்தல் கமிஷனர்கள் சுக்பீர் சிங் சந்து, விவேக் ஜோஷி ஆகியோரின் மேற்பார்வையில் முன்னெடுக்கப்பட்ட முக்கிய முயற்சிகளில் ஒன்று.

இச்செயலியில், மக்கள் பயன்பாட்டிற்கான ஒருங்கிணைந்த வாக்காளர் உதவி மையம், ஓட்டு எண்ணிக்கை, வேட்பாளர் விபரங்கள் தொடர்புடைய செயலிகள், இணையதளங்கள் ஒரே தளத்தில் ஒருங்கிணைக்கப்பட்டு உள்ளன.

இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.




## தொழில்நுட்ப / அறிவியல் செய்திகள்

### குளிப்பதற்கு சோம்பலா? வந்தாச்சு! மனிதனை சுத்தம் செய்யும் வாஷிங் மெஷின்!

குளிப்பதற்கு சோம்பலாக இருக்கும்போது, நம்மை குளிப்பாட்டி விட யாராவது அல்லது ஒரு இயந்திரம் இருந்தால் நன்றாக இருந்திருக்கும் என்று நீங்கள் யோசித்ததுண்டா? அது சாத்தியமாகப் போகிறது என்றால் உங்களால் நம்ப முடிகிறதா?

ஆம், சமீபத்தில் பிரபல ஜப்பான் நிறுவனமான சயின்ஸ் கோ. லிமிடெட் என்ற நிறுவனம், மனிதர்களுக்கான சலவை இயந்திரத்தைத் தயாரிக்கும் திட்டம் பற்றி தகவல் வெளியிட்டிருந்தது. இந்த மனித சலவை இயந்திரம் பற்றிய கருத்துக்கு சுமார் 50 ஆண்டுகளுக்கு முன்பே அடிக்கல் நாட்டப்பட்டுவிட்டது. 1970 இல் ஜப்பான் உலக கண்காட்சியில் 'மனித சலவை இயந்திரம்' ஒன்று அறிமுகப்படுத்தப்பட்டது. 'அல்ட்ராசோனிக் பாத்' என்று அழைக்கப்படும் இந்த இயந்திரம் சன்யோ எலெக்ட்ரிக் கோ என்ற (Sanyo Electric Co.) நிறுவனத்தால் உருவாக்கப்பட்டு காட்சிக்கு வைக்கப்பட்டது. அந்த சமயத்தில், உலக நாடுகளின் மத்தியில் இது மிகப்பெரிய பரபரப்பை ஏற்படுத்தியது. இந்த சலவை இயந்திரம் வெறும் 15 நிமிடங்களில், அதற்குள் இருக்கும் மனிதரை மஜாஜ் செய்து, சுத்தப்படுத்தி, உலர்த்தவும் செய்தது. அச்சமயத்தில் இந்த மனித சலவை இயந்திரம் வணிக ரீதியாக முக்கியத்துவம் பெறவில்லை. 50 ஆண்டுகளுக்குப் பிறகு, தற்போது இந்த விசித்திரமான கண்டுபிடிப்பு உயர் தொழில்நுட்ப மேம்படுத்தலுடன் மீண்டு வருகிறது. சயின்ஸ் கோ. லிமிடெட் நிறுவனத்தின் தலைவரான யசுவாகி அயோமா, அவருக்கு 10 வயதாக இருக்கும்போது, 'அல்ட்ராசோனிக் பாத்' சலவை இயந்திரத்தால் ஈர்க்கப்பட்டு, அவருக்கு வாய்ப்பு கிடைக்கும்போது அந்த இயந்திரத்தை மேம்படுத்த முடிவு செய்தாராம்.

அதனடிப்படையில், குளியல் மற்றும் சமையலறை கண்டுபிடிப்புகளில் நிபுணத்துவம் பெற்ற சயின்ஸ் கோ. லிமிடெட் நிறுவனம், மனித சலவை இயந்திரத்தை தன் சொந்த பதிப்பில் உருவாக்கும் திட்டத்தை வெளியிட்டது. இந்தத் திட்டத்திற்கு 'உசோயாரோ' என்று பெயர் சூட்டியுள்ளது. இந்த இயந்திரம் நுண்குமிழி தொழில்நுட்பத்தைப் பயன்படுத்தி இயங்கும் என்றும், இதனுடன் பல்வேறு கண்காணிப்பு சென்சார்கள் மற்றும் செயற்கைநுண்ணறிவு அமைப்பும் இணைக்கப்பட்டுள்ளது என்றும் இந்நிறுவனம் தெரிவித்துள்ளது. மனிதரை சுத்தப்படுத்துவதோடு, அவரின் மனநிலை மேம்படுத்தி ரிலாக்ஸாக வைத்திருக்க உதவுவதே இந்த மனித சலவை இயந்திரத்தின் நோக்கம் என்றும் அதனடிப்படையில் கூறப்படுகிறது. இதன் செயற்கை நுண்ணறிவு தொழில்நுட்பமானது, நாம் அமைதியாக அல்லது உற்சாகமாக உணர்கிறோமா என்பதை பகுப்பாய்வு செய்து அதற்கேட்ப செயல்பட உதவுகிறது. ஒரு மனிதரை சுத்தப்படுத்த இந்த இயந்திரம் சுமாராக 15 நிமிடங்கள் எடுத்துக் கொள்ளுமாம்.

# டிட்வா புயல் காரணமாக 100 ஆண்டுகளில் இல்லாத குறைந்த வெப்பம் பதிவு

**திருநெல்வேலி, டிச.1:**

தென் மாவட்டங்களை நடுங்கவைக்கும் வகையில் நேற்று கடுமையான குளிர் பதிவாகி உள்ளது. மதுரை, ராமநாதபுரம், தூத்துக்குடி, திருநெல்வேலி, தென்காசி, கன்னியாகுமரி உள்ளிட்ட மாவட்டங்களில் பகலிலேயே ஊட்டி, கொடைக்கானலை ஒத்த குளிர் நிலவியது.

திருநெல்வேலியில் 100 ஆண்டுகளில் இல்லாத அளவுக்கு நேற்று 22 டிகிரி வெப்பநிலை பதிவு செய்யப்பட்டது. டிசம்பர் - ஜனவரி மாதங்களிலும் இதுபோன்ற பகல் நேர குளிர் இதற்கு முன் பதிவாகவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

மதுரையில் 22.6 டிகிரி வெப்பநிலை பதிவாகி புதிய சாதனை படைத்துள்ளது. இதற்கு முன்பு 2011ஆம் ஆண்டு 24 டிகிரி வெப்பநிலை மட்டுமே பதிவாகியிருந்தது.


தூத்துக்குடியில் நேற்று 20.5 டிகிரி வெப்பநிலை பதிவு செய்யப்பட்டு, 2004ஆம் ஆண்டில் ஏற்பட்ட 25.5 டிகிரி சாதனையை முறியடித்துள்ளது.

கோவில்பட்டி 21.8, தென்காசி 21, திருச்செந்தூர் 20, பாம்பன் 23, கன்னியாகுமரி 26.6 என தென் மாவட்டங்கள் முழுவதும் வரலாற்றில் இல்லாத அளவுக்கு குளிர் பதிவாகியுள்ளது. இத்தகவலை தன்னார்வ வானிலை ஆய்வாளர் தென்காசி ராஜா தெரிவித்துள்ளார்.

# அதிக சக்தி 'டூவீலர்' ஓட்டுபவர்களுக்கு கூடுதல் திறன் பரிசோதனை அவசியமா?

## மத்திய அரசுக்கு ஐகோர்ட் பரிந்துரை





**சென்னை, டிச.1:**

அதிக சக்தி கொண்ட இரு சக்கர வாகனங்களை ஓட்டுவோருக்கு, கூடுதல் ஓட்டுநர் திறன் பரிசோதனை அவசியமா என்பது குறித்து ஆய்வு செய்ய, நிபுணர் குழு அமைக்கும்படி, மத்திய அரசுக்கு சென்னை உயர் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

விபத்து தொடர்பான ஒரு வழக்கை விசாரித்த சென்னை உயர் நீதிமன்ற நீதிபதி டி.பரதசக்கரவர்த்தி பிறப்பித்த உத்தரவு:

மாஜிஸ்திரேட் நீதிமன்றங்களில் நிலுவையில் உள்ள வழக்குகளில், 20 சதவீத வழக்குகள் விபத்து வழக்குகளாக உள்ளன.

இதில், பெரும்பாலான வழக்குகள், அதிக சக்தி கொண்ட இருசக்கர வாகனங்கள் சம்பந்தப்பட்டவையாக உள்ளன.

அதிக சக்தி மற்றும் எடை கொண்ட இந்த இருசக்கர வாகனங்களை ஓட்டும்போது, எளிதில் கட்டுப்பாட்டை இழந்து விபத்துகள் ஏற்படுகின்றன.

இதுபோன்ற அதிக சக்தி கொண்ட இருசக்கர வாகனங்களை ஓட்டுவோருக்கு, கூடுதல் ஓட்டுநர் திறன் பரிசோதனை நடத்த வேண்டுமா என்பது குறித்து ஆராய வேண்டும்.

அதற்கு, நிபுணர்கள், வாகன உற்பத்தியாளர்கள் உள்ளிட்டோர் அடங்கிய நிபுணர் குழுவை, மூன்று மாதங்களில் மத்திய சாலை போக்குவரத்து துறை அமைக்க வேண்டும்.

அந்த நிபுணர் குழு, நான்கு மாதங்களில் தங்கள் பரிந்துரைகளை மத்திய அரசிற்கு வழங்க வேண்டும். அதன் அடிப்படையில் உரிய நடைமுறைகளை மத்திய அரசு வகுக்க வேண்டும். இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.

# சென்னை வடபழனி சிம்ஸ் மருத்துவமனையில் மூளைச் சாவு அடைந்த பெண்ணின் உடல் உறுப்புகள் தானம்: 8 பேருக்கு மறுவாழ்வு

**சென்னை, டிச.1:**

மூளைச் சாவு ஏற்பட்ட ஒரு பெண்ணின் குடும்பத்தினர் உறுப்புத் தானத்திற்கு முன்வந்ததின் மூலம் 8 பேருக்கு மறுவாழ்வு கிடைத்துள்ளது என்று வடபழனியில் உள்ள 'சிம்ஸ்' மருத்துவமனையின் துணைத்தலைவர் மற்றும் மூத்த மருத்துவரான டாக்டர் ராஜு சிவசாமி கூறினார்.






சென்னை வடபழனியில் உள்ள 'சிம்ஸ்' மருத்துவமனையில், மதுரவாயிலைச் சேர்ந்த 51 வயது பெண்ணை நவம்பர் மாதம் 25-ம் தேதி மிகவும் கவலைக்கிடமான நிலையில் அவசர சிகிச்சைப் பிரிவில் அனுமதிக்கப்பட்டார். அனைத்து துறைகளின் மூத்த மருத்துவ நிபுணர்களின் கண்காணிப்பில், அவர் நான்கு நாட்கள் தீவிர சிகிச்சைப் பிரிவில் சிகிச்சை பெற்று வந்தார். அவருக்கு எம்ஆர்ஐ ஸ்கேன் எடுக்கப்பட்டபோது, பின்புற சுருட்சி பக்கவாதம் இருப்பது கண்டறியப்பட்டது. எனினும் சிகிச்சை பயனளிக்காத காரணத்தால், அவர் மூளைச் சாவு அடைந்தார்.

இந்த துயரமான நேரத்திலும், அவரது கணவர், சகோதரர் மற்றும் மகன் ஆகியோர் அந்த பெண்ணின் உறுப்புகளை தானம் செய்ய தாமாகவே முன்வந்தனர். மூளைச் சாவு உறுதி செய்யப்பட்ட ஒருவருக்கு செய்யப்பட வேண்டிய அனைத்து பரிசோதனைகளும் மேற்கொள்ளப்பட்டு, அவரது உறுப்புகள் மீட்கப்பட்டன. அவரது கல்லீரல் மற்றும் ஒரு சிறுநீரகம் சிம்ஸ் மருத்துவமனையில் உள்ள இரண்டு நபர்களுக்கு பொருத்தப்பட்டது.

அதேபோல், இரண்டு நுரையீரல்கள் குளோபல் மருத்துவமனையில் உள்ள ஒரு நோயாளிக்கும், இருதயம் எம்ஜிஎம் மருத்துவமனையில் உள்ள ஒரு நோயாளிக்கும் பொருத்தப்பட்டது. இரண்டு விழிப்படலங்கள் சங்கர நேத்ராலய மருத்துவமனையின் கண் வங்கிக்கு தானமாக வழங்கப்பட்டது என்று மருத்துவமனை துணைத்தலைவர் டாக்டர் ராஜு சிவசாமி கூறினார்.

## க்ரைம் கார்னர்

### கடலை மிட்டாய் வியாபாரி உலக்கையால் அடித்துக்கொலை: வாலிபர் வெறிச்செயல்

**தூத்துக்குடி, டிச.1:**

தூத்துக்குடி மாவட்டம் நாசரேத் அருகே உள்ள சின்னமாடன் குடியிருப்பை சேர்ந்தவர் நாகராஜ் (வயது 53). இவர் கடலை மிட்டாய் வியாபாரம் செய்து வந்தார். இவருடைய மனைவி ஏற்கனவே இறந்து விட்டார். இந்த தம்பதிக்கு 2 மகன்களும், 2 மகள்களும் உள்ளனர். நாகராஜ் தனது மகள்கள் 2 பேருக்கும் திருமணம் செய்து வைத்துள்ளார். இதே ஊரைச் சேர்ந்த சித்திரைவேல் மகன் ஜெய்சங்கர்(27), டிரைவர்.

கடந்த 27-ந் தேதி நாகராஜின் மகள்வழி பேத்தியின் பூப்புனித நீராட்டு விழா நடந்தது. இதனால் நாகராஜ் நேற்று முன்தினம் தனது நண்பர்கள் மற்றும் நன்கு தெரிந்தவர்களுக்கு மது விருந்து வைத்துள்ளார். இதையறிந்த ஜெய்சங்கர் தனக்கும் மது வாங்கித் தரும்படி கேட்டார். ஆனால் அவரை நாகராஜ் மதுவிருந்துக்கு அழைக்கவில்லை. இதனால் அன்று இரவில் மீண்டும் தனக்கு மது வாங்கித் தரும்படி ஜெய்சங்கர் கேட்டு அடம்பிடித்துள்ளார். இதுதொடர்பாக இருவருக்கும் இடையே கடும் வாக்குவாதம் ஏற்பட்டது. வாக்குவாதம் முற்றிய நிலையில் இருவருக்கும் இடையே கைகலப்பு ஏற்பட்டது.

ஆத்திரமடைந்த ஜெய்சங்கர் மறைத்து வைத்திருந்த கத்தியால் நாகராஜை சரமாரி குத்தியதாக கூறப்படுகிறது. ரத்த வெள்ளத்தில் சரிந்த அவரை அங்கிருந்த உலக்கையால் ஜெய்சங்கர் சரமாரி அடித்தார். இதில் பலத்த காயம் அடைந்த நாகராஜ் ரத்த வெள்ளத்தில் சம்பவ இடத்திலேயே பரிதாபமாக உயிரிழந்தார். அதன்பிறகு ஜெய்சங்கர் அங்கிருந்து தப்பி ஓடினார்.

இதுகுறித்து தகவல் அறிந்ததும் சாத்தான்குளம் டி.எஸ்.பி. ஆவுடையப்பன், நாசரேத் போலீஸ் இன்ஸ்பெக்டர் வனசுந்தர் மற்றும் போலீசார் சம்பவ இடத்துக்கு விரைந்து சென்று விசாரணை நடத்தினர். நாகராஜின் உடலை கைப்பற்றி பிரேத பரிசோதனைக்காக தூத்துக்குடி அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தனர். தப்பி ஓடிய ஜெயசங்கரை போலீசார் தேடி கண்டுபிடித்து கைது செய்தனர். அவரிடம் தொடர்ந்து விசாரணை நடத்தி வருகின்றனர்.

மது விருந்துக்கு அழைக்காத ஆத்திரத்தில் வியாபாரியை, வாலிபர் கொலை செய்த சம்பவம் அந்த பகுதியில் பரபரப்பை ஏற்படுத்தி உள்ளது.

### திருச்சியில் ரூ.3 கோடி மதிப்பிலான உயர்ரக கஞ்சா பறிமுதல்

**திருச்சி, டிச.1:**

சிங்கப்பூரில் இருந்து நேற்று ஸ்கூட் விமானம் திருச்சி விமான நிலையத்துக்கு வந்தது. இந்த விமானத்தில் தாய்லாந்தில் இருந்து சிங்கப்பூர் வழியாக திருச்சி வந்த பயணி ஒருவரின் உடைமைகளை சுங்கத்துறை அதிகாரிகள் சோதனை செய்தனர். அப்போது, அதில் 3 கிலோ ஹைட்ரோபோனிக் என்ற உயர்ரக கஞ்சா இருந்தது கண்டுபிடிக்கப்பட்டது. இதனையடுத்து அதிகாரிகள் அதனை பறிமுதல் செய்தனர். மேலும் அதனை கடத்தி வந்த பயணியை பிடித்து தொடர்ந்து விசாரணை நடத்தி வருகின்றனர். பறிமுதல் செய்யப்பட்ட உயர்ரக கஞ்சாவின் மதிப்பு இந்திய ரூபாய் மதிப்பில் ரூ.3 கோடி ஆகும்.

### கிண்டியில் கார் மீது பெட்ரோல் குண்டு வீசிய வாலிபர் கைது

**சென்னை, டிச.1:**

சென்னை கிண்டி ஈஸ்வரி ரத்தினம் கார்டன் பகுதியை சேர்ந்தவர் ராம் நித்திஷ் (வயது 26). தனியார் கட்டுமான நிறுவனத்தில் என்ஜினீயராக பணி புரியும் இவரது கார் நேற்று அதிகாலை, திடீரென தீப்பிடித்து எரிந்தது. அதிர்ச்சி அடைந்த ராம் நித்திஷ், அக்கம் பக்கத்தினர் உதவியுடன் காரில் எரிந்த தீயை தண்ணீரை ஊற்றி அணைத்தார். எனினும் காரின் முன்பகுதி சேதமடைந்தது.

இதுகுறித்து அவர் கிண்டி போலீஸ் நிலையத்தில் புகார் செய்தார். அதன்பேரில் போலீசார் நடத்திய விசாரணையில் கிண்டி, மடுவாங்கரையை சேர்ந்த விஜய பிரபாகரன்(25) என்பவர் பீர் பாட்டிலில் பெட்ரோல் ஊற்றி தீ வைத்து அதனை ராம் நித்திஷ் கார் மீது வீசியது தெரிந்தது. இதையடுத்து பிரபாகரனை போலீசார் கைது செய்தனர். மது போதைக்கு அடிமையான பிரபாகரன், 2 முறை போதை மறுவாழ்வு மையத்தில் சிகிச்சை பெற்றுள்ளார். இதனால் அவர் மனநலம் பாதித்ததாக கூறப்படுகிறது. எதற்காக ராம் நித்திஷ் காரில் பெட்ரோல் குண்டு வீசினார்? என போலீசார் விசாரித்து வருகின்றனர்.

### காதலுக்கு எதிர்ப்பு: மாணவியின் கழுத்தை அறுத்து வாலிபர் தற்கொலை

**கரூர், டிச.1:**

கரூர் மாவட்டம் அரவக்குறிச்சியை அடுத்த வேலம்பாடி கிராமத்தை சேர்ந்தவர் வசந்தகுமார் (வயது 26), எலக்ட்ரீசியன். இவர் அரசு மேல்நிலைப்பள்ளியில் பிளஸ்-2 படித்து வரும் 16 வயது சிறுமியை கடந்த 3 ஆண்டுகளாக காதலித்து வந்தார். இவர்களது காதல் விவகாரம் சிறுமியின் பெற்றோருக்கு தெரியவந்தது. இதையடுத்து, அந்த சிறுமியை அவரது பெற்றோர் கண்டித்தனர். அப்போது காதலுக்கு பெற்றோர் எதிர்ப்பு தெரிவிப்பதால் இருவரும் தற்கொலை செய்து கொள்வது என்று கனத்த இதயத்துடன் முடிவு செய்தனர். அதன்படி வசந்தகுமார் சிறுமியின் கழுத்தை பிளேடால் அறுத்துள்ளார். இதில் ரத்தம் பீய்ச்சியடித்து சிறுமி மயங்கி கீழே சரிந்தார். இதில் அவர் இறந்து விட்டதாக நினைத்த வசந்தகுமார் சிறுமியின் வீட்டிலேயே தூக்குப்போட்டு தற்கொலை செய்து கொண்டார். இதற்கிடையே மயக்கம் தெளிந்து கண் விழித்த சிறுமி வசந்தகுமார் தூக்கில் பிணமாக தொங்குவதை கண்டு அதிர்ச்சியடைந்தார். பின்னர் அப்பகுதி மக்களிடம் தகவல் தெரிவித்தார். இந்த சம்பவம் தொடர்பாக போலீசார் வழக்குப்பதிவு செய்து விசாரணை நடத்தி வருகின்றனர்.

# சபரிமலைக்கு செல்லும் அய்யப்ப பக்தர்களை குறி வைத்து பணம் மோசடி

திருவனந்தபுரம், டிச.1:

சபரிமலைக்கு செல்லும் அய்யப்ப பக்தர்களை குறி வைத்து பணம் மோசடி செய்யப்பட்டுள்ளது. இதற்கான போலி இணையதளத்தை சைபர் கிரைம் போலீசார் கண்டறிந்தனர்.



சபரிமலை கோவிலில் அய்யப்ப பக்தர்கள் தங்கி ஓய்வு எடுக்க ஏராளமான அறைகள் உள்ளன. இவை அனைத்தும் திருவிதாங்கூர் தேவஸ்தானத்தின் கட்டுப்பாட்டில் உள்ளன. தரிசனத்திற்கு முன்பதிவு செய்வது போல், சபரிமலையில் ஓய்வெடுக்க அறைகளுக்கும் ஆன்லைனில் முன்பதிவு செய்ய வேண்டும். இந்த நிலையில், சபரிமலையில் அறைகளுக்கு ஆன்லைனில் முன்பதிவு செய்வதற்காக போலி இணையதளம் உருவாக்கப்பட்டிருந்ததை பத்தனம்திட்டா சைபர் கிரைம் போலீசார் கண்டறிந்தனர்.

மேலும், அந்த குறிப்பிட்ட இணையதளத்தில் ஏராளமான அய்யப்ப பக்தர்கள் முன்பதிவு செய்து ஏமாற்றம் அடைந்ததும் தெரியவந்தது. இணையதளம் போலியானது என்பதை அறிந்ததும் பக்தர்கள் அதிர்ச்சி அடைந்தனர். ஆயிரக்கணக்கான பக்தர்களிடம் பணத்தை அபகரித்திருக்கலாம் என கூறப்படுகிறது.

இதனைத் தொடர்ந்து அந்த போலி இணையதளத்தை (SANNIDANAMGUESTHOUSE.IN) போலீசார் ஆய்வு செய்தனர். அதில் 2 செல்போன் எண்கள் கொடுக்கப்பட்டிருந்ததை கண்டறிந்தனர். அரியானாவைச் சேர்ந்த ஹமீது என்பவருடைய செல்போன் எண் ஒன்றும், மற்றொரு எண் யாருடையது என்பதையும் தொழில்நுட்ப ரீதியாக விசாரித்து வருகின்றனர். மேலும், போலி வலைத்தளங்களை நம்பி பக்தர்கள் ஏமாற வேண்டாம் என சைபர் கிரைம் போலீசார் எச்சரிக்கை விடுத்துள்ளனர்.

### சபரிமலையில் மேல்சாந்தி, தந்திரி சார்பில் நெய் விற்பனை செய்ய தடை

சபரிமலை அய்யப்பன் கோவிலில் தந்திரி, மேல் சாந்திகள், மற்றும் பூசாரிகள் ரூ.100 கட்டணத்தில் பாக்கெட்டுகளில் பக்தர்களுக்கு நெய் விற்பனை செய்து வந்தனர்.

இதற்கு எதிராக திருவிதாங்கூர் தேவஸ்தான கமிஷனர் கேரள ஐகோர்ட்டு தேவஸ்தான அமர்வில் மனு செய்தார்.

அதில், தந்திரி, மேல்சாந்திகள் மற்றும் கீழ் சாந்திகள் சபரிமலையில் பக்தர்களுக்கு நெய் விற்பனை செய்வதை தடை செய்ய வேண்டும் என்றும், அவ்வாறு விற்பனை செய்ய தந்திரி, மேல்சாந்திகளுக்கு அனுமதி வழங்கப்படவில்லை எனவும் அந்த மனுவில் கூறப்பட்டிருந்தது.

மனுவை விசாரித்த ஐகோர்ட்டு அமர்வு, நெய் விற்பனைக்கு தடை விதித்ததோடு தந்திரி, மேல்சாந்தி அறைகளில் விற்பனைக்காக பாக்கெட்டுகளில் வைக்கப்பட்டுள்ள நெய்களை பறிமுதல் செய்யவும் உத்தரவிட்டது. ஏற்கனவே தேவஸ்தானம் சார்பில் நெய் விற்பனை செய்யப்பட்டு வந்தது குறிப்பிடத்தக்கது.

## போலி மருந்து தொழிற்சாலைக்கு 'சீல்': ரூ.500 கோடி மதிப்பிலான மாத்திரை, உபகரணங்கள் பறிமுதல்



புதுச்சேரி, டிச.1:

புதுவை மேட்டுப்பாளையத்தில் போலி மாத்திரைகள் தயாரித்து நாட்டின் பல்வேறு மாநிலங்களுக்கு விற்பனைக்காக அனுப்பி வைக்கப்படுவதாக புகார் வந்தது.

டெல்லியை தலைமையிடமாக கொண்டு 'சன் பார்மசி' என்ற பெயரில் மாத்திரை நிறுவனம் உள்ளது. அந்த நிறுவனத்தின் பெயரில் புதுவை மேட்டுப்பாளையத்தில் போலி மாத்திரைகள் தயாரித்து நாட்டின் பல்வேறு மாநிலங்களுக்கு விற்பனைக்காக அனுப்பி வைக்கப்படுவதாக புகார் வந்தது. அதன்பேரில் சி.பி.சி.ஐ.டி. போலீசார் வழக்குப்பதிவு செய்து புதுவை ரெட்டியார்பாளையத்தில் வசித்து வரும் ராஜாவுக்கு சொந்தமான ரவிக்குமார் இண்டஸ்ட்ரீஸ் தொழிற்சாலைக்கு 'சீல் வைத்தனர். அங்கு ரூ.100 கோடி மதிப்பிலான மாத்திரைகள் பறிமுதல் செய்யப்பட்டது. ராஜாவுக்கு உதவியாக இருந்த ராணா, மெய்யப்பன் ஆகியோர் கைது செய்யப்பட்டனர்.

கைதானவர்கள் சொன்ன தகவலின்பேரில் திருபுவனைபாளையத்தில் செயல்பட்டு வந்த 'லார்வன்' மருந்து தொழிற்சாலையில் நேற்று முன்தினம் சோதனை நடத்தப்பட்டு, 36 அறைகளில் இருந்து 30-க்கும் மேற்பட்ட நோய்களுக்கான போலி மாத்திரைகள், மூலப்பொருட்கள் கண்டுபிடிக்கப்பட்டன. இதைத்தொடர்ந்து நேற்று 2-வது நாளாக புதுச்சேரி மருந்து தர கட்டுப்பாட்டு அதிகாரிகள், சி.பி.சி.ஐ.டி. போலீசார் மீண்டும் சோதனை நடத்தினர்.

கடந்த 2 நாட்களாக நடந்த சோதனையில் பறிமுதல் செய்யப்பட்ட போலி மாத்திரைகள், மருந்து உபகரணங்கள், மூலப்பொருட்களின் மொத்த மதிப்பு ரூ.500 கோடி இருக்கும் என்று கூறப்படுகிறது. மேலும் அத்தொழிற்சாலைக்கு 'சீல்' வைக்கப்பட்டது.

இந்த நிலையில் விரைவில் புதுவை வந்து அமலாக்கத்துறை அதிகாரிகள் நேரில் விசாரணை நடத்துவார்கள் என கூறப்படுகிறது.

## டெல்லியில் அனைத்துக் கட்சி கூட்டம் தொடங்கியது

புதுடெல்லி, டிச.1:

நாடாளுமன்றத்தின் குளிர்காலக் கூட்டத்தொடர் நாளை (டிசம்பர் 1-ம் தேதி) தொடங்கி 19-ம் தேதி வரை நடைபெறவுள்ளது. மொத்தம் 19 நாட்கள் நடைபெறும் இந்தத் தொடரில் 15 அமர்வுகள் திட்டமிடப்பட்டுள்ளன. இதில் 10 முக்கிய மசோதாக்களை அறிமுகப்படுத்த மத்திய அரசு திட்டமிட்டுள்ளது.

இந்நிலையில், இந்தக் கூட்டத்தொடரை சுமுகமாக நடத்தும் நோக்கில் டெல்லியில் அனைத்துக்கட்சி கூட்டம் தொடங்கி நடைபெற்று வருகிறது. பாதுகாப்புத் துறை மந்திரி ராஜ்நாத் சிங் தலைமையில் நடைபெறும் கூட்டத்தில், நாடாளுமன்ற விவகாரங்கள் துறை மந்திரி கிரண் ரிஜிஜூ, அர்ஜுன் ராம் மேக்வால், ஜே.பி. நட்டா உள்ளிட்டோர் பங்கேற்றுள்ளனர். எதிர்க்கட்சிகள் சார்பில் காங்கிரஸ் மூத்த தலைவர் கௌரவ் கோகோய், பிரமோத் திவாரி, திமுக எம்.பி. டி.ஆர்.பாலு, திரிணாமூல் காங்கிரஸ் எம்.பி. டெரிக் ஓ பிரையன் உள்ளிட்ட பலர் கலந்துகொண்டுள்ளனர்.

நாடாளுமன்ற மரபுப்படி நடைபெறும் இக்கூட்டத்தில் நிலுவையில் உள்ள மசோதாக்கள் மற்றும் மத்திய அரசின் திட்டங்கள் குறித்து எதிர்க்கட்சிகளுடன் விவாதிக்கப்பட உள்ளது. கூட்டத்தொடரை சுமூகமாக நடத்துவதற்கும் தாக்கல் செய்யப்படும் மசோதாக்கள் குறித்து ஆக்கப்பூர்வமான விவாதங்களை முன்வைத்து ஒத்துழைப்பு தருமாறு எதிர்க்கட்சி உறுப்பினர்களிடம் மத்திய அரசு கோரிக்கை வைக்க உள்ளது.

எனினும் வாக்காளர் பட்டிய சிறப்பு தீவிர திருத்தம், டெல்லி கார் வெடிப்பு சம்பவம் மற்றும் வெளியுறவுக்கொள்கைகள் தொடர்பாக கேள்வி எழுப்ப எதிர்க்கட்சிகள் திட்டமிட்டுள்ளன. மேலும் பீகார் மாநிலத் தேர்தல் முடிவுகள் எதிர்க்கட்சிகளுக்கு பின்னடைவை ஏற்படுத்தி உள்ள நிலையில், இத்தொடரில் அனல் பறக்கும் விவாதங்கள் நடைபெற வாய்ப்புள்ளது.

## உலகின் சக்தி வாய்ந்த நாடுகளில் இந்தியாவுக்கு 3-வது இடம்

புதுடெல்லி, டிச.1:

ஆஸ்திரேலியாவை அடிப்படையாக கொண்ட லோவி இன்ஸ்டிடியூட் என்ற குழு 'ஆசிய சக்தி குறியீடு' மூலம் உலகில் தலைசிறந்த நாடுகள் எவை? என்ற பட்டியலை வெளியிட்டு இருக்கிறது.

உலகின் சிறந்த நாடுகள் பட்டியல் ஒவ்வொரு ஆண்டும், பல்வேறு அமைப்புகளால் வெளியிடப்படுகிறது. ஒரு நாட்டின் பொருளாதாரம், ராணுவ பலம், அங்கு வசிக்கும் மக்களின் வாழ்வாதாரம், சமூகத்தின் நிலை மற்றும் உலகுக்கு அந்த நாடு அளிக்கும் பங்களிப்பு உள்ளிட்ட காரணிகளை அடிப்படையாக கொண்டு இந்த பட்டியல் தயாராகிறது.

அந்த வகையில் ஆஸ்திரேலியாவை அடிப்படையாக கொண்ட லோவி இன்ஸ்டிடியூட் என்ற குழு 'ஆசிய சக்தி குறியீடு' மூலம் உலகில் தலைசிறந்த நாடுகள் எவை? என்ற பட்டியலை வெளியிட்டு இருக்கிறது.

பொருளாதாரத் திறன், ராணுவத்திறன், நிலைத்தன்மை, எதிர்கால வளங்கள், பொருளாதார உறவுகள், பாதுகாப்பு வலையமைப்புகள், ராஜதந்திர செல்வாக்கு, கலாசார செல்வாக்கு ஆகியவற்றை அடிப்படையாக கொண்டு இந்த பட்டியல் வெளியாகியுள்ளது.

இந்த பட்டியலில் வல்லரசு நாடான அமெரிக்கா முதல் இடத்தையும் (80.5 புள்ளிகள்), அதற்கடுத்தபடியாக சீனா 2-வது இடத்தையும் (73.7 புள்ளிகள்) பெற்று இருக்கிறது. இந்த புள்ளி விவரங்கள் குறியீட்டின்படி, இந்த 2 நாடுகளும் மிக சக்திவாய்ந்த நாடுகளாக சொல்லப்படுகிறது. அதனைத்தொடர்ந்து இந்தியா 3-வது இடத்தில் (40 புள்ளிகள்) உள்ளது.

இந்த புள்ளி விவரங்களை வைத்து இந்தியா முக்கிய சக்திவாய்ந்த நாடாக இருப்பதாக கூறப்பட்டுள்ளது. இந்தியாவின் இந்த முன்னேற்றத்துக்கு நாட்டின் பொருளாதார மீட்பு, அதிகரித்த ராணுவபலம், சர்வதேச அரங்கில் ராஜதந்திர செல்வாக்கு, அரசியல் முக்கியத்துவம் போன்றவை காரணங்களாக சுட்டிக்காட்டப்பட்டு உள்ளது. இதனையடுத்து 38 புள்ளிகளுடன் ஜப்பான் 4-வது இடத்திலும், ரஷியா 32.1 புள்ளிகளுடன் 5-வது இடத்திலும் இருக்கிறது. இந்த நாடுகள் நடுத்தர சக்திவாய்ந்த நாடுகள் என வகைப்படுத்தப்பட்டு இருக்கிறது.

## கேரளாவில் 90 வயதிலும் தேர்தலில் போட்டியிடும் நாராயணன் நாயர்

திருவனந்தபுரம், டிச.1:

கேரளாவில் அடுத்த மாதம் 9, 11-ந் தேதிகளில் 2 கட்டமாக உள்ளாட்சி தேர்தல் நடக்கிறது. அங்கு எர்ணாகுளம் மாவட்டம் அசமண்ணூர் ஊராட்சியில் 2-வது வார்டில் கவுன்சிலராக போட்டியிடுகிறார், 90 வயது நாராயணன் நாயர். சுயேச்சையாக போட்டியிடும் அவர் வீடு, வீடாக சென்று பொதுமக்களிடம் தனக்கு வாக்கு சேகரித்து வருகிறார்.

அவரது மனைவி, ஏற்கனவே மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்டு கட்சி சார்பில் இதே வார்டில் கவுன்சிலராக வெற்றி பெற்றிருந்ததோடு ஊராட்சி தலைவராகவும் பதவி வகித்தவர் ஆவார். இந்திய கம்யூனிஸ்டு கட்சியின் தீவிர ஆதரவாளராக இருந்த நாராயணன் நாயர், அக்கட்சியில் இருந்து விலகி சுயேச்சையாகபோட்டியிடுகிறார்.

இதுகுறித்து அவர் கூறும்போது, வயது எனக்கு ஒரு பிரச்சினை இல்லை. 5 ஆண்டுகளில் மிகவும் ஆக்கப்பூர்வமாக செயல்பட்டு மக்கள் பணியாற்றுவேன். மக்கள் என் மீது பெரும் அன்பு கொண்டு உள்ளார்கள். இங்கு உள்ள அனைவரும் எனக்கு தெரிந்தவர்கள் தான். அவர்கள் என்னை நன்கு அறிவார்கள். ஒரு நாளைக்கு 5 வீடுகள் வீதம் நேரடியாக மக்களை சந்தித்து அவர்களிடம் வாக்கு சேகரித்து வருகிறேன். எனக்கு வெற்றி வாய்ப்பு பிரகாசமாக இருக்கிறது என்றார்.

ஒரு லுங்கியும், அரக்கை பனியனும் மட்டுமே அணிந்து வாக்காளர் வீடுகளுக்கு சென்று மலையாளத்தில் 'நாட்டுக்காரரே'(தமிழில் என் மக்களே) என அன்புடன் அழைத்து ஒட்டு கேட்டு வருகிறார். வாக்காளர்களும் அவரை அன்புடன் வரவேற்று அமரச்செய்து அவருக்கு வாக்களிப்பதாக கூறி நம்பிக்கை அளித்து வருகின்றனர்.

## நேஷனல் ஹெரால்டு வழக்கு: சோனியா, ராகுல் மீது டெல்லி போலீசார் புதிய எப்ஐஆர் பதிவு

புதுடெல்லி, டிச.1:

நேஷனல் ஹெரால்டு மோசடி வழக்கில் காங்கிரஸ் மூத்த தலைவர்கள் சோனியா காந்தி, ராகுல் காந்தி உள்ளிட்டோர் மீது டெல்லி காவல்துறை புதிய எப்ஐஆர் பதிவு செய்துள்ளது.



நேஷனல் ஹெரால்டு என்ற பத்திரிகையை, ஏ.ஜே.எல்., எனப்படும் 'அசோசியேட்டட் ஜர்னல்ஸ் லிமிடெட்' நிறுவனம் நடத்தி வந்தது. நிதி நெருக்கடியில் சிக்கிய இந்த நிறுவனத்தை, 50 லட்சம் ரூபாய்க்கு, 'யங் இந்தியன்ஸ்' என்ற நிறுவனம் வாங்கியது. 'யங் இந்தியன்ஸ்' நிறுவனத்தில், காங்கிரஸ் முன்னாள் தலைவர்களான சோனியா, அவருடைய மகன் ராகுல் முக்கிய பங்குதாரர்களாக உள்ளனர்.

காங்கிரஸ் மூத்த தலைவர்கள் பலரும் இந்த நிறுவனத்தில் இயக்குநர்களாக உள்ளனர். ஏ.ஜே.எல்., நிறுவனத்தின் பல கோடி ரூபாய் மதிப்புள்ள சொத்துக்களை பறிக்கும் வகையில், இந்த பரிவர்த்தனை நடந்ததாக, பாஜக மூத்த தலைவர் சுப்ரமணியன் சுவாமி, 2014-ல் வழக்கு தொடர்ந்தார். இதை மாஜிஸ்திரேட் கோர்ட்டு 2021ல் ஏற்றுக் கொண்டது. இதில் நடந்துள்ள பண மோசடி தொடர்பாக, 2021ல் அமலாக்கத் துறை முறைப்படி வழக்கு பதிவு செய்து விசாரிக்கிறது. டெல்லியிலுள்ள சிறப்பு நீதிமன்றத்தில் நடைபெற்று வருகிறது.

இந்நிலையில் இந்த வழக்கில் புதிய முதல் தகவல் அறிக்கையை டெல்லி போலீசாரின், பொருளாதார குற்றப்பிரிவு இன்று பதிவு செய்துள்ளது. அமலாக்கத் துறை அளித்த புகாரின் பேரில் இந்த எப்ஐஆர் பதிவு செய்யப்பட்டுள்ளது. இந்த புதிய எப்.ஐ.ஆரில் காங்கிரஸ் மூத்த தலைவர்கள் சோனியா காந்தி, ராகுல் காந்தி ஆகியோருடன் மேலும் ஆறு பேரின் பெயர்கள் இணைக்கப்பட்டுள்ளன.

முன்னதாக, இந்த வழக்கில் அமலாக்கத்துறை அதிகாரிகள் குற்றப்பத்திரிகையைத் தாக்கல் செய்தனர். நேற்று இந்த வழக்கு சிறப்பு நீதிமன்ற நீதிபதி விஷால் கோக்னே முன்னிலையில் விசாரணைக்கு வந்தது. அப்போது குற்றப்பத்திரிகை தாக்கலானதை கருத்தில் கொண்டு, வழக்கு தொடர்பான உத்தரவை வரும் டிசம்பர் 16-ம் தேதி பிறப்பிக்கப் போவதாக நீதிபதி விஷால் கோக்னே அறிவித்தார்.

# விளையாட்டு செய்திகள்

## சீனியர் வீரர்களை சந்தித்து ஆலோசனை பெறுவோம் - கே.எல்.ராகுல்

மும்பை, டிச.1:

தென் ஆப்பிரிக்க கிரிக்கெட் அணி, இந்தியாவில் சுற்றுப்பயணம் செய்து விளையாடி வருகிறது. இவ்விரு அணிகள் இடையே முதலில் நடந்த 2 போட்டி கொண்ட டெஸ்ட் தொடரில் தென் ஆப்பிரிக்க அணி 2-0 என்ற கணக்கில் தொடரை முழுமையாக கைப்பற்றி இந்தியாவை ஒயிட்வாஷ் ஆக்கியது. 25 ஆண்டுகளுக்கு பிறகு முதல்முறையாக இந்தியாவை அதன் சொந்த மண்ணில் வீழ்த்தி தென் ஆப்பிரிக்கா டெஸ்ட் தொடரை வென்று அசத்தியது.

இந்த தோல்விக்கு தென் ஆப்பிரிக்க சுழற்பந்து வீச்சில் இந்திய பேட்ஸ்மேன்கள் கொத்தாக விக்கெட்டுகளை இழந்ததே முக்கிய காரணமாக அமைந்தது. இதனால் டி20 கிரிக்கெட்டின் வருகையால் இந்திய பேட்ஸ்மேன்கள் சுழற்பந்துவீச்சை எப்படி எதிர்கொள்ள வேண்டும் என்பதை மறந்து விட்டதாக நிறைய முன்னாள் வீரர்கள் ஆதங்கத்தை வெளிப்படுத்தியுள்ளனர். ஏனெனில் ஒரு காலத்தில் இந்திய வீரர்கள் சுழற்பந்துவீச்சை எதிர்கொள்வதில் கில்லாடியாக திகழ்ந்தனர்.

இந்நிலையில் சுழற்பந்து வீச்சை சிறப்பாக எதிர்கொள்ள சீனியர் வீரர்களை சந்தித்து ஆலோசனை பெறுவோம் என்று கே.எல். ராகுல் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் அளித்த பேட்டியில், "கடந்த இரண்டு சீசன்களாக நாங்கள் சுழற்பந்து வீச்சுக்கு எதிராக சிறப்பாக செயல்படவில்லை. குறிப்பாக சொந்த மண்ணில் எங்களது பேட்ஸ்மேன்கள் சுழற்பந்து வீச்சுக்கு எதிராக தொடர்ந்து தடுமாறுவது கவலை அளிக்கிறது. நாங்கள் சுழற்பந்து வீச்சுக்கு எதிராக முன்பு சிறப்பாக செயல்பட்டது போன்று தற்போது நன்றாக செயல்பட முடியாததற்கான காரணம் என்ன என்பது எனக்கு தெரியவில்லை. அதற்கான உறுதியான பதிலும் என்னிடம் இல்லை.

சுழற்பந்து வீச்சை தனிப்பட்ட முறையிலும், ஒரு பேட்டிங் குழுவாகவும் சிறப்பாக எதிர்கொள்வது எப்படி என்பதில் நாங்கள் எல்லோரும் கவனம் செலுத்த வேண்டும். இந்த பிரச்சினையை ஒரே நாள் இரவில் சரிசெய்து விட முடியாது.

நாங்கள் நமக்கு என்ன மாதிரியான முன்னேற்றம் தேவை என்பதை பார்ப்போம். அடுத்து வரக்கூடிய இலங்கை மற்றும் ஆஸ்திரேலியாவுக்கு எதிரான தொடருக்கு முன்பாக நாங்கள் சுழற்பந்து வீச்சை சிறப்பாக எதிர்கொள்ள தயாராக இருப்போம் என்று நம்புகிறேன்.

அதற்காக சுழற்பந்து வீச்சை மிகவும் சிறப்பாக விளையாடிய சீனியர் வீரர்களை சந்தித்து ஆலோசனை பெறுவோம். சுழற்பந்து வீச்சுக்கு எதிரான நமது பாரம்பரிய ஆதிக்கத்தை மீண்டும் நிலை நாட்ட ஒவ்வொரு வீரரும் தங்களது ஆட்ட நுணுக்கத்தை மேம்படுத்த வேண்டும்" என்று கூறினார்.

## சர்வதேச கிரிக்கெட்: சச்சினின் வாழ்நாள் சாதனையை தகர்த்த விராட் கோலி

ராஞ்சி, டிச.1:

இந்தியா - தென் ஆப்பிரிக்கா இடையிலான 3 ஆட்டங்கள் கொண்ட ஒருநாள் தொடரின் முதல் போட்டி ராஞ்சியில் இன்று நடைபெற்று வருகிறது. இதில் டாஸ் வென்ற தென் ஆப்பிரிக்க அணியின் கேப்டன் மார்க்ரம் பந்துவீச்சை தேர்வு செய்தார்.

அதன்படி முதலில் பேட்டிங் செய்ய களமிறங்கிய இந்திய அணி தரப்பில் விராட் கோலி சிறப்பாக ஆடி ரன் குவித்தார். தென் ஆப்பிரிக்க பந்துவீச்சை திறம்பட சமாளித்த அவர் சதம் விளாசி அசத்தினார். இது ஒருநாள் கிரிக்கெட்டில் அவரது 52-வது சதமாக பதிவானது. தொடர்ந்து அதிரடியாக அவர் 135 ரன்களில் (120 பந்துகள்) ஆட்டமிழந்தார்.

இதன் மூலம் சர்வதேச கிரிக்கெட் வரலாற்றில் ஒரு வடிவிலான போட்டியில் ( 3 வடிவிலான போட்டிகள் = டெஸ்ட், ஒருநாள் மற்றும் டி20) அதிக சதம் விளாசிய வீரர் என்ற சச்சினின் வாழ்நாள் சாதனையை தகர்த்து புதிய சாதனை படைத்துள்ளார்.

இதற்கு முன்னர் சச்சின் தெண்டுல்கர் டெஸ்ட் கிரிக்கெட்டில் 51 சதங்கள் அடித்திருந்ததே ஒரு வடிவத்தில் ஒரு வீரர் அடித்த அதிகபட்ச சதங்களாக இருந்தது. தற்போது அதனை முந்தியுள்ள விராட் கோலி ஒருநாள் கிரிக்கெட்டில் 52 சதங்களுடன் புதிய வரலாறு படைத்துள்ளார்.

## ஐபிஎல் போட்டிகளில் இருந்து ரசல் ஓய்வு: ரசிகர்கள் அதிர்ச்சி

மும்பை, டிச.1:

ஐபிஎல் போட்டிகளில் இருந்து ஓய்வு பெறுவதாக ரசல் அறிவித்துள்ளார். இதனால் ரசிகர்கள் அதிர்ச்சியடைந்துள்ளனர் .

ஐபிஎல் தொடரில் கொல்கத்தா அணிக்காக விளையாடி வந்த ரசல் சமீபத்தில் அந்த அணியில் இருந்து விடுவிக்கப்பட்டார். இதனை தொடர்ந்து அவர் இந்த முடிவை எடுத்துள்ளார். கொல்கத்தா அணியின் முக்கிய வீராக இருந்த ரசல் அணியின் வெற்றிக்கு முக்கிய பங்காற்றியுள்ளார்.

ஐபிஎல் தொடரில் ரசல்140 போட்டிகளில் விளையாடி, 174.18 ஸ்ட்ரைக் ரேட்டில் 2. 651 ரன்கள் எடுத்துள்ளார். மேலும் 9.51 எகானமியில் 123 விக்கெட்டுகளை வீழ்த்தியுள்ளார்.

கொல்கத்தா அணியை தவிர வேறு அணியில் விளையாட விருப்பம் இல்லை எனவும், அடுத்த சீசனில் கொல்கத்தா அணியின் 'பவர் கோச்' ஆக செயல்படுவேன் என அவர் தெரிவித்துள்ளார் .

# டிட்வா புயல்: இலங்கையில் உயிரிழப்பு 190 - ஐ தாண்டியது- 9லட்சம் பேர் பாதிப்பு

**கொழும்பு, டிச.1:**

டிட்வா புயலால் இலங்கை முழுவதும் 9.68 லட்சத்துக்கும் மேற்பட்டோர் பாதிக்கப்பட்டுள்ளனர்.

தென்மேற்கு வங்கக் கடல் மற்றும் அதையொட்டிய வட தமிழக - புதுவை கடற்பகுதிகளில் பகுதிகளில் நிலவும் 'டிட்வா' புயலால் இலங்கையில், 2,66,114 குடும்பங்களைச் சேர்ந்த 9,68,304 பேர் பேரிடரால் பாதிக்கப்பட்டுள்ளனர்.

இந்த நிலையில், மழை, வெள்ள பாதிப்புகள் குறித்து இலங்கை பேரிடர் மேலாண்மை மையம் வெளியிட்டுள்ள தரவுகளின்படி,

இலங்கையில் கடந்த வியாழக்கிழமை முதல் இன்றுவரை மழை, வெள்ள



பாதிப்புகளில் உயிரிழந்தோர் எண்ணிக்கை 193 ஆக உயர்ந்துள்ளது. 228 பேர் வெள்ளத்தில் மாயமாகி உள்ளனர். 1,094 முகாம்களில் 1.47 லட்சம் மக்கள் தஞ்சம் அடைந்துள்ளனர்.

கடுமையான சேதத்தைச் சந்தித்துள்ள இலங்கையுடன் மீட்புப்பணிகளில் இந்தியாவிலிருந்து அனுப்பப்பட்டுள்ள தேசிய பேரிடர் மீட்புப்படையும் இந்திய விமானப்படையும் கைகோத்துள்ளது. இலங்கையிலுள்ள இந்தியர்கள் உதவி தேவைப்பட்டால் +94 773727832 என்ற எண்ணில் தொடர்புகொள்ள அறிவுறுத்தப்பட்டிருக்கிறார்கள்.

இதனிடையே டிட்வா புயல் காரணமாக கனமழை, நிலச்சரிவு மற்றும் வெள்ளத்தால் ஏற்பட்ட பேரழிவுகளை சமாளிக்க இலங்கையில் அவசர நிலையைப் பிரகடனப்படுத்துவதாக அந்நாட்டின் அதிபர் அநுர குமார திசாநாயக்க அறிவித்தார்.

## சீன நிதியுதவியுடன் பாலஸ்தீனத்தில் கட்டுமானப் பணிகள் நிறைவு

பாலஸ்தீன மேற்குக் கரை ரமல்லா நகரில், சீன நிதியுதவியுடன் கட்டப்பட்ட சீன-பாலஸ்தீன நட்புறவு சதுக்கம் (11 கி.மீ.) சாலையை பாலஸ்தீன, சீன அதிகாரிகள் திறந்து வைத்தனர்.

பாலஸ்தீனத்தின் வளர்ச்சியை வலுப்படுத்த, சீனாவின் நவீனமயமாக்கல் எவ்வாறு உதவுகிறது என்பதற்கு இது ஒரு சிறந்த எடுத்துக்காட்டு. பாலஸ்தீன பிரதமர் முஸ்தஃபா, பாலஸ்தீன மக்களுக்கும், பல்வேறு துறைகளில் உள்கட்டமைப்பு மற்றும் பிற வசதிகளை மேம்படுத்துவதற்கும் சீனா ஆதரவளித்து வருகிறது என குறிப்பிட்டுள்ளார்.

## மத்திய கிழக்கில் மீண்டும் போரைத் தூண்டும் இஸ்ரேல்

இஸ்ரேல் ராணுவம் தொடர்ந்து லெபனான், சிரியாவின் எல்லைகளுக்குள் புகுந்து தாக்குதல் நடத்தி வருகிறது. சிரியாவின் கிராமத்தின் மீது தாக்குதல் நடத்தி 13 பேரை படுகொலை செய்துள்ளது.

இத்தாக்குதலை போர்க் குற்றம் என சிரிய வெளியுறவுத்துறை அமைச்சகம் கண்டித்ததுடன், மத்திய கிழக்குப் பகுதியில் மீண்டும் ஒரு போரைத் தூண்ட இஸ்ரேல் திட்டமிடுகிறது என குற்றம் சாட்டியுள்ளது. ஹிஸ்புல்லா அமைப்பின் தளபதியை படுகொலை செய்ததற்கு இஸ்ரேலுக்கு தக்க நேரத்தில் பதிலடி கொடுக்கப்படும் எனவும் ஹிஸ்புல்லா அமைப்பு எச்சரித்துள்ளது.

## டிரம்ப் - மதுரோ தொலைபேசி உரையாடல்

அமெரிக்க ஜனாதிபதி டிரம்ப் வெனிசுலாவில் ஆட்சியை கவிழ்க்க திட்டமிட்டு வருகிறார். இதற்காக கரீபியன் கடல்பகுதியில் போதைப்பொருள் கடத்தல் கும்பலை கட்டுப்படுத்துவதாகக் கூறி கடற்படை மூலம் தாக்குதல் நடத்தி போர்ப் பதற்றத்தை ஏற்படுத்தி வருகிறார்.

மதுரோ அமைதிப் பேச்சுவார்த்தையை முன்னெடுக்க தொடர்ந்து வலியுறுத்தி வரும் நிலையில் அவருடன் டிரம்ப் தொலைபேசியில் உரையாடியதாக தி நியூயார்க் டைம்ஸ் நாளிதழ் செய்தி வெளியிட்டுள்ளது. இரு தலைவர்களும் சந்திப்பதற்கான சாத்தியக்கூறுகள் இருப்பதாகவும் கூறப்படுகிறது.

## போர் நிறுத்தத்தை தாமதப்படுத்தும் ஐரோப்பிய ஒன்றியம்

உக்ரைன்- ரஷ்யா போரை முடிவுக்குக் கொண்டு வருவதற்கான ரஷ்யா மற்றும் அமெரிக்காவின் முயற்சிகளை ஐரோப்பிய ஒன்றியம் (EU) வேண்டுமென்றே தாமதப்படுத்துகிறது.

அனைவரும் அமைதிக்காக முயற்சிக்கும் வேளையில், ஐரோப்பிய ஒன்றியம் இன்னும் போருக்கான திட்டங்களைத் தீட்டி வருகிறது என்று ஹங்கேரி பிரதமர் விக்டோர் ஒப்ராபன் குற்றம் சாட்டியுள்ளார். போரை முடிவுக்கு கொண்டு வர சமீபத்தில் ஒரு வரைவு ஒப்பந்தம் கொண்டு வரப்பட்டுள்ள நிலையில் இந்த குற்றச்சாட்டு எழுந்துள்ளது குறிப்பிடத்தக்கது.

## வங்கதேச முன்னாள் பிரதமர் கலீதா ஜியா கவலைக்கிடம்

வங்கதேச முன்னாள் பிரதமரான கலீதா ஜியா உடல்நலக் குறைபாட்டால் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு தீவிர சிகிச்சைப் பிரிவில் (ICU) சிகிச்சை பெற்று வருகிறார். அவரது நிலை தொடர்ந்து மோசமடைந்து வருகிறது என மருத்துவர்கள் தெரிவித்துள்ளதாக அவரது வங்கதேச தேசியவாதக் கட்சியின் (பிஎன்பி) தலைவர் மிர்சா ஃபக்ருல் ஆலம்ஜிர் தெரிவித்துள்ளார்.

80 வயதான அவர் நுரையீரல் தொற்று அறிகுறிகளுடன் நவம்பர் 23 அன்று மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டார்.

## 'காசாவில் இடிந்த கட்டிடங்களில் 10,000+ உடல்கள்...' - உலுக்கும் மீட்பு அனுபவம்

**காசா, டிச.1:**

இஸ்ரேல்படைகளின்பல்வேறு உக்கிரமான தாக்குதல்களினால் காசாவில் இடிந்து விழுந்த கட்டிட இடிபாடுகளில் 10,000-க்கும் அதிகமான உடல்கள் சிக்கியிருக்கின்றன என்றும், அவற்றை மீட்பது சாதாரணக் காரியமல்ல என்றும் காசாவின் குடிமைப் பணியாளர்கள் அளித்துள்ள பேட்டி ஒன்றில் தெரிவித்துள்ளனர்.

காசா நகரின் கிழக்குப் பகுதியான அல்-சாஹா அருகே செப்டம்பர் 17 அன்று நடந்த பணிதான் நூஹ் அல்-ஷக்னோபிக்கு அதிகம் துன்பம் தருகிறது. இஸ்ரேல் படைகள் ஒரு வீட்டை குண்டுவீசி, ஒரே குடும்பத்தைச் சேர்ந்த 30-க்கும் மேற்பட்டோரை கொன்று குவித்தது. அவர்களில் பெரும்பாலோரின் உடல்கள் இடிபாடுகளுக்குள் சிக்கியிருந்தன.

அல்-ஷக்னோபியின் குழு இரண்டு சிறுமிகளின் உடல்களை வெளியே எடுத்ததும் தொடர்ந்து தோண்டினர்; அவர்கள் இடிந்து விழுந்த தரைத் தளங்களின் கீழ் ஊர்ந்து சென்று உடல்களை மீட்க, யாரேனும் உயிருடன் இருந்தால் அவர்களைக் காப்பாற்றவும் கடும் முயற்சியில் ஈடுபட்டு வருகின்றனர்.

நூஹ் அல் ஷக்னோபி 'இன்டெர்செப்ட்' ஊடகத்திற்குக் கூறும்போது, "யாரேனும் உயிருடன் இருப்பதாக நம்பிக்கை இருந்தால்தான் கீழே செல்வோம், இல்லையெனில் மேலிருந்து கீழ் நோக்கித் தோண்டுவோம். அதன்பிறகு நாங்கள் கண்டது பயங்கரமானதொரு கனவை விடவும் கொடூரமான நிஜம்" என்றார்.

இடிபாடுகளுக்குள் 12 மீட்டர் அவர்கள் நடந்தனர். இடிபாடுகள் நெடுக உடைந்த கால்கள், கைகள், தாயின் உடல் அதை இறுக அணைத்து இறந்துபோன குழந்தை என்று உடல்கள் அருகே குடிமைப் பணியாளர்கள் ஊர்ந்து சென்று மீட்புப் பணியில் ஈடுபட்டு வருகின்றனர்.

இந்த அனுபவம் குண்டுவீச்சுத் தாக்குதலின் தாக்கத்தை அவர்களுக்கு உணர்த்தியது. இடிபாடுகளின் ஆழத்திலிருந்து ஒரு சிறுமி 'நான் இங்கே... நான் இங்கே' என்று ஈனமாக முனகுவதும் அவர்களுக்குக் கேட்டது. அந்தச் சிறுமியைக் காப்பாற்றினர்.

இரண்டு ஆண்டுகள் நீடித்த தாக்குதல்களுக்குப் பிறகு, காசா குடிமைப் பாதுகாப்பு படையில் சுமார் 900 பணியாளர்கள் மட்டுமே உள்ளனர்; அதன் செயல்திறன் 90% குறைந்துவிட்டதாகத் தெரிவித்தனர். கனரக இயந்திரங்கள் இல்லாத சூழலில், அவர்கள் சுத்திகள், கோடரிகள், கரணைகள் போன்ற எளிய கருவிகளையே பயன்படுத்துகின்றனர். ஓர் உடலை மீட்பதற்கே பல நாட்கள் ஆகிறது என்கின்றனர்.

இடிபாடுகளுக்கு இடையில் 10,000-க்கும் அதிகமான உடல்கள் கிடக்கலாம் என்று அவர்கள் கூறுகின்றனர். அவர்களை இந்த வேதனையான பணியில் ஊக்கப்படுத்துவது என்னவெனில், இடிபாடுகளிலிருந்து ஒரு குரல், ஓர் உயிரின் சத்தம் கேட்டால் போதும் அவரைக் காப்பாற்ற இவர்கள் தங்கள் உயிரைப் பணயம் வைப்பதே.

24 வயதான அல்-ஷக்னோபி ஏற்கெனவே 7 ஆண்டுகளாக காசா குடிமைப் பாதுகாப்பில் பணியாற்றுகிறார். அவரின் வீடு தல்அல்-ஹவ்வா பகுதியில் அழிக்கப்பட்டு, குடும்பம் தெற்கில் இடம்பெயர்ந்து வாழ்கிறது.

போர் நிறுத்தம் வந்தால் மக்கள் மூச்சு விடலாம் என்கிறார் அல்-ஷக்னோபி, ஆனால், இவர்களைப் போன்ற பணியாளர்களுக்கோ போர் முடிந்த பிறகுதான் போரே தொடங்குகிறது. அதாவது உடல்களை மீட்பது.

போரில் இறந்த தன் அத்தையின் உடலும் இந்த 10,000 உடல்களில் ஒன்றாக இருக்கலாம் என்கிறார் ஷக்னோபி. இஸ்ரேல் தாக்குதலில் தீவிரமாக பாதிக்கப்பட்ட ஷுஜாயா, ரஃபா உட்பட பல பகுதிகள் இன்னும் அணுக முடியாதவையாக உள்ளன.

இஸ்ரேலி படைகள் அப்பகுதிகளை 'யெல்லோ ஸோன்' என்று கூறி மீட்புக்குழுவுக்கு அனுமதி மறுத்துள்ளது.

"இந்த இடைக்கால போர் நிறுத்தத்தின்போது சில உடல்களை மட்டுமே மீட்டோம்," என்றார் அல்-ஷக்னோபி.

## வடகொரிய விமானப்படையின் 80-வது ஆண்டு விழா - வான்சாகச நிகழ்ச்சியை கண்டுகளித்த அதிபர் கிம்



**பியாங்யாங், டிச.1:**

வடகொரிய விமானப்படையின் 80-வது ஆண்டு விழா பிரம்மாண்டமான முறையில் இன்று கொண்டாடப்பட்டது. இந்த விழாவின்போது அந்நாட்டின் அணுஆயுத போர் திறனை வெளிக்காட்டும் வகையில் அணிவகுப்பு நிகழ்ச்சிகள் நடத்தப்பட்டது. தொடர்ந்து விமானப்படையின் வான்சாகச நிகழ்ச்சி நடைபெற்றது.

இந்த விழாவில் கலந்து கொள்வதற்காக வடகொரிய அதிபர் கிம், தனது மகளுடன் வருகை தந்தார். பின்னர் அவர்கள் வான்சாகச நிகழ்ச்சியை கண்டுகளித்தனர். வடகொரியாவின் அணுஆயுத பாதுகாப்பிற்கு விமானப்படை முக்கிய பங்காற்றுகிறது என்று தெரிவித்த அதிபர் கிம், அணுஆயுத போர் ஏற்பட்டால் அதனை எதிர்கொள்ளும் வகையில் விமானப்படைக்கு நவீன சக்திவாய்ந்த ஆயுதங்கள் வழங்கப்பட்டுள்ளதாக தெரிவித்துள்ளார்.

## சென்யார் புயல் காரணமாக இந்தோனேசியா தாய்லாந்தில் 557 பேர் உயிரிழப்பு



**ஜகார்த்தா, டிச.1:**

சென்யார் புயல் காரணமாக இந்தோனேசியாவில் 294 பேரும், தாய்லாந்தில் 263 பேரும் உயிரிழந்துள்ளனர். இரு நாடுகளிலும் இதுவரை 557 பேர் உயிரிழந்து உள்ளனர்.

மலாக்கா ஜலசந்தி பகுதிகளில் நிலவிய காற்றழுத்த தாழ்வு மண்டலம் சென்யார் புயலாக வலுப்பெற்று கடந்த 26-ம் தேதி இந்தோனேசியாவின் வடக்கு சுமத்ரா பகுதியில் கரையைக் கடந்தது. இதன்காரணமாக அங்கு கனமழை பெய்து, பல்வேறு இடங்களில் நிலச்சரிவு ஏற்பட்டது.

குறிப்பாக வடக்கு சுமத்ரா, மேற்கு சுமத்ரா, அச்சே மாகாணங்களில் இதுவரை 294 பேர் உயிரிழந்து உள்ளனர். 620 பேர் படுகாயம் அடைந்துள்ளனர். காட்டாற்று வெள்ளம், நிலச்சரிவு ஏற்பட்ட பகுதிகளில் 290 பேரை காணவில்லை. அவர்களை தேடும் பணி தீவிரப்படுத்தப் பட்டு உள்ளது. சுமார் 29,000 பேர் நிவாரண முகாம்களில் தங்க வைக்கப்பட்டு உள்ளனர். சுமார் 3.11 பில்லியன் டாலர் அளவுக்கு பொருட்சேதம் ஏற்பட்டிருக்கிறது. புயலால் பாதிக்கப்பட்ட பகுதிகளில் இயல்பு நிலை திரும்ப பல வாரங்கள் ஆகும் என்று அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

புயல் காரணமாக தாய்லாந்து நாட்டின் 14 மாகாணங்களில் பெரும் பாதிப்புகள் ஏற்பட்டு உள்ளன. அந்த நாட்டில் இதுவரை 263 பேர் உயிரிழந்துள்ளனர். மலேசியாவின் 10 மாகாணங்களில் சென்யார் புயலால் பாதிப்புகள் ஏற்பட்டு உள்ளன. அந்த நாட்டில் 21,000 பேர் பாதுகாப்பான இடங்களில் தஞ்சமடைந்துள்ளனர். 2 பேர் உயிரிழந்து உள்ளனர். சென்யார் புயலால் இந்தோனேசியா, தாய்லாந்து நாடுகளில் மட்டும் 557 பேர் உயிரிழந்துள்ளனர்.

# கருங்கடலில் பயணித்து கொண்டிருந்த ரஷிய எண்ணைய் கப்பல் மீது உக்ரைன் டிரோன் தாக்குதல்

**கோசேலி, டிச.1:**

கருங்கடலில் பயணித்து கொண்டிருந்த ரஷியாவின் எண்ணை கப்பலான விராட் மீதும் தாக்குதல் நடத்தப்பட்டது.

ரஷியா உக்ரைன் இடையேயான போர் 3 ஆண்டுகளுக்கும் மேலாக நீடித்து வருகிறது. இந்தப் போரை முடிவுக்கு கொண்டு வர அமெரிக்க அதிபர் டிரம்ப் முயற்சி செய்து வருகிறார். ஆனால் இதுவரை சுமூகமான முடிவு எட்டப்படவில்லை. இந்த நிலையில், ரஷிய எண்ணெய் கப்பல் மீது உக்ரைன் டிரோன் தாக்குதல் நடத்தியுள்ளது.



துருக்கியின் கோசேலி மாகாணத்தில் உள்ள கருங்கடல் பகுதியில், ரஷியாவைச் சேர்ந்த கைரோஸ் என்ற சரக்கு கப்பல் சென்று கொண்டிருந்தது. அந்தக் கப்பல் கருங்கடலில் போஸ்பரஸ் ஜலசந்தியில் நுழையும் இடத்திற்கு அருகில் சென்றபோது, அதன் மீது டிரோன் தாக்குதல் நடத்தப்பட்டது.இதில் அந்த கப்பல் தீப்பிடித்து எரிந்தது. உடனே மீட்புப்படையினர் விரைந்து சென்று, கப்பலில் சிக்கித் தவித்த 25 மாலுமிகளை பத்திரமாக மீட்டனர்.

இந்த தாக்குதல் நடந்த சில நேரத்திற்குப் பிறகு, கருங்கடலில் பயணித்து கொண்டிருந்த ரஷியாவின் எண்ணெய் கப்பலான விராட் மீதும் தாக்குதல் நடத்தப்பட்டது. அந்தக்கப்பல் மீது நீரில் செல்லக்கூடிய டிரோன் மூலம் தாக்குதல் நடத்தப்பட்டது. உடனே கப்பலில் இருந்த மாலுமிகள் தாக்குதல் குறித்து தகவலை அனுப்பினர்.

அந்த தகவலில்: "இது விராட். உதவி தேவை. டிரோன் தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது. மே டே, மே டே" என்று தெரிவிக்கப்பட்டது. தாக்குதலின் போது அந்தக் கப்பல் தீப்பிடித்து எரிந்தது. அக்கப்பலில் இருந்த 20 மாலுமிகள் பத்திரமாக மீட்கப்பட்டுள்ளனர்.

ரஷிய கப்பல்கள் மீதான டிரோன் தாக்குதலுக்கு உக்ரைன் பொறுப்பேற்றுள்ளது. இந்தக் கப்பல்களுக்கு பொருளாதார தடை விதிக்கப்பட்டுள்ளதாகவும், அது மீறப்பட்டதால் நீரில் செல்லக்கூடிய டிரோன் மூலம் தாக்கி அழித்ததாகவும் உக்ரைன் தெரிவித்துள்ளது.